தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது.

ரூ. 1-80

# ஆப்கானிஸ்தான்

அமலேந்து குஹா, எம்.ஏ., பிஎச்.டி.



# ஆப்கானிஸ்தான்

ஆசிரியர் :

டாக்டர் அமலேந்து குஹா M.A; Ph. D.

தமிழாக்கம் :

ஆர். சண்முகம்

குயிலன் பதிப்பகம்

82, பாண்டிபஜார் : : சென்னை-17

TAMIL
First Edition – 3000 Copies
June 1966.
AFGHANISTAN
Tamil Translation of 'Afghanistan'
By Amalendu Guha M. A., Ph. D.
Copyright: Author
Translator: R. Shanmugam
Price: Rs. 1-80

Published under the auspices of the Southern Languages Book Trust, Madras. The Trust is helped by the Government of India, the South Indian State Governments & Universities, and the Ford Foundation.

Third Programme - Tamil - Number Twenty Four

Translation right into Tamil for this edition is assigned to:
Kuyilan Pathippagam, Pondy Bazaar, Madras-17.

Printed at: Bharatham Press, Madras - 17.

# அணிந்துரை

தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியிடும் புதிய தொடர் நூல்களுக்கு அணிந்துரை எழுத் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். குறைந்த விலையில் சிறந்த புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் டிரஸ்ட் கடந்த பத்தாண்டுக் காலமாகத் தென்னக மொழிகளில் உயரிய புத்தகங்களை வெளியிட்டுப் பெரும் சேவை செய்து வருகின்றது. இதுகாறும் தமிழில் மட்டும் நூற்று நாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை டிரஸ்ட் வெளியிட்டுள்ளது போற்றத்தக்க முன்னேற்றமாகும்.

தனிப்பட்ட வெளியீட்டாளர்கள் யாரும், எந்நிலையிலும், சிறிதும் பாதிக்கப்படா வண்ணம் தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் வெளியீட்டு முறை அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். டிரஸ்ட் வெளியீடுகளில் பெரும்பாலானவை தனிப்பட்ட வெளியீட்டகங்களின் மூலமே வெளியிடப்படுகின்றன.

பிராந்திய மொழிகளில் பல்வேறு வகையான புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயமாகும். பள்ளிகள் அல்லது கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடப் புத்தகங்கள் ஒன்றிரண்டு வெளியிட உதவி புரிந்தால் மட்டும் போதாது. மாணவர்களும், மற்றவர்களும் அறிவுத் துறையில் துரித முன்னேற்றம் காணப் பல்வேறு துறை

களைப்பற்றி எழுதப்பெற்ற நூல்கள் நிறையத் தேவை. போதிய அளவு ஆங்கில அறிவு இல்லாதவர்கள்—நம் மொழிகளிலொன்றில் போதிய பயிற்சியுடையவர்களுக் கேற்ப பொருத்தமான நூல்களை தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. அறிவுத் துறைகளின் ஒவ்வொரு பகுதியின் அடிப்படைக் கோட்பாடுகளை நன்கு புரிந்து கொள்ளக்கூடிய முறையில் கல்லூரி மாணவர்கட்குப் பெரிதும் உதவும் வகையில், டிரஸ்டின் புத்தகங்கள் அமைந்துள்ளன. இந்நோக்கத்தின் அடிப்படையில் அனுபவ முதிர்ச்சி பெற்ற பேராசிரியர் களைக்கொண்டு புத்தகங்கள் எழுதப்படுகின்றன.

நம் நாட்டு மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதப் பட்ட நூல்களை மற்றொரு மொழியில் பெயர்த்து மக்க ளிடையே வழங்கும் பணியையும் டிரஸ்ட் குறிப்பிடத் தக்க அளவு செய்து வருகின்றது. கருத்துப் பரிமாற்றமே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை. பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வெளி வேற்றுமைகள் எவ்வளவோ இருந்த போதிலும் ஒரே இந்தியக் கலாச்சாரமாகப் பரிணமிக்க இந்த மொழிபெயர்ப்புகள் பெருந்துணை செய்வனவாகும். குறுகிய மனப்பான்மை கொண்ட தவறான எண்ணங் களைப் பெருமளவில் போக்கவும், உலகின் மற்ற பகுதிகளை நன்கு புரிந்து கொள்ளவும் வெளிநாட்டு மொழி பெயர்ப்பு நூல்கள் பயன்படுகின்றன. இத்தகைய வழி களில் இடையறாது பணியாற்றி வரும் டிரஸ்ட் மேன் மேலும் வளர ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அனைவரது கடமையாகும்.

**எம். பக்தவத்சலம்**

*முதலமைச்சர், சென்னை மாநிலம்.*

# பொருளடக்கம்


1. அமனுல்லாவின் கனவு! 1

2. ஆப்கானிய ஹிந்துக்கள் 18

3. ஆப்கானியரின் அக வாழ்க்கை 29

4. ஹிந்துக்குஷ் பிரதேசம் 43

5. தொழில் மயமான வட பகுதி 55

6. பாலைவனத்தினூடே? மஜார்—பால்க் 69

7. கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே ஆப்கானிஸ்தான் 86

8. ஆப்கானிய அரசியலும்— பாக்—ஆப்கானிய உறவுகளும் 103

9. காபூலுக்கு மறு பயணம் 116

10. ஆப்கானிஸ்தான் முன்னேக்கி விரைதல்— 131

அத்தியாயம் 1

# அமனுல்லாவின் கனவு!

உலக நாடுகள் பற்றி ஆராய்ச்சி நடத்தும் இந்தியப் பள்ளியில் 1959-ம் ஆண்டிலிருந்து '62 வரை நான் மேற்கொண்டிருந்த தனி ஆராய்ச்சிக் கல்வி காரணமாகவும், கடந்த எட்டாண்டுக் காலத்தில் ஆப்கானிஸ்தானத்திற்குப் பன்முறை சென்று வந்ததன் விளைவாகவுமே இந்த நூல் எழுதும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. 1957-ஆம் ஆண்டுஜூலை மாதம் எனது மாஸ்கோ பயணத்தின் இடைவழியில் காபூலில் இறங்கி ஒருநாள் தங்கியிருந்தது பசுமையாக என் நினைவில் இன்றுமிருக்கிறது. அப்பொழுது அந்த நகரத்திலேயே மேனாட்டுப் பாணியில் சிறப்பான முறையில் இயங்கி வந்த ஒரே ஒரு உணவு விடுதி 'ஹோட்டல் காபூல்' என்பது தான். அங்கு வசதிகளுக்குப் பஞ்சமில்லை; ஆனால் செலவுதான் அதிகம். ஆனால் இந்தியர்களாகிய நமக்குக் காபூல் கடை வீதியில் சொல்லப்படும் விலைகள் நம்ப இயலாத அளவு மலிவாக இருக்கிறது. அதற்குக் காரணமும் உண்டு. அங்கு அதிகாரப் பூர்வமான நாணயமாற்று விகிதம் நமது

ரூபாய் ஒன்றுக்கு 4. 20. ஆப்கானிய நாணயம் என்று இருக்க, தனிப்பட்ட முறையில் ஒரு இந்திய ரூபாய்க்கு 9 ஆப்கானிய நாணயம் என்று புழக்கத்திலிருக்கிறது. உள்ளூரில் உற்பத்தியாகும் பண்டங்களின் விலை மிக மிக மலிவாக இருப்பதானது, அந்நாட்டு மக்களின் வறுமையைப் பறை சாற்றுவதாக உள்ளது.

காபூல் கடை வீதிகளிலே கூட்டங் கூட்டமாக ஆப்கானிய மக்களைச் சந்திக்க முடிந்தது. அவர்கள் அழுக்குப் படிந்த மட்டமான உடையணிந்திருந்த தோடு, அவசர மேதுமின்றி மிக மெதுவாக ஊர் வதுபோல நடை போட்டுக் கொண்டிருந்தார்கள். தெரு மருங்கில் காணப்பட்ட உணவு விடுதிகளில், வெளிப் படையாகத் தெரியும் வகையில் வைக்கப்பட்டிருந்த தட்டுக்களில் சிக்—கபாப், புலவு, பிரியாணி போன்ற உணவுப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஈக்கள் மொய்த்துக் கிடந்தன. உணவு விடுதிகளின் கிராமபோன்கள் இந்துஸ்தானி திரைப்பட இசைத் தட்டுகளை இடைவிடாது இசைத்துக் காதுகளைத் துளைத்துக்கொண்டிருந்தன. உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு உதவும் கொழுப்புப் பொருள்களின் மணம் காற்றில் நிறைந்திருந்தது. கடைவீதியில் நான் பவனி வந்தது சுவையான அனுபவமாக இருந்தது. நான் சில பண்டங்களை விலை பேசி வாங்கிய காட்சி ரசிக்கத் தக்கதா யிருந்தது. ஏதாவது ஒரு பொருளை வாங்க எண்ணியதும் கடைக்காரன் சொல்வதில் பாதி விலைக்கு அதைக் கேட்பேன். கடைக்காரன் யோசிப் பான். பின்னர் கொஞ்சம் விலையை உயர்த்திக் கேட் பேன். அவ்வளவுதான் 'பேரம்' முடிந்துவிடும். கடைக் காரன் "பரவாயில்லை" என்று திருப்தியுடன் கூறியவாறு பண்டத்தை என்னிடம் தள்ளி விடுவான்.

அந்த முதல் நாளிலேயே ஒரு படித்த ஆப்கானிய இளைஞன் எனக்கு அறிமுகமானான். ஊதியம் ஏதும் எதிர்பார்க்காமல் வழிகாட்டியாக உதவ முன்வந்தான். காபூல் கண்காட்சி நிலையத்திற்கும், பாபர் மசூதிக்கும் என்னை அழைத்துச் சென்று காண்பிக்க விரும்புவதாக என்னிடம் தெரிவித்தான். அவன் என்னுடன் கொதிக்கும் வெய்யிலில் பல மைல் தூரம் நடந்து வந்தான். நான் விரும்பியும் அவன் பணம் ஏதும் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டதால், அவனை நோக்கி மரியாதையுடன் "எனக்காக இவ்வளவு சிரமப்பட வேண்டாம்" என்று வேண்டிக் கொண்டேன். ஆனால் அவனோ 'பரவாயில்லை' என்று சொல்லிவிட்டு என்னுடன் தொடர்ந்து வந்தான்.

இத்தகைய பண்பாட்டுணர்வுடன் கூடிய உபசாரத்தை 1960-ம் ஆண்டில் ஒரு வண்டிக்காரனிடமும் பெற்றது என் நினைவிலிருக்கிறது. அந்தச் சமயத்தில் இந்துகுஷ் வழியாக, இரண்டு நாட்கள், அவனுடைய வண்டியில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அந்த நாளில் காபூலுக்கும் குவந்தஷுக்குமிடையே பிரயாணிகள் பஸ் போக்குவரத்துக் கிடையாது. ஆகவே எனது ஆப்கானிய நண்பரான துனிச்சந்த் வைத் அந்த வண்டிப் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த நண்பர் ஓர் ஆப்கானிய ஹிந்து. வண்டிக்காரர் துனிச்சந்த் வைத்தின் ஊர்க்காரர் என்று தெரிந்தது. முழுப் பிரயாணத்துக்கும் 70 ஆப்கானிய ரூபாய்கள் என்று வாடகை பேசப்பட்டிருந்தது. உள்ளூர் மொழி ஏதும் எனக்குத் தெரியாததால் என்னை நன்கு கவனித்து உதவிகரமாக இருக்குமாறு துனிச்சந்த் வைத் வண்டிக்காரனிடம் சொல்லியிருந்தார். வண்டிக்காரர் உண்மையிலேயே எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தார். நன்கு கவனித்துக்கொண்டார். அந்த இரண்டு நாட்களிலும்

சாப்பிடவும், தேநீர் அருந்தவும் சாலையோரம் வண்டியை நிறுத்திவிட்டுக் கீழிறங்குவோம். உணவு விடுதிகளுக்குச் சென்றுவிட்டால் வண்டிக்காரரர் நான் பணம் செலவு செய்ய அனுமதிப்பதே இல்லை. "நீங்கள் எங்கள் ஊர்க் காரின் விருந்தாளி; ஆகவே என்னுடைய விருந்தாளி யாகவும் ஆகிறீர்கள்" என்று அவர் வாதாடுவார். அவரை மீறிப் பணம் கொடுக்க முயன்றால் 'பரவாயில்லை' என்ற வழக்கமான ஆப்கானியர்களின் பல்லவியைக் கூறி மறுத்துவிடுவார்.

ஹோட்டல் காபூலின் வாசற்படிகளில் நின்று கொண்டு, நடமாடும் மக்கள் கூட்டத்தைக் காணுந் தோறும் அந்த ஊர் பரபரப்பு ஏதுமின்றி கவலையற்று அலட்சியமாக இருப்பது போலத் தோற்றமளிக்கும். அந்தக் காட்சி செயலற்றுக் கிடக்கும் ஒரு நோயாளியின் உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாக எனக்குத் தோன்றும். வெளியுலகத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளக்கூட விரும்பாத ஒரு மந்தப் போக்கு அவர் களிடம் பிரதி பலித்தது எனலாம். வழி வழி வந்த சில பழக்க வழக்கங்களைத் தவிர வேறெதுவும் அவர்களுக்குப் பெரிதாகப் படுவதில்லை. கவலையோ, மகிழ்ச்சியோ, எது வாக இருந்தாலும் சரி 'பரவாயில்லை' (Paraonest) என்று சொல்லி உணர்ச்சிகளைக் கொட்டி மனநிறைவு கொள்வது ஆப்கானிய மக்களின் இயல்பாக இருந்தது.

ஆப்கானிஸ்தானத்தில் நீண்ட நாட்கள் தங்கும் பொருட்டு பின்னாட்களில் நான் பயணங்கள் மேற்கொண்டபோது, நாட்டை முன்னேற்றும் பல முயற்சிகள் அங்கு தீவிரமாக செயல்பட்டுக் கொண் டிருந்ததைக் காணமுடிந்தது. மக்கள் தொகைக் கணக்கு அதுவரை அங்கு எடுக்கப்படவில்லை. ரயில் போக்கு வரத்துக்கான வழி வகைகள்கூட அப்போது செய்யப்

பட்டிருக்கவில்லை. ஆனால் மோட்டார் கார்களின் மூலம் போக்குவரத்து நடைபெறுவது மிகுதியாகிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப நல்ல சாலை வசதிகளும் பெருகி வருகின்றது. ஆப்கானிஸ்தானில் இப்போது சர்வதேச விமான நிலையம் ஒன்று இருக்கின்றது. இது குவந்தஹார் என்னுமிடத்தில் உள்ளது. மஷாரி ஷாரிப்பிலும், பாக்ராமிலும் இரண்டு இராணுவ விமான நிலையங்கள் உள்ளன. மேலும் உள்நாட்டு உபயோகத்திற்கென சுமார் எட்டு விமான நிலையங்களும், அவையன்றி அவசர கால உபயோகத்துக்கென பத்து நிலையங்களும் இருக்கின்றன. குவந்தகரிலுள்ள சிறந்த விமான நிலையம், ஐரோப்பாவிலிருந்து கீழை நாடுகளுக்குப் பறக்கும் விமானங்களின் முக்கிய இடைவழி நிலையமாகிவிடும் என்று ஆப்கானிஸ்தான் நம்புகிறது. ஏனெனில் அங்கிருந்து கராச்சிக்கு வேறு சில மார்க்கங்களைவிட 600 மைல்கள் வரை தொலைவு குறைகிறது. இவையெல்லாம் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றமேயாகும். என்றாலும் இவை எத்தனையோ ஆண்டுகட்கு முன்னரே அதாவது 1919-ம் ஆண்டிலேயே அமனுல்லாவின் கனவுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

1747-ல் அஹமத்ஷா துரானியால் நிறுவப்பட்ட ஆப்கானிய ராஜ்யம், பின்னர் 1879-ல் அமீர் ஒருவன் பிரிட்டிஷாருடன் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தினால் தனது சுதந்திரத்தை இழந்தது. ஆனால் பின்னர் இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட போட்டியும் இதன் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்ட இடை நாட்டுத் தேவையும் ஆப்கானிஸ்தான் தன் சுயாட்சியை மீட்டுக் கொள்ளப் பயன்பட்டன. ஆகவே தனிநிலைக் கொள்கையைப் பின்பற்றி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தான் மீண்டும் தனது சுதந்திரத்தைப்

பெற்றது. இந்தத் தனிநிலைக் கொள்கை துரதிருஷ்ட வசமாக முன்றேற்ற நாடுகளின் தொடர்பை கூடிய வரை குறைத்துவிட்டது. மேலும் அயல்நாட்டு முதலீடு களுக்கும் அந்தப் போக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விட்டது.

அமீர் அப்துர் ரஹ்மான் அயல்நாட்டு வணிகர் களுக்கு நாட்டில் இடம்தரும் கொள்கைக்கு முற்றிலும் விரோதமாயிருந்தார். அவர் அயல்நாட்டு வணிகக் குழுக் (கம்பெனி)களைச் சந்தேகித்தார். அவர்களை நுழைய விட்டால் நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து நேரக் கூடும் என்று அஞ்சினார். அவர் 1901-ல் வெளியிட்ட தம்முடைய சுயசரிதையில், இருப்புப்பாதை, தொலை பேசி முதலிய நவீன வசதிகளை நாட்டில் அமைப்பது ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும் என்று தமது வாரிசுகளை எச்சரித்திருக்கிறார். அத்தகைய நவீன சாத னங்கள் அந்நியர் தலையீட்டுக்கு வழி வகுக்கும், என்ற தமது அச்சத்தை அதில் விளக்கியிருக்கிறார்.

நாட்டில் தொழில் வளம் பெருகக் கூடாது என்பது அவர் நோக்கமல்ல. தொழிலமைப்பிற்கு அவர் விரோதியு மல்ல. நாட்டின் முற்காலத் தொழிற்சாலைகள் பல வற்றை நிர்மாணித்தவர் அவர்தான் என்றே சொல்ல லாம். அதாவது வெடி உற்பத்தி சாலை ஒன்றும் பொறி யியல் தங்கச்சாலை யொன்றும், தோல் தொழிற்சாலை யொன்றும், சிறியதொரு சோப்பு—மெழுகுவர்த்தித் தொழிற்சாலையும் அவருடைய முயற்சியினுல் தோன்றி யவையே! அந்நிய நாடுகளின் உதவியினுல் நவீன போக்குவரத்துச் சாதனங்களை வளரவிடு முன்பு ஆப்கா னிய நாட்டின் சொந்த வலிமையைத் திரட்டிக்கொள்ள வேண்டுமென்பதுதான் அவருடைய கொள்கை. அவரது

மகன் ஹபிபுல்லா (1901—1919)வும் இதே கொள்கையைத்தான் தொடர்ந்து பின்பற்றினர்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஆப்கானிஸ்தானை தட்டி யெழுப்பி உணர்வு பெறச் செய்தவர் அமனுல்லா (1819—1929) ஆவார். அவர் ஆப்கானிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் 1919 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாட்டில் முடியரசை நிலை நிறுத்தினர். சுதந்திரத்திற்குப் பின்னர் அவர் செய்த முதல் சீர்திருத்தம் நிலத் தீர்வையையும் உயிரின வரியையும் பணமாக வசூலிக்கும் முறையேயாகும். முன்னர் தீர்வைகள் பண்டங்கள் மூலம் ஈடுகட்டப்பட்டன. விவசாயிகள் தங்கள் வரிகளைப் பணமாக அல்லாமல் தானியமாகவும், பிற பண்டங்களாகவும் செலுத்தி வந்தனர். வரிகளைப் பணமாக வசூல் செய்யும் முறை பொருளாதார சிக்கன முறையின் முன்னேற்றத்திற்கு அடிகோலியது.

சொந்த நலத்தின் சொத்துக்களுக்கு அங்கீகாரம் வழங்க அவர்செய்த ஏற்பாடு அடுத்துச் செய்யப்பட்ட மிக முக்கியமான சீர்திருத்தமாகும். கான் மரபினர்கள் அனுபவித்துவந்த உதவிப் பண தீர்வை விலக்குச் சகாயம், அரசினருக்காக வரிவசூல் செய்யும் உரிமை முதலிய சலுகைகள் நிறுத்தப்பட்டன. பண்ட உருவத்தில் வரிவசூலிக்கும் பழைய முறை தள்ளுபடியானது மட்டுமின்றி, வரி வசூலுக்கென்று ஒரு கணிதத்துறை அமைக்கப்பட்டது. அரியதொரு நிர்வாகச் சீர்திருத்தமாக அமைந்தது. அதன் காரணமாக வரிவசூல் பணத்தில் ஒரு பகுதி கொள்ளை போய்க் கொண்டிருந்த இரட்டையாட்சி முறை அடிபட்டு மறைந்துவிட்டது. இடைத் தரகுப் பேர் வழிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டனர். அமனுல்லாவின் மற்றொரு முக்கிய சாதனை வர்த்தகத்

துறையில் நவீன முறைகளைப் புகுத்தியதாகும். 'ஷர்க் கதா' என்று கூறப்படும் கூட்டுவணிக கம்பெனிகள் அரசாங்க ஆதரவின் கீழ் நிறுவப்பட்டன.

அமனுல்லாவின் சீர்திருத்த முயற்சிகள் பெரும்பாலும் பொருளாதாரத் துறையைச் சார்ந்திருந்தன. என்றாலும் நாட்டின் பொது மராமத்து போன்ற துறைகளிலும் அவர் கவனம் செல்லாமலில்லை. அவர் காலத்தில் நாடெங்கும் பெருமளவில் சாலைகள் அமைக்கப்பட்டன. இந்திய—ஆப்கன் தொலைபேசி அமைப்பொன்று 1922-ம் ஆண்டில் நிறுவப்பெற்றது. தொலைபேசி சாதனங்கள் எல்லா முக்கிய நகரங்களையும் இணைக்கும்வண்ணம் அமைக்கப்பட்டது. 1928-ல் ஆப்கானிஸ்தான் உலக நாடுகளின் கேபிள் யூனியனிலும், உலக தபால் போக்குவரத்து ஸ்தாபனத்திலும் தன்னை இணைத்துக்கொண்டது. வானொலி ஒலிபரப்புச் சாதனம் 1925-ம் ஆண்டில் செயல்படத் துவங்கியது. 1929-ம் ஆண்டில் நாட்டின் சகல முக்கிய நகரங்களுடனும் கம்பியில்லாத் தந்தி மூலம் காபூல் இணைக்கப்பட்டு விட்டது.

சுதந்திரத்திற்கு முன்பு நாட்டில் கல்வி கற்பதற்கான வசதி மிகக் குறைவாகவே இருந்தது. பெயரளவில் அரேபிய உயர்நிலைப்பள்ளி (1904-ல் நிறுவப்பட்டது), மற்றும் ஒரு இராணுவப் பள்ளி, ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆகியவையும் ஒரு சில தொடக்கப்பள்ளிகளுமே இயங்கி வந்தன.

அமனுல்லா ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகள் மூன்றை புதிதாக நிறுவினார். பெண்கள் கல்விக்கூட மொன்றை முதன் முதலாக அமைத்தார். உயர்கல்வி பெற வேண்டி ஏராளமான மாணவர்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பப்

பட்டனர். நாட்டின் அபிவிருத்திக்குத் திட்டங்கள் அமைக்க இந்தியாவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டனர். அயல்நாட்டு தொழில் நுட்ப உதவி கொண்டு மின்விசை, தீப்பெட்டிகள், சிமிட்டிச் சாயங்கள் முதலியவற்றின் உற்பத்திக்காக சிறு சிறு தொழிற்கூடங்கள் துவக்கப்பெற்றன. பஞ்சு ஆலைகளுக்குத் தேவையான உபகரணங்கள், சலவைக் கருவிகள், அச்சு யந்திரங்கள், சர்க்கரை ஆலைக்கான யந்திரங்கள் போன்றவை பெருமளவுக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

அமனுல்லா உற்சாகமாக நாட்டின் உயர்வுக்காக ஏக காலத்தில் மேற்கண்ட நவீன முயற்சிகள் காரணமாக தாங்க இயலாத அளவு செலவு ஏறியது. பெருமளவில் பணம் திரட்டியாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஆகவே அரசாங்கத்தின் செலவுப் பளுவெல்லாம் விவசாயிகள் போன்றோர்மீது சரிந்து விழுந்தது. அதிகப்படியான வரி விதிப்பு அவர்கள் குரல்வளையை நெருக்கியது. சான்றாக ஆட்டு வரி ஐந்துமடங்காக உயர்ந்தது. வரிச் சுமையினால் அவதியுற்று பொறுமையிழந்து நின்ற மக்கள் அமனுல்லாவின் சமூக சீர்திருத்த முயற்சிகளைக் கண்டு எரிச்சலடைந்தனர். பெண்கள் முக்காடு (பர்தா) முறையை அகற்றிவிட்டு, ஐரோப்பிய முறையில் ஆடை அணிய வேண்டும் என்று செய்யப்பட்ட ஏற்பாடு மக்களைக் கொதிப்படையச் செய்துவிட்டது. பயங்கரக் கலவரங்கள் மூண்டன. குழப்பம் உச்ச நிலையை அடைந்த சமயம் பார்த்து பாச்சா-இ-சேக்கோ என்ற ஒரு கொள்ளைக்காரன் காபூலை (1929)க் கைப்பற்றிக் கொண்டான்.

தம்முடைய முயற்சிகள் படுதோல்வி கண்டதோடு, தம்முடைய பதவிக்கு ஆபத்து வந்துவிட்டதை உணர்ந்த அமனுல்லா, தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும்

நோக்கத்தில் அவசர அவசரமாக (7—1—1929) ஓர் அரசாங்கப் பிரகடனத்தைத் வெளியிட்டார். அதன் மூலம் தம்முடைய எல்லா சீர்திருத்த சட்டங்களையும் வாபஸ் பெற்றுக் கொண்டார். அதன்படி துருக்கிக்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டிருந்த ஆப்கானியப் பெண்கள் திரும்ப அழைக்கப்பட்டனர்.

மாதர் சங்கங்கள் கலைக்கப்பட்டன. ஐரோப்பிய பாணியில் ஆடை அணியும் முறைக்குச் சீட்டுக் கிழிக்கப் பட்டது. இராணுவ வீரர்கள் பீர்களை (Pirs)ப் பின்பற்றலாம் என அனுமதி தரப்பட்டது.

ஆனால் அமனுல்லாவின் முயற்சி காலங் கடந்ததாகி விட்டது. எதிர்பார்த்த பலன் விளையவில்லை. நிலைமை மேலும் குழப்பமடைந்தது. வேறு வழியின்றி அமனுல்லா ஆப்கானிஸ்தானத்தை விட்டுத் தப்பியோட நேர்ந்தது.

'பாச்சா'வின் கீழ் நடைபெற்ற பத்து மாதப் பயங்கர ஆட்சியில் அருமையாகத் திட்டமிட்ட செயல்முறையெல்லாம் தரைமட்டமாக்கி அழிக்கப்பட்டன.

அமனுல்லாவின் இறுதிக் காலம் பற்றி லண்டன் டைம்ஸ் ஏடு (15…1…1929) கீழ்க்கண்டவாறு விமர்சனம் செய்து தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டது:

''…அவர் (அமனுல்லா) ஆப்கானிய இளைஞருலகத்தில் சீர்திருத்த விதைகளை விதைத்துவிட்டார். என்றோ ஒரு நாள் அவை முளைவிட்டே தீரும்…''

* * *

ஆப்கானிஸ்தானை விட்டுப் புறப்படுமுன் ஜலாலாபாத்தைச் சென்று பார்வையிட வேண்டுமென்று தீர்

மானித்தேன். அங்குதான் அமனுல்லாவின் கல்லறை யிருந்தது. அதைத் தரிசித்து மரியாதை செலுத்த என் மனம் விருப்பம் கொண்டது. ஆகவே திரும்பும்போது நில மார்க்கமாகப் பிரயாணம் செய்வது என்று முடிவு கட்டிக்கொண்டேன். காபூலுக்கும் பிஷாவருக்கும் இடையே உள்ள தூரம் 175 மைல்கள். பஸ்ஸில் பிரயாணம் செய்வதானல் இரண்டு நாட்கள் பிடிக்கும். ஜலாலாபாத் காபூலிலிருந்து 90 மைல்கள். அங்கு ஒரு இரவுப் பொழுதைக் கழிக்கத் தீர்மானித்தேன்.

காலையில் காபூலைவிட்டுக் கிளம்பி, அஸ்தமிக்க இரண்டு மணி நேரமிருக்கு முன்பே ஜலாலாபாத் நகரத்திற்குள் பிரவேசித்துவிட்டோம். நகரத்திற்குள் பிரவேசிக்கும்போது கண்களில் முதலில் தென்பட்டது ஒரு சர்க்கரை ஆலை. அது அமனுல்லா காலத்தில் தருவிக்கப்பட்ட இயந்திரங்களின் உதவிகொண்டு அண்மையில் துவக்கப்பட்டதாகும். சேசம்பாக் விருந்தினர் விடுதியில் இரவு தங்கினோம்.

ஜலாலாபாத் ஒரு ராஜ்யத்தின் தலைநகர். அது ஆப்கான் அமீர்களின் குளிர்கால உறைவிடமாகும். அந்த கோடை நாளில் ஷாயிபாக் (அரச வனம்)கிலுள்ள குளிர் கால அரண்மனை காலியாகக் கிடந்தது. ஜலாலாபாத்தி லுள்ள நமது தேசத்தின் உதவித் தூதுவரை நான் சந்தித்தேன். அவர் என்னோடு 'ஷாயிபாக்'கில் நடந்து வந்தார். அரசர் இல்லாத சமயங்களில் தோட்டம் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதில்லை. தோட்டமெங்கும் முழங்கால் உயரத்துக்கு புல்மண்டிக் கிடந்தது. முற்ற வெளியில் அமைக்கப்பட்டிருந்த குளம் வற்றிக்கிடந்தது. ''குளிர் காலத்தில் இந்த அரண்மனை முற்றிலும் மாறுபட்டுச் கவர்ச்சி ததும்பக் காட்சியளிக்கும். அப்போது

நகரம் முழுவதும் பிரகாசமாகவும் உற்சாகமாகவும் விளங்கும்'' என்று அறிவித்தார் என்னுடன் வந்த உதவித் தூதுவர். தோட்டத்திற்குப் பின்புறம் சற்று தொலைவில் ஒரு நதி ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் அந்த நதிவரை சென்றோம். அப்பொழுது ஜலாலாபாத் பள்ளத்தாக்கின் காட்சிகள், ஆப்கானிஸ்தானின் ஏனைய வரட்சிப் பிரதேசங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டது. சில இடங்களின் தோற்றம் எனக்கு இந்திய மண்ணை நினைவூட்டியது. ஜலாலாபாத் பள்ளத் தாக்கின் விவசாயம் இந்தியாவில் போன்றே நடைபெறு கின்றது. ஆப்கானிஸ்தானிலேயே அவ்விடத்தில் மட்டுந் தான் கரும்பு, நெல், பலவகைப் பழங்கள் போன்றவை உற்பத்தியாகின்றன.

அமனுல்லாவின் கல்லறை இந்தியத் தூதுவரின் அலுவலகத்திற்கு மிகவும் அருகாமையிலேயே உள்ளது. அங்கே இரண்டு கல்லறைகள் இருந்தன. அவை ஒன்றோ டொன்று இணையாக அமைந்திருந்தன. சிமிட்டி பூசப் பட்ட தரையில் எழுப்பப்பட்டிருந்த அக்கல்லறைகளுக்கு மேலே கூரை வேயப்பட்டிருந்தது. ஒரு புறத்தில் மட்டுமே சுவர் எழுப்பப்பட்டிருந்தது. மற்ற மூன்று பக்கங்களும் திறந்தே கிடந்தன.

அந்த இரண்டு கல்லறைகளில் ஒன்றில் அமனுல்லா வின் தந்தை அபிபுல்லாவின் சடலமும் மற்றொன்றில் அமனுல்லாவின் சடலமும் அடக்கம் செய்யப்பட்டிருப்ப தாகக் கூறப்பட்டது.

அபிபுல்லா உள்நாட்டிலேயே கொலை செய்யப்பட்டு இறந்தார். அமனுல்லாவோ நாட்டைவிட்டுத் தப்பி யோடி ஸுரிச் நகரத்தில் சிலகாலம் வாழ்ந்து, 1960 ஏப்ரல் 25-ல் மறைவெய்தினார். அவரது விருப்பத்திற்

கிணங்க, பிற்கால மன்னனான (1933—) ஜாஹிர்ஷாவின் சொற்படி அவர் சடலம் ஜலால பாத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதே ஆண்டு மே மாதம் 7–ம் நாளில் அவருக்கென மசூதி ஒன்று எழுப்பப்பட்டது. ஜலாலாபாத்தில் நிகழ்ந்த பிரேத ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர் என்று சொல்லக் கேட்டறிந்தேன். அப்போது ஆப்கானிய பள்ளிவாசல்கள் அனைத்திலும் அவர் நினைவாகப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. தற்கால மன்னரே காபூலில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தினார்.

ஆப்கானிஸ்தான் அமனுல்லாவை மறக்காது; மறக்க இயலாது. சிறப்பாக இன்று காபூல் வீதிகளிலே நேர்த்தியாக ஆடையணிந்து பெருமிதத்துடன் நடந்து போகும் பெண்மணிகளால் நிச்சயமாக அவரை மறக்க முடியாது ஆன்மீகப் பற்றுமிக்க ஆப்கானிஸ்தானில் அவர்கள் முதன் முறையாக சுதந்திர வாழ்வைச் சுவை பார்க்க முடிந்தமைக்கு அமனுல்லாவின் வீரமிகுந்த திட்டமல்லவா அடிகோலிற்று!

நான் உடன்கொண்டு வந்திருந்த மலர்களை அந்தப் புனிதக் கல்லறையிலே தூவினேன்.

அமனுல்லாவின் உடல் மட்டுமல்ல, அவர் கண்ட கனவுகளும் இன்று நாட்டில் குடியேறி 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பலித்து முளைவிடத் துவங்கியிருக்கின்றன. ஆம், அன்று அவர் விதைத்துச் சென்ற விதைகள் இன்று ஆப்கானிஸ்தான் முழுவதும் முளையெடுத்து மலர்ந்து வளர்ந்து ஓங்குகின்றன.

* * *

ரயில் வசதிகள் இல்லையென்றாலும் வாழ்க்கைக்கு உதவும் நவீன வசதிகள் ஆப்கானிஸ்தானத்திற்குப் 'பரவாமல் இல்லை.'

பாச்சா—இ—சேக்கோயின் குறுகிய கால கொடுங்கோலாட்சியினைத் தொடர்ந்து, 1929 அக்டோபரில் தளபதி நாதிர்கான் ஒரு தனிப் பரம்பரையையே நிறுவினுன். பாச்சா பகிரங்கமாகச் சுடப்பட்டு இறந்தான். அப்பொழுது அமனுல்லாவின் பதவி யிழப்பு அவ்வளவு பிரமாதமான நிகழ்ச்சியாகக் கருதப்படவோ பேசப் படவோ இல்லை. நாதிர்ஷாவை (1929—33) மக்கள் ஏற்றுக் கொண்டது ஒரு வம்ச மாற்றத்தைக் குறிப்பதாக இருந்ததே யல்லாமல் மக்களுக்குப் பொருளாதாரத் தாகம் மாறவில்லை. நாதிர்ஷாவும், அவர் மகன் ஜாஹிர்ஷாவும் ஓரளவு அமனுல்லாவின் பொருளாதார சீர்திருத்தங்களையே கடைப் பிடித்தார்கள். ஆனுல் மிகக் கவனத்தோடு நடந்து கொண்டார்கள். நாட்டில் தொழில் வளம் பெருகியது. ஆனுல் சமுதாய சீர்திருத்தம் போன்ற விஷயங்களில் விஷப் பரீட்சை செய்ய விரும்பாமல் விட்டுவிட்டதால் பெண்களிடம் பர்தா (முக்காடு) முறை நீடித்து வந்தது. 1939-ம் ஆண்டில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மீண்டும் திறக்கப் பட்டன. ஆனுல் மிக எச்சரிக்கையாக அவற்றைப் 'பாலர் பள்ளிகள்' என்றே அழைத்தனர். 1949-ம் ஆண்டில் உயர்தரப் பயிற்சிபெற்ற பெண்கள் முதல் முறையாக, பெண்கள் பள்ளிகளில் பாடம் போதிக்கத் தொடங்கினர். இறுதியாக 1959-ம் ஆண்டில் பர்தா முறையும் அகற்றபபட்டது.

1957-ல் நான் முதன்முறையாக ஆப்கானிஸ்தான் சென்றபோது ஒரு பெண் முகத்தைக்கூட என்னுல் பார்க்க முடியவில்லை. ஆப்கானிய மாதர்கள் தங்கள் முகங்களை முக்காடுகளுக்குள் மறைத்த வண்ணம் வீதிகளில் நடமாடினர். 1960-ல் நான் மறுமுறை காபூல் சென்றபோது 'அரியான் விமான' அலுவலகத்தில்

என்னை வரவேற்றது நாகரிக உடையணிந்த ஒரு ஆப்கானிய அழகிதான். அலுவலகத்தை விட்டு நான் வெளியே வந்தபொழுது நானடைந்த வியப்புக்கு அளவே இல்லை. ஏராளமான பெண்கள் முக்காடு ஏதுமின்றி வீதிகளில் பெருமை பொங்க எழில் நடை பயின்று கொண்டிருந்தனர். சில பெண்கள் மட்டும் பழைய பாணியில் முக்காடுடன் செல்வதும் என் கண்களில் படாமலில்லை.

பெண்கள் அலுவலகங்களில் குமாஸ்தாக்களாகவும், டைப்பிஸ்ட்களாகவும் பணிபுரிவதைக் கண்டுவியந்தேன். திரைப்படக் கொட்டகைகளில் அனுமதிச்சீட்டு வசூலிப்பவர்களாகவும் சில பெண்கள் பணியாற்றினர். தொலைவிலுள்ள குவந்தஸில் சோப்புத் தொழிற்சாலைக் கூலிகளாகவும் வேலை செய்வதைக் கண்டேன்.

இந்த மறைமுகமான சமூகப் புரட்சி அரசாங்க உத்தரவு ஒன்றின் மூலம் (1959) அமுலாக்கப்பட்டது. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை 'மொல்லா' எனப்படும் மதகுருக்கள் முணுமுணுப்பின்றி ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் கிளர்ச்சி யொன்றுக்கும் ஏற்பாடு செய்ய எண்ணினராம். ஆனால் திடமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் கிளர்ச்சி முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது. அந்தச் சமயத்தில் குவந்தகரில் மட்டும் 400க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனராம். தற்போது ஆப்கானியப் பெண்களின் சுதந்திர வாழ்வைக் குலைக்கும் எந்த முயற்சியையும் ஒடுக்கும் பலம் ஆட்சியினருக்கு இருக்கிறது.

1962-ல் காபூலிலுள்ள ஒரே ஒரு நாடக அரங்கில்— நந்தர்தூன் நாடகமொன்றைக் கண்டு ரசித்தேன். நாடகக் காட்சிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே

நடித்தனர். கொட்டகையில் ஆண்களும் பெண்களும் அருகருகே அமர்ந்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்த காட்சி எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் (அதாவது 1957-ல்)இந்தக் காட்சிபற்றி கற்பனை செய்யக்கூட முடியாது. பெண்களுக்கென தனியே இரண்டு கொட்டகைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவற்றை மட்டுந்தான் பெண்கள் பயன்படுத்த முடியும். கணவனும் மனைவியும் சேர்ந்து ஒரு கொட்டகைக்குள் செல்ல முடியாது. கணவன் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுங்கால் மனைவி முக்காட்டுடன் அவனைச் சென்று பார்க்கலாம். ஆனால் அதே நிலையில் மனைவியிருந்தால் கணவனால் மனைவியைச் சந்திக்கவே முடியாது. ஆனால் இப்பொழுது அந்தக் காலம் மலையேறிவிட்டது. மருத்துவக் கல்வி நிலையங்களில் இப்பொழுது ஆண்களும் பெண்களும் கலந்து பழகிப் பயிற்சி பெறுகின்றனர். திரைப்பட அரங்குகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தபடி அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் கூலிவேலைக்கு கிராக்கி ஏற்பட்டதால் பெண்கள் வாழ்வில் புதுமலர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் எளிதாக ஏற்பட வழி பிறந்தது என்று சொல்லலாம்.

* * *

இவ்விதமாக ஆப்கானிஸ்தானில் மக்களின் வாழ்க்கை மலர்ச்சி பெற்று வருகின்றது. அயல்நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறும் இளைஞர்கள் புதிய பழக்க வழக்கங்களையும், புதிய நோக்கங்களையும் பெற்றுத் திரும்புகின்றனர்.

ஆப்கானியர்கள் 'தொராசி' (மேலைநாட்டுப் பாணி உடை) அணிய வேண்டும் என்று சொன்னதற்காக அமனுல்லா பதவியிழந்து ஓடினர். ஆனால் இன்று காபூலிலும் பிற நகரங்களிலும் ஆண்கள் தலைக் குல்லாயைத் தவிர, ஆங்கில முறைப்படியே உடுத்துகின்றனர். தொழிலகங்கள், பல்கலைக் கழகங்கள், பாங்குகள் நவீன மயமாகி விட்டன.

அத்தியாயம் 2

## ஆப்கானிய ஹிந்துக்கள்

நான் 1960-ல் இரண்டாவது முறையாக ஆப்கானிஸ்தான் சென்றது, 1929லிருந்து அங்கே ஏற்பட்ட பொருளாதார மாறுதல்களைப் பற்றிய ஆராய்ச்சியின் பொருட்டே யாகும். 1929க்குப் பின்னர்தான் அமனுல்லாவின் விருப்பம் சமூக எதிர்ப்புகளினூடே கொஞ்சங் கொஞ்சமாக நிறைவேறி நிலைநாட்டப்பட்டது. அங்ஙனம் எய்திய பொருளாதார முன்னேற்றத்தினை அளவிடவே நான் சென்றேன்.

ஜூன் மாதம் காலை 6-45 இருக்கும். தில்லியில் ஜப்தார் ஜங் விமானநிலையத்திலிருந்து எங்கள் விமானம் புறப்பட்டது. வழியில் சிற்றுண்டிக்காக அமிர்தசரசில் சற்றே தாமதித்தோம்; அவ்வளவுதான். சுமார் ஏழுமணி நேரத்தில்—அதாவது என் கடிகாரத்தில் பிற்பகல் 2-30 இருக்கும்—பக்ராம் விமான நிலையத்தை அடைந்தோம். அப்பொழுது காபூல் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது, காபூல் நேரத்திற்கு அது 1-30 மணி. பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான் நோக்கிக் கடந்து போகும் போது சுலைமான் மலைகளின் பெரும் பெரும் தொடர்

கள்பளிச்சென்று காட்சியளித்தன. என்னுடன் பிர யாணம் செய்தவர்கள்: ரஷ்யப் பொறியியலாளர் (Engineer) ஒருவர், இரானிய வர்த்தகர் ஒருவர், இரண்டு அமெரிக்கர்கள், இந்திய மருத்துவர் (Doctor) ஒருவர், சில காபூல் வாழ் இந்தியர்கள் ஆகியவர்களே.

பக்ராம் விமான நிலையத்திலிருந்து காபூல் செல்லும் 45 மைல் நீளமுள்ள அழகிய சாலை ரஷ்யர்களால் போடப் பட்டிருந்தது. தற்காலம் பக்ராம் தன் முக்கியத்தை இழந்துள்ளது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன் கனிஷ்கர்கள் இந்தியாவில் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித் திருந்த காலத்தில், அன்னாரின் கோடைக்காலத் தலைநகரா யிருந்தது; அப்பொழுது குளிர்காலத் தலைநகர் பிஷாவரி லிருந்தது. பக்ராமிலிருந்த பழம்பொருள் சில கண்ணுக் குப் பட்டன. பின்னர் அவற்றைக் காபூல் பொருட்காட்சி சாலையில் பார்த்தேன். அவை புத்த மதத்தினரின் கலைச் சின்னங்கள். பக்ராமிலிருந்து காபூலுக்குச் செய்த மோட் டார்ப் பயணத்தை மிகவும் நன்றாக அநுபவித்தேன். சாலையின் இருமருங்கிலும் உள்ள வயல்வெளிகள் பார்க்க ரம்மியமாக இருந்தன. ஆங்காங்கு மக்கள் மாடுகள் பூட்டி உழுது கொண்டிருந்தனர். வயல்களை அடுத்து, சிறு மலைத் தொடர்கள் காணப்பட்டன. நாங்கள் சில மைல்தூரம் சென்ற போது இயற்கைக் காட்சி மாறியது. விவசாய நிலங்களுக்குப் பதிலாகப் பழமரத் தோட்டங்கள் தென் பட்டன. பிரயாணிகளில் ஒருவர், "பன்னிரண்டு வகைப் பழவர்க்கங்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து ஏற்றுமதி யாகின்றன" என்று சொன்னார். உயர்ந்த பழவர்க்கங் களில் சுமார் முப்பது வகைகள் அனுப்பப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

'ஓட்டல் காபூல்' போய்ச் சேர்ந்தோம்; அங்கே இடம் கிடைக்கவில்லை. காபூலிலுள்ள ஒரு பெரும் வர்த்த

கப் பிரமுகர்க்கு அறிமுகக் கடிதம் ஒன்று வைத்திருந்தேன். அவருடைய தொலைபேசியின் எண்ணும் என்னிடம் இருந்தது. 'அரியானு ஏர்லைன்ஸி'ன் (Aryana Airlines) வரவேற்பாளர்—அதாவது ஓர் ஆப்கானிய மாதரசி—அவரைத் தொலைபேசியில் கூப்பிட்டு எனது வருகை பற்றித் தெரிவிக்க முன்வந்தாள். சிறிது நேரத்தில் லாலா ராம்நாத் ஸூரியின் வேலையாள் ஒருவர் என்னிடம் வந்து, "நீங்கள் காபூலில் இருக்கும்வரை அவருக்கு விருந்தாளியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிருர்" என்று சொன்னுர். நானும் தயக்கமின்றி அவரது விருந்தாளியானேன்.

* * *

லாலாஜியிடம் வேலைபார்த்த ஐந்து பேர்களில் இரண்டுபேர் இந்தியர்கள்; மூன்று பேர் ஆப்கானிய ஹிந்துக்கள். தோற்றத்திலும் உடையிலும் ஆப்கானிய ஹிந்துக்கள் இதர ஆப்கானியர்களைப் போலவே இருந்தனர். அவர்களது முன்னேர்கள் ஆப்கானிஸ்தானில் எப்பொழுது வந்து குடியேறினர் என்று அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் எண்ணிக்கை இருபதிருயிரத்திலிருந்து முப்பதிருயிரம் வரை இருக்குமென்று தோராயமாக மதிப்பிடலாம். சொல்லப்புகின், ஆப்கானிஸ்தானில் "ஹிந்து" என்ற சொல் சீக்கியர்களையும் சேர்த்தே உணர்த்துவதாகும். ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் வர்த்தகர்களாகவும் லேவாதேவிக்காரர்களாகவும் விளங்கினுர்கள்; இவர்கள் நகரங்களில் வசித்தார்கள். காபூலுக்கு வடக்கிலுள்ள இடங்களில் சிறுபான்மையோர் சாதராணமாக அவர்கள் லந்தா (Lahnda) மொழி பேசினுர்கள். லந்தா, என்பது மேற்குப் பஞ்சாப்பில் பேசப்பட்டு வந்த மொழியாகும்.

லாலாஜீயின் அலுவல் மனையில் உள்ள ஆப்கானிய ஹிந்துக்களில் ஒருவர் துனிச்சந்த் வைத் காபூலி (Dunichand Vaid Kabuli) என்பவர். அவர் மேற்சட்டையும் (Coat) காற்சட்டையும் (Trusers) அணிந்து கொள்வது வழக்கம். சில சமயங்களில் கழுத்துப்பட்டை (Tie) கட்டிக்கொள்வதும் உண்டு. ஆனால் "காரக்குல் கேப்" (Karakul cap) எனப்படும் தேசிய தலை அணியைத் தவிர வேறெதனையும் தலைக்கு அணிந்து கொள்ள மாட்டார். நவநாகரிக ஆப்கானியர்கள் தலை அணியைத் தவிர மேல் நாட்டு உடை யாவற்றையுமே ஒப்புக்கொண்டு விட்டார்கள். தலைக் குல்லாய்கள் தற்காலத்தில் நாகரிகத்திற்குப் புறம்பாகிவிட்டது. அரசனிலிருந்து சாதாரண மனிதன் வரை ஒவ்வொருவரும் ஒரு காரக்குல் குல்லா அணிகின்றனர். அதன் விலைக் கிராக்கியைப் பொருட்படுத்துவதில்லை. துனிச்சந்த் தனது குல்லாவின் விலை இந்திய மதிப்பிற்கு 100 ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. காரக்குல் என்பது அகன்ற வாலையுடைய முரட்டு வகையான ஒரு ஆட்டு இனத்தின் பெயர். இந்த இனத்தைச் சேர்ந்த குட்டிகளின் சுருண்ட மயிர்த் தோல், ஆட்டுரோமம் என்று கருதப்படுகிறது. 'காரக்குல்' என்பதுவும் அதுவே தான். இந்த் 'காரக்குல்' லினால் மாதர்களுக்கு நாகரிகமான மேற்சட்டைகளும் ஆடவர்களுக்குக் குல்லாய்களும் செய்யப்படுகின்றன,

பின்பு ஒரு சமயம் வட ஆப்கானிஸ்தானில் பிரயாணம் செய்த பொழுது, காரக்குல் ஆட்டு மந்தைகள் புல்வெளிகளில் மேய்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அன்னிய நாட்டுச் செலாவணியில் பொருளீட்டும் சாதனங்களில் காரக்குல் தலையானதாகத் திகழ்கிறது. காரக்குல் ஆடுகளை வளர்த்துப் பெருகச்

செய்பவர்கள் வட ஆப்கானிஸ்தானிலுள்ள ஜர்க்கோமன் நாடோடிகளே. ஆனால் அவர்கள் அந்நிய வர்த்தகத்தின் விலையில் மூன்றி லொன்றைத்தான் பெறுகிறார்கள்.

துனிச்சந்தின் தோழர் காஷிராம் எப்படி யென்றால், காரக்குல் குல்லாவைவிட பரம்பரையாக உள்ள பத்தரன் குல்லாவையும் ஐரோப்பிய உடைகளைவிடப் பத்தான் உடையையுமே விரும்பினார். காஷிராம், பக்கத்துக் கிராமம் ஒன்றில் வசித்தார், அவருக்கொரு பழமரத் தோப்பு உண்டு. லாலாஜீயின் தொழிலகத்தின் மூன்றாவது நபரான ஆப்கானிய ஹிந்து பகவன் தாஸ் என்பன். அவனே அலுவலகச் சிப்பந்தி ஆவான்.

நான் துனிச்சந்த்தைப் பார்த்து "நீங்கள் ஆப்கானிய முஸ்லீமைப் போலவே இருக்கின்றீர்கள்" என்று வேடிக்கையாகச் சொன்னேன். அதற்கவர், 'ஆம், உங்களைப் போன்ற இந்திய ஹிந்துக்களைப் போல் நாங்கள் குறுகிய மனப்பான்மை யுடையவர்கள் அல்லர்!' என்று எதிர்த்து விடையளித்தார். மேலும் "தோல் பாத்திரத்தில் தண்ணீர் குடிக்கவோ அல்லது முஸ்லீம்களிடமிருந்து வாங்கிக் குடிக்கவோ தயங்குவதில்லை," எனக் கூறினார்.

பின், ஆப்கானிய ஹிந்துக்களுக்குக் காபூலில் சொந்தமான கோயில் இருக்கிற தென்றும், அதனை ஆப்கானிய அரசர்கள் பண்டு தொட்டுப் பாதுகாத்து வந்திருக்கிறார்களென்றும் தெரிவித்தார்.

"அது எங்கே இருக்கிறது?" என்றேன் நான்.

"அஷமாய் மலையில்" என்றார் அவர்.

ஆக, ஒரு நாள் இருவரும் அஷமாய்க் கோயிலைப் பார்க்கச் சென்றோம். அது சம்சர்வாலா-ஷே-து-மகுதிலிருந்து கொஞ்ச தூரத்தில்தான் உள்ளது. சம்சர் வாலா என்ற பதத்திற்கு இரண்டு வாள் உடைய ஷா

என்று பொருள். எட்டாவது நூற்ருண்டில் பிரமன் ஷாஹி பரம்பரையைச் சார்ந்த மன்னர்கள் காபூலே அரசாண்டு வந்தார்கள். அராபியர்கள் படையெடுத்து வந்து அவர்களே வென்ருர்கள். காபூலேப் பிடித்த அராபிய வீரன் கையில் இரண்டு வாட்கள் தாங்கிப் போர் புரிந்தான் என்பதும் அதனுல் அவனுக்கு ஷா-து-சம்சர் வாலா என்ற பட்டப் பெயர் உண்டாயிற்று என்பதும் ஒரு கர்ண பரம்பரைச் செய்தி. மசூதியும் அவன் பெயரால் அழைக்கப்படுகிறது. குருநாணக் காபூல் வந்து இந்த மசூதியருகில் சில காலம் தங்கிஞர் என்ற மற்ெருரு செய்தியும் உண்டு.

அஷமாய் கோயிலுக்குள் செல்வதற்கு மலேமீது ஏற வேண்டியதில்லே. மரக் கதவுகள் உட்புறம் தாழிடப் பட்டிருக்கும்; கோயிலின் உட்பிரகாரத்தின் எப்பகுதி யையும் வெளியிலிருந்து பார்க்க முடியாது. உண்மையில் ஆப்கானிஸ்தானில் உள்ள ஒவ்வொரு வீடும் ஒரு கோட்டை போலவே இருக்கும்; வெளிப்புறச் சுவர் மட்டுமே கண்ணுக்குத் தெரியும். நாங்கள் அங்கே சென்று கதவைத் தட்டியதும் கதவுகள் திறக்கப்பட்டன. கோயில் எத்தனே ஆண்டுக்கு முன் கட்டப்பட்டது என்று அர்ச்சகர்க்கே தெரியவில்லே. ஜிஜியா என்ற ஒரு பிரத்தி யேக வரியை இந்துக்கள் கட்ட வேண்டுமென்ற நிலே இருந்த போதிலும் ஆப்கானிய அமீர்கள் கோயிலே எக்காலத்திலுமே நன்கு பாதுகாத்து வந்திருக்கின்றனர் என்று அர்ச்சகர் கூறிஞர்.

அன்று மாலேயில் இந்துக்களின் மற்ெருரு புண்ணிய ஸ்தலத்திற்குச் சென்ருேம். அது அண்மையில் முக்கியத் துவம் பெற்றதாம். அதற்கு பீர் ரத்தன்ஞத்தின் தர்கா என்று பெயர். ரத்தன்ஞத்ஜீ பெஷாவரைச் சேர்ந்த ஒரு சாது. அவர் இறந்து வெகுகாலம் ஆயிற்றெனினும்

அவரது ஆசிரமத்தை அவர்தம் சீடர்கள் ஒருவர்க்குப் பின் ஒருவராகத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார்கள். இந்தியாவின் பிரிவினைக்குப் பின்பு இந்த ஆசிரமத்தின் முக்கிய ஸ்தாபனம் பெஷாவரிலிருந்து டில்லிக்கு மாற்ற பட்டுவிட்டது. தர்காவில் ஒரு தர்மசாலை உள்ளது. அது எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவானது.

காபூலிலுள்ள ஆப்கானிய ஹிந்துக்களில் பெரும் பான்மையோர் ஷோர்பஜாரைச் சார்ந்த 'ஹிந்து குஜார்' என்ற பகுதியில் வசித்து வருகிறார்கள். அது பழைய காபூலின் தோற்றத்தை உடைய முற்போக்கற்ற ஒரு நெரிசலான இடம். மண் சுவர்களாலான கோட்டைகள் போன்ற வீடுகளுக்குச் சின்னஞ் சிறிய சந்துகளே (Lanes) உள்ளன. சந்துகளும் கிளைச் சந்துகளும் இருட்டாய்க் கிடக்கும். சில இடங்களில் வீதிகள் சேறாக இருக்கும்; சில இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும். ஷோர் பஜாரை வர்ணிப்ப தென்றால் 'வடிகால்' முறையின் அடையாளமே கிடையாது; எங்கும் துர்நாற்றம் வீசியது என்று சுருங்கச் சொல்லிவிடலாம். இந்த வட்டாரத்தில் சுமார், 10,000 ஆப்கானிய ஹிந்துக்கள் வாழ்கிறார்கள். இந்த இடத்தை இரண்டு முறை பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. 1960ல், நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ஒடி ஒளிந்திருந்த வீட்டைப் பார்க்கும் பொருட்டு இங்கே வந்தேன். அந்த வீடு இரண்டு மாடி உடையது; மண் செங்கல் வீடு. அதில் அப்பொழுது இந்திய வர்த்தகர் ஒருவர் வசித்து வந்தார். அவர் பெயர் லாலா உத்தம் சந்த்.

ஷோர் பஜார் வட்டாரத்தை இரண்டாவது முறை யாகப் பார்க்க வாய்த்ததற்குக் காரணம் குருத்து வாரத்தில் நிகழ்ந்த தொரு மதச் சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு அங்கு செல்ல நேர்ந்ததுதான்.

ஸராய் லஹோரியா ஜீஹாராய்ஸாஹிப்-6ஆம் குருஹர ராயினால் உண்டானது. அவரது ஆண்டு விழா மிக ஆசாரத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. நான் அங்கே போயிருந்த பொழுது அங்கே ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கக் கண்டேன்.

பிரபல ஆப்கானிய இந்துக்களுடன் சமூக, அரசியல் நிலைபற்றிப் பேசும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அங்குள்ள இந்துக்கள் அந்தக் காலத்தில் இரண்டாம் தர பிரஜைகளாக மதிக்கப்பட்ட போதிலும், அவர்களுடைய நிலை துரிதமாக முன்னேறி வருவதை அறிந்து திருப்தியடைந்தேன். ஆப்கானிய ஹிந்துக்களுக்கும் ஆப்கான் முஸ்லீம்களுக்கும் சட்டப்படி எவ்வித வேற்றுமையும் கிடையாது என்று அறிந்தேன். ஆப்கானிய இந்துக்கள் ஒரு சிறுபான்மைத் தொகுதியினராயிருந்தாலும், ஆப்கானிய நாடு உண்டானதிலிருந்தே அவர்கள் ஒரு வலுவுள்ள சமூகத்தினராக இருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் தாம் ஆப்கானிய அரசர்களுக்கு நிதி வரவு செலவுக் காரியங்களை அவ்வப்பொது கவனித்து வந்திருக்கின்றார்கள்.

இந்துக்களில் பலர் ஆப்கானிய ராஜ்யத்தின் வரி செலுத்தும் விவசாயிகளாக இருந்திருக்கின்றனர். மேலும் இவர்கள் குறைந்தது 1929 வரை ஆப்கானிய உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகங்களின் மேல் இந்தியர்களுடனும் யூதர்களுடனும் சேர்ந்து உறுதியான பிடிப்பு வைத்திருந்தார்கள். அவர்களுடைய ஆதிக்கத்தினாலும் அபிவிருத்தியினாலும் மற்றவர்கள் அவர்களையும் யூதர்களைப்போல் அவமதித்தார்கள். சமூகத்தில் சமத்துவம் கிடைக்காது துன்பமுற்றனர். உதாரணமாக, அவர்கள் மஞ்சள் நிறக் குல்லா மட்டுமே அணிய வேண்டுமென்ற நிலை இருந்தது. அவர்களை ஏனைய ஆப்கானியர்

களினின்றும் பிரித்துக்காட்டும் பொருட்டு இந்த முறை அமுலிலிருந்தது. ஜிஜியா என்ற ஒரு தனிப்பட்ட வரியை அவர்கள் செலுத்த வேண்டிய திருந்தது. நாட்டிற்காகக் கட்டாய இராணுவ சேவை புரிய அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் அந்த நாட்கள் மலையேறிவிட்டன. அமனுல்லா மன்னன் இந்துக்களுக்கு விரோதமாகக் காணப்பட்ட அத்தகைய பல பழக்கங்களை ஒழித்தார். அவர் காலத்தில் இந்துக்கள் இராணுவத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். தேவன் நிரஞ்சன் தாஸ் என்பவர் அமைச்சர் பதவியில்கூட அமர்ந்து பணியாற்றினார். அது முதல், மொத்தத்தில் இந்துக்களின் நிலை முன்னேறிக் கொண்டே யிருக்கிறது.

தற்காலத்தில் ஆப்கானிய முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி இந்துக்களுக்கும் இரண்டு ஆண்டு 'பிஷாக்' (இராணுவப் பணி) கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. தற்கால ஆட்சியின் கீழ் இந்துக்களுக்கு உயர் பதவிகள் மறுக்கப்படவில்லை. ஆப்கானிஸ்தானில், நேய்ஸ் அல்லது பிரஸிடெண்ட் என்னும் பதவி அரசாங்க உத்தியோகத்தில் மிக உன்னதமான பதவியாகும்; அது அமைச்சர் பதவிக்கு மட்டும் கீழ்ப்பட்டது. ஹூகம் சந்த் என்னும் ஆப்கானிய இந்து ஆப்கானிஸ்தானிலேயே மிகப் பிரசித்தி பெற்ற பொருளாதார நிறுவனமாகிய 'மில்லி பாங்கி'யின் பிரஸிடெண்டாக இருந்தார் என்று கேள்விப்பட்டேன்.

ஒருநாள் நண்பகல் வேளையில் அவருடைய வீட்டிற்குச் சென்றேன். என்னை வரவேற்ற அறை ஒரு கூடம் போல் பெரிதாயிருந்தது. அதனை நேர்த்தியான கம்பள விரிப்பு அழகுபடுத்தியது. விலையுயர்ந்த ஆப்கானியக் கற்கள் இழைக்கப்பட்ட மேசை ஒன்று அலங்காரமாக

விளங்கியது. ஆப்கானிஸ்தானுக்கே உரிய ஒப்பு உபசாரங்களுடன் என்னை விருந்துக்கு அழைத்தார். ஆனால் நான் இணங்கவில்லை. ஏனென்றால் மதிய உணவுக்கு அழைக்கப்பட்டால் விருந்தினர்கள் மறுக்கக் கூடாது என்பது அது வரை எனக்குத் தெரியாது. ஆப்கானிய இந்துக்கள் அரசினர்பால் எவ்வித அதிருப்தியும் கொள்வதற்கு இடம் இல்லை யென்றும்; சிறுபான்மை வகுப்பினரை நடத்தும் முறையில்கூட அரசாங்கம் முன்னேறி வருவதாகவும் ஹுகம் சந்த் குறிப்பிட்டார். ஆப்கானிஸ்தானில் பிறிதொரு சிறுபான்மை வகுப்பினர் ஹஜராஸ் என்பவர்கள்; இவர்கள் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

எங்கள் வேலையாள்—அதாவது குவாந்தகரிலிருந்து வந்த தக்கர்தாஸ் என்னும் ஆப்கானியன்—தன் ஆப்கானியப் பிரஜா உரிமை பற்றி மிக அக்கறை கொண்டிருந்தான். புதித்தாகத் திருமணமான அவன் தன் மனைவிக்கு ஒரு பட்டுச் "சாத்ரி" (பர்தா) வாங்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்து, "சாத்ரி எதற்கு? சில காபூல் பெண்களைப் போல உன் மனைவியும் முக்காடில்லாமல் நடமாடினால் என்ன?" என்று கேட்டேன்.

"படித்தவர்களும் பணக்காரர்களும் அப்படிச் செய்யலாம். என் மனைவி பர்தாவை எறிந்துவிட்டு நடக்க ஆரம்பித்தால், அவ்வளவுதான். என்னை ஏளனம் செய்வது மட்டுமல்லாமல் அடித்தும் போடுவார்கள். போலீஸுக்குக்கூடத் தகவல் போய்ச் சேராது" என்று பதிலளித்தான்.

தக்கர்தாஸ் அளவுக்கு மிஞ்சி ஜாக்கிரதையுடையவன். சிறுபான்மையர் எப்போதுமே அப்படித்தான் இருக்க வேண்டியதாயிருக்கிறது. காபூலில் ஹமாம்ஸ் (Hamams)

என்று அழைக்கப்படும் குளியல் விடுதிகள் (Bath houses) அநேகம் உண்டு என்று கேள்விப்பட்டேன், அங்கே, பணம் கொடுத்தால் அருமையான வெந்நீர் குளியல் வசதி கிடைக்கும். குளியல் விடுதி ஒன்றுக்குப் போகலா மென்று நான் தக்கர்தாஸை அழைத்தேன். அவன் விடுதிக்காரர்களை நினைத்து அப்படியே நடுங்கிவிட்டான். அவர்களுக்கு ஆப்கானிய இந்துக்கள்மீது அத்துணை வெறுப்பு. ஆப்கானிய இந்துக்கள் அந்தக் குளியல் விடுதி களுக்கு எவ்வகையிலும் ஆதரவு காட்டவேண்டுவதில்லை என்பது தொன்றுதொட்டு நிலவும் கருத்து. வங்காளத் தில் லேவாதேவி செய்யும் காபூலிவாலாக்கள் என்று சொல்லப் படுபவர்களைக் குறித்து நாம் கொண்டுள்ள எண்ணத்தை அடிப்படையாக வைத்து நோக்கும் பொழுது, பல காலமாகவே கடன் கொடுக்கும் அந்தத் தொழிலைச் செய்து வரும் ஆப்கானிய இந்துக்களைப் பற்றி ஆப்கானியர்கள் எவ்வித அபிப்பிராயம் கொண் டிருப்பார்கள் என்பது எளிதில் புலனாயிற்று. ஆனால் நான் கடைசி முறையாக ஆப்கானிஸ்தான் போயிருந்த போது இந்த மனப்பான்மை பெருமளவு நீங்கிவிட்டதை யறிந்தேன்.

அத்தியாயம் 3

# ஆப்கானியரின் அக வாழ்க்கை

**பெர்**ஸியன் மொழியே காபூலில் பேச்சு வழக்கு மொழியாக விளங்கியது. பத்தான்கள் (அல்லது பஷ்தன் கள்) மொழியாகிய 'பஷ்தூ' அங்கு விளங்கவில்லை. இதை யறிந்த நான் ஆச்சரியப்பட்டேன். இது போலவே மற்றப் பிரயாணிகளும் வியந்திருக்கின்றனர். எப்படியெனில், பஷ்தான்கள் ஆதியில் சுலைமான் மலைப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்; அவர்களில் பெரும்பாலோர் ஆப்கானிஸ்தானின் தென்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் வசித் தார்கள். ஆரம்பத்தில் காபூல் நகரவாசிகள் பெரும் பாலும் தாஜிக்குகள் (TaJiks). பஷ்தான்கள் காபூலில் குடியேறியது பிற்காலத்தில்தான். இதன் விளைவாக தலை நகரத்தில் பெர்ஸியன் மொழி தலைமை மொழியாக நிலைத்துவிட்டது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட—பஷ்தான்களுமே — இல்லங்களில் பெர்ஸியன் மொழி பேசுவார்களாம். ஆனால் சட்ட பூர்வமாக ''பஷ்தூ'' தான் ஆப்கானிஸ்தானின் அரசியல் மொழி யாக அறிவிக்கப்பட்டிருந்தது.

என்றாலும், நடைமுறையில் பெர்ஸியன் மொழி தான் அரசாங்க அலுவலகங்களில் அதிகப் புழக்கத்தில்

இருந்து. இரண்டு மொழிகளின் எழுத்தும் ஒன்றே. ஆதலின் இரண்டு மொழிகளுக்கும் ஒரே தட்டெழுத்து அச்சு (Type writer) உபயோகப்படுகிறது. முக்கியமான தஸ்தாவேஜிகள் (பத்திரங்கள்) இரண்டு மொழிகளிலும் தயாராகின்றன. ஆனால் கடிதப் போக்குவரத்துகள் பெரும்பாலும் பெர்ஸியன் மொழியில் நடைபெறுகின்றன என்பதில் ஐயமில்லை அவற்றிற்கு "பஷ்தூ"வில் மொழி பெயர்ப்புக் கிடையாது. நான் ஒரு அமெரிக்கப் பேராசிரியரிடம் "காபூல் பல்கலைக் கழகத்தில் உங்கள் மாணவர்களுக்கு எப்படிப் பாடம் சொல்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவர், "நான் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பேன். அப்பொழுது என்னுடன் பணியாற்றும் மற்றொரு பேராசிரியர் பெர்ஸியனில் மொழிபெயர்த்துக்கொண்டே போவார்" என்று பதிலளித்தார். ஏனெனில் காபூல் பல்கலைக் கழகத்தில் பெர்ஸியன்தான் பயிற்சி மொழியாக விளங்கி வருகிறது. "பஷ்தூ" மொழியானது உச்சரிப்பு முறைக்கிணங்க இன்னும் முன்னேற்றமடையவில்லை.

பஷ்தான்கள் (அதாவது இந்தியாவில் பத்தான்கள் எனப்படுபவர்கள்) ஆப்கானிய மக்கள் தொகையில் ஐம்பதிலிருந்து அறுபது சதவீதம் உள்ளனர் என்று மதிப்பிடப்படுகிறது. அவர்கள் பண்டைநாளில் சமவெளிகளில் நாடோடிகளாகத் திரிந்தவர்களே; காலப் போக்கில் நிரந்தர வாழ்க்கை முறையைத் தழுவினார்கள்; தழுவிக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அறுபது அல்லது எழுபது லட்சம் பஸ்தான்களில் சுமார் இருபது லட்சம் மக்கள் நாடோடிகளாகவே இருந்து வருகிறார்கள். ஏனையோர் நிரந்தரமாக கிராமங்களில் வசித்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பிழைப்பிற்காக நன்செய்ப் பயிர்த்தொழிலையும் ஆடுமாடு வளர்த்தலையும்

மேற்கொண்டுள்ளார்கள். பத்தான்களில் எண்பது சதவீதம் நாடோடிகளாகவும் (Kochis) உள்ளார்கள் எனலாம்.

"ஆப்கான்" என்ற பெயர் பஸ்தான்களுக்கு முதன் முதலில் வழங்கப்பட்டு வந்தது, பிற்காலத்தில்தான் தற்கால ஆப்கானியப் பிரதேசத்தின் மக்கள் எவரையுமே அந்தப் பெயர் உணர்த்தும்நிலை ஏற்பட்டது. சரித்திர பூர்வமாக, ஆப்கானியர்கள் முதலில் ஆறும் நூற்றுண்டைச் சேர்ந்த வராகமிகிரர் என்ற இந்திய வான சாஸ்திரியின் பெயர் சொல்லி (avagans) அழைக்கப்படுகின்றனர்.

பஸ்தான் கூட்டத்தாரில் சிலர் பவுண்டேஸ் (powindehs) என அழைக்கப்படுகின்றனர். அவர்களின் தலையான தொழில் வர்த்தகமே. அவர்கள் ஆண்டு தோறும் தங்கள் ஒட்டகக் கூட்டங்களுடன் இண்டஸ் பள்ளத்தாக்கிற்குள் பிரவேசித்து, தோல், ஆட்டு ரோமம், கம்பளம் முதலியவற்றைக் கொடுத்து அவற்றிற்குப் பதிலாக சர்க்கரை, தேயிலை, துணி வகைகள் முதலியவற்றை வாங்கிக் கொள்கிருர்கள். ஆப்கானிஸ்தானின் கிழக்கு ஓரப் பகுதிகளில் இக் கூட்டத்தார்கள் வசித்து வரும் சில மலைப் பள்ளத்தாக்குகள் செழிப்புக் குன்றியிருப்பதால் அவர்கள் அவ்வழியாக வரும் ஒட்டகக் கூட்டங்களைத் தாக்கி வழிப்பறி செய்து தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வது வழக்கம். கைபர் கணவாய் போன்ற பிரதேசத்தைச் சேர்ந்த அப்ரிடிஸ் (Afridis) என்ற சாதியார் இத்தகைய தொழிலுக்குப் பேர் பெற்றவர்கள். இந்தக் கிழக்குப் பிரதேசக் கூட்டங்களைச் சேர்ந்த ஒவ்வொரு சிறு பிரிவினரும் சுய அதிகாரம் உடையவர்கள். அரசாங்க அதிகாரிகளது உத்

திரவுகளை எதிர்ப்பதும் பிற கூட்டத்தார்களைச் சந்தேகிப்பதும் அவர்கள் பழக்கம்.

இரண்டாவது பெரிய கூட்டத்தார் "பெர்ஸியன்" பேசும் தாஜிக்குள் (Tajiks). இவர்கள் தோராயமாக 30 சதவீதம் மக்கள் தொகை உடையவர்கள். பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேறிய இவர்கள் பெரும் நகரத்தில் குடியிருந்துகொண்டு வர்த்தகர்களாகவும், தொழிலாளிகளாகவும் தோட்டப் பயிராளராகவும் திகழ்கிறார்கள். அநேகமாக ஒவ்வொரு நகரத்திலும் தாஜிக்குத் தொழிலாளர்கள் கடைவீதிகளில் தொழில் புரிவதைக் காணலாம். பின்னர் கொஞ்சங் கொஞ்சமாகத் தோல்வியுற்ற போதிலும், கர் (chur) மலைப் பிரதேசங்களில் சொந்த இடங்களை உண்டாக்கி யிருந்தார்கள். தில்லியிலுள்ள கரி (Ghuri) என்ற சாதியினர் இவர்களே.

மூன்றாவது கூட்டத்தார் ஹஜராஸ் (Hezeras) என்பவர்கள். இவர்கள் மங்கோலியக் கூட்டத்திலிருந்து உண்டாகி பெர்ஸியன் மொழியைத் தழுவியவர்கள். இவர்கள் மத்தியப் பிரதேசத்தில் குடியிருக்கிறார்கள்; இது ஆப்கானிஸ்தானின் செழிப்புக் குன்றிய பிரதேசமெனலாம். அவர்கள் நன்செய் புன்செய் பயிர்த்தொழில் இரண்டையுமே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளார்கள். ஆடு வளர்த்தல் அவர்களது உபதொழிலாக விளங்குகிறது. அவர்களில் பலர் குறிப்பிட்ட காலங்களிலோ, அல்லது வருடக்கணக்கிலோ சில்லறை வேலைகளின் பொருட்டு காபூல் செல்கிறார்கள். அண்மைக் காலங்களில் ஹஜராக்களில் எளிய பகுதியினர் நடோடிகளான பஸ்தான் வியாபாரிகளிடம் மிகுதியாகக் கடன்பட்டுள்ளார்கள். அவர்களில் அநேகர் தங்கள் அடமான வீடுகளை இழந்து நாடோடிகளின் வீடுகளில் வாடகைக்குக் குடியிருக்கலானார்கள். வறுமையினாலும் ஷியா

(shia) என்ற இஸ்லாமிய வகுப்பை விடாது பின்பற்றிய காரணத்தாலும் ஹெஜராஸ் கூட்டத்தார் சமூகத்தில் ஒரு கீழ்நிலையையே உடையவர்களா யிருந்தார்கள். ஹெஜராஸ் கூட்டத்தாரின் முன்னோர்கள் மங்கோலியர் கள் என்றும், இவர்கள் 13-ஆம் நூற்றாண்டிற்கும் 15-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தப் பிர தேசத்திற்கு வந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படு கிறது.

உஸ்பெக்கியர்களும் (uzbaks) துருக்கிமேனியர்களும் (Turkomans) பொதுவாக வட ஆப்கானிஸ்தானிலும் ஹிரட் மாநிலத்தின் சில பகுதிகளிலும் வசிக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு பத்துலட்சத்துக் கும் சற்று அதிகமாகவே உள்ளது. இந்த அளவுக்கு அதி கரித்தமைக்குக் காரணம் சோவியத் புரட்சிக்குப் பிறகு ரஷ்யாவின் மத்திய ஆசியாவிலிருந்து வெளியேறிய மக்கள் கூட்டங்கள் இங்கு வந்து குடியேறியதே ஆகும். உஸ்பெக்குகள் நிலையான விவசாயிகள்; துருக்கிமேனியர் களோ சமவெளிப் பிரதேசங்களில் சஞ்சரிக்கும் நாடோடி மக்கள். இரு வகுப்பாருமே தங்கள் தலையான தொழி லோடு துணைத் தொழில் ஒன்றையும் வைத்துக்கொள் கிறார்கள். துருக்கிமேனியர்கள் தேசியப் பொருளாதாரத் திற்கு உதவியாக குறைந்தது ஒரு தொழிலையாவது மேற்கொள்கிறார்கள். உதாரணமாக, "கருக்குல்" ஆடு வளர்த்தல் மிகப் பிரசித்திபெற்றதாகும். ஆப்கான் துருக்கிஸ்தான் என்று சொல்லப்படுகின்ற வடஆப்கானிஸ் தான் பொதுவாக பூகோள சம்பந்தமாகவும் மொழி அடிப்படையிலும், சமூக முறைப்படியும் ஆமுதர்யா (Amudarya) வினூடே இடம் பெற்ற சோவியத் மத்தியப் பிரதேசத்தின் விரிவேயாகும். ஆயினும், பஸ்தானியர்கள் இங்கே பெரும் அளவிற்கு அரசாங்க அநுமதியுடன்

வந்து குடியேறுவதால் மக்கள் தொகை ஓயாது மாறிக் கொண்டே வருகிறது.

பெரிய கூட்டத்தாரிடம் மட்டுமேயன்றி சின்னஞ்சிறு கூட்டத்தார்களிடத்தும் பொருளாதாரமும் சமூகவியலும் குறிப்பிட்டதொரு இயல்பான முறையில் முன்னேறவில்லை. அநேகரிடையே இன்னும் வகுப்பு முறை, நில உரிமை போன்ற பிரிவினைக் கொள்கைகள் நீடித்து வருகின்றன. நிலச் சொத்துக்கள் வகுப்பு ரீதியில் அமைந்திருந்த இரட்டை உரிமை முறையானது தனியார் சொத்துரிமை முறைக்கு மாறுன போதிலும், இந்த மாற்றம் விரைவில் ஏற்படவில்லை. 19-ஆம் 20-ஆம் நூற்றுண்டு முழுவதிலுமாக வளர்ச்சி யடைந்திருக்கிறது.

ஆனுல் 150 லட்சம் ஆப்கானியர்களின் பலத்த வகுப்பு வாத சக்திக்கு எதிராக நின்று ஈடு கொடுக்கும் வகையில் பிறிதொரு சக்தி தோன்றிற்று. அது, ஒரே மதம், நவீன தாகம் ஆகிய இரண்டு மாபெரும் அடிப்படையில் பிறந்ததாகும். 99 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் முஸ்லீம்கள். இஸ்லாமியச் சட்ட முறைக் கல்வி நிலயம் (Henefite School) சட்ட முறைகளின் அடிப்படையை வகுத்தளிக்கிறது. ஆனுல், சுதந்திரம் ஏற்பட்டதிலிருந்தே நவீன முறைச் சட்ட அமைப்பைப் பற்றிய ஆவல் தொடர்ந்து உருப்பெற்று வந்தது; இந்த ஆவல் தொழில், வர்த்தகம் முதலியவற்றைத் தழுவியே வளர்ந்து வருகின்றது. என்ருலும், வர்த்தகச் சட்டம் போன்ற சாதாரணச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குக்கூட 1942 வரை காத்திருக்க வேண்டியதாயிற்று—மிதவாதிகளின் எதிர்ப்பு அத்துணைப் பலம் பொருந்தியிருந்தது. 1921-22ல் அமனுல்லா கொண்டு வந்த (Nizam nama) என்ற புதிய தொரு சட்டம் (அதாவது நிர்வாகம், கடும் குற்றங்கள் பற்றியது), சீர்திருத்தங்

களுக்கு எதிராக உண்டான வகுப்பு வாத கலகங்களின் விளைவாக, தள்ளுபடியாக வேண்டியதாயிற்று. ஆப்கானிய நீதி மன்றங்கள் இன்னும் முஸ்லீம் மதக் குருக்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன; அங்கு அவர்களின் மதச் சட்டங்களே அமுலாகின்றன.

* * *

காபூலிலுள்ள ஆப்கானிய-பிரயாணிகளின் அலுவல் நிலையத்தில், அந்த நிலையத்தின் தலைவரைச் சந்தித்தேன். அவர் மிகப் பண்பு வாய்ந்த ஒரு ஆப்கானியப் பிரமுகர். அவர் தன்னைத் தார்சி (Tarsi) என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். உடனே அவர் யாரென்று நான் கண்டு கொண்டேன். காலஞ்சென்ற அமனுல்லா மன்னனின் மைத்துனரும் ஆப்கானியத் தேசியத் தந்தையான காலஞ்சென்ற முகமது தார்சியின் புதல்வரே இவர்.

19-ஆம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில், ஆப்கானிஸ்தானிலிருந்து நாடு கடத்தப்பட்டு, துருக்கி சுல்தானிடம் ஆதரவு பெற்று, துருக்கியில் குடியேறிய ஒரு பிரதம ஆப்கானியக் குடும்பத்தைச் சேர்ந்தவர் முகம்மது தார்சி. அவர் தன் தந்தையின் மறைவிற்குப் பின் ஒரு முறை ஆப்கானிஸ்தானுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது, அமீர் அபிபுல்லா அவரை அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார். இவர் துருக்கியிலிருந்த காலத்தில், "துருக்கிய இளைஞர் இயக்கம்" (Young Turk Movement) இவரை இழுத்துக் கொண்டது. அந்த இயக்கத்தின் விளைவாக சுல்தானிய நாகரிகம் முற்றுப் பெற்றது எனலாம். ஷேக் ஜமாலுதீன் ஆப்கானி போன்ற தற்கால மனிதர்கள் ஊக்குவித்த 'பான் இஸ்லாமியம்' என்ற முறையில் சற்றேனும் தொடர்பு வைக்காது, அந்தக் காலத்திலேயே மிக உன்னதமான கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

பெர்ஸிய மொழியைப் போலவே பிரெஞ்சு, துருக்கி மொழிகளையும் செம்மையாகக் கற்றிருந்தார். அவர் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பியபோது, அதாவது 1905ல், முதன் முதலாக, ஜாலிவர்னுவிலிருந்து பெர்ஸிய மொழியில் மொழி பெயர்ப்பைக் கொண்டு வந்தார். மேலும் "ஆப்கானிய இளைஞர்" என்ற பெயரில் முற் போக்குக் குழு ஒன்றைத் தன்வசம் அமைத்துக் கொண் டார். சீக்கிரத்தில் "ஸெராஜ்-உல் அக்பர்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றும் பொருட்டு அவரை அமீர் அழைத்து விட்டார். ஆப்கானிஸ்தான் மாநிலத்திற்கு அதுவே முதல் பத்திரிகையாகும்.

முதலாம் உலகப் போர் ஏற்பட்டபோது தார்ஸி ஆங்கிலேயருக்கு எதிரான கட்டுரைகளை வெளியிடத் துவங்கினர். இதை அமீர் எச்சரித்து வந்தார். "ஸெராஜ் உல் அக்பர்" இந்தியாவில் மட்டுமல்லாது ரஷ்யா, துருக்கி, புக்காரா முதலிய நாடுகளிலும் பரவியது. அந்தக்காலத்தில் தார்சி, மௌலனு அபுல் கலாம் அஜாத் போன்ற இந்தியத் தலைவர்களிடம் கடிதப் போக்குவரத்து நடத்தினர் என்று அவர் புதல்வர் தெரிவித்தார்.

அமீர் அபிபுல்லாவின் இரண்டு புதல்வர்களின் மாமனர் என்ற முறையில் முகமது தார்சி ஆப்கானிய நீதி மன்றத்தில் பெரும் ஆதிக்கம் எய்தியிருந்தார். 1919-ல் பூரண சுதந்திரம் வேண்டுமென்ற குரல் உண் டானது இவரது ஆதிக்கத்தின் கீழேதான். சுதந்திரம் பெற்றவுடனே சில ஆண்டுகள் வெளி நாட்டமைச்சர் பதவியைச் செவ்வனே வகித்த பின்னர், அமனுல்லாவி னுடைய ஆட்சியின் பிற்பகுதியில், அரசியல் வாழ்க்கையி னின்றும் ஓய்வு பெற்றார். பிற நாட்டில் பிறந்தது போலவே பிற நாட்டில் (அதாவது இஸ்தான்புல்லில்) இறந்தார் (1933).

பிரயாணிகள் அலுவல் நிலையத்தில் உட்கார்ந்து கொண்டு, முகமது தார்சியினது சுவை மிகுந்த வரலாற்றை அவருடைய மகனே சொல்ல, நான் கேட்டுக் கொண்டே யிருந்தேன். ஆப்கானியப் பிரமுகர் ஒருவர், தன் தாய், "ஸ்வரூபராணி" சிம்லாவில் உடல் நலமின்றித் தங்கியிருந்த காலத்தில், அவளுக்கு நாட்கணக்கில் தினந்தோறும் புஷ்பங்களும் பழங்களும் அனுப்பிக் கொண்டிருந்தார் என்று ஜவாஹர்லால் நேருஜி தனது சுய சரிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் குறிப்பிட்டது வேறு யாருமில்லை; முகமது தார்சியேதான்; பின்னர் ஆப்கானிய இயக்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சிம்லாவில் தங்கியிருந்தவரும் இவரேதான். அவருடைய மகன் தனது இளம் பருவத்தில் நிகழ்ந்த இந்த சிம்லாச் சம்பவத்தை நினைவில் வைத்திருந்தார். மேலும், ஆப்கானிஸ்தானின் ஆட்சி அமைப்புச் சட்டங்களை முதன் முதலாக எழுதியவர்களுள் முகமது தார்சியும் ஒருவர் என்பதுவும் தற்செயலாகத் தெரிய வந்தது.

பிரயாணி நிலையத்தில் நான் திருவாளர் ஜான்பஸ் காபிஸை என்பவரையும் சந்தித்தேன்; பின்னர் அவர் என்னை ஒரு மாபெரும் வர்த்தகருடைய புதல்வருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்; தற்போது அவர் காலஞ் சென்று விட்டார்.

* * *

காபூலில் நான் தங்கிய லாலாஜீயின் வீடு சாத்-இ-மைவாண்ட் (Zod-e-maiwand) என்ற ஒரு பெரிய தெருவில் இருந்தது. 1919-ல் சுதந்தரப் போராட்டத்தில் மைவாண்ட் என்ற இடத்தில் ஆங்கிலேயரை வென்றதின் ஞாபகார்த்தமாக அந்தத் தெருவிற்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டது. அந்த வெற்றியின் சின்னமாக வீதிகளின் சந்திப்பில் ஒரு ஸ்தூபியும் இருக்

கின்றது. இரவில் அதன் உட்புறங்கள் மின்சார விளக்குள் போடப்பட்டு, வர்ணங்களோடு பிரகாசிக்கிறது.

நாங்கள் இருந்த வீடு மூன்று மாடியுடையது. நாங்கள் முதல் மாடியில் தங்கியிருந்தோம். வீட்டின் சொந்தக்காரர் மேல் மாடியில் வசித்தார். மழையில்லாத காரணத்தால் காபூலில், நன்ருகக் காய்ந்த மண் செங்கல் தான் கட்டிடங்களுக்கு ஆபத்தில்லாதது. அதுதான் நாட்பட நிற்கும். காபூலில் எடுப்புக் கக்கூஸ் கிடையாது. சுகாதாரக் கக்கூஸ் ஆபூர்வம். நான் கடைசியாக நகரத்தைப் பார்வையிட்ட காலத்தின் நிலே இது. ஆனுலும், ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு கக்கூஸ் உண்டு; தெருவிலுள்ள நாய்கள் நகராட்சித் தோட்டி வேலேயைச் செய்து கொண்டிருந்தன.

குளிர்காலத்தில், காபூல் வீடுகள்தோறும் அந்நாட்டிற்கே இயல்பாக உள்ள சூடேற்றுமுறை கையாளப்பட்டது. பாதாள அறை ஒன்றில் விறகு எரிக்கப்பட்டு சூடு மிகுந்த காற்று ஒரு குழாயின் மூலம் மேலேஅனுப்பப் படுகிறது; அந்தக் காற்று, மக்கள் வசிக்கும் அறை முழுவதிலும் பரவுகிறது. இந்த முறையில் அதிகச் செலவாகும். இது பணக்காரர்களுக்கு மட்டுமே உகந்த முறை. மற்றையோர் பொக்காரீஸ் (Bokharis) எனப் படும் சூட்டடுப்பு வைத்துக்கொள்கின்றனர். இது நிலக்கரியினுல் இயங்குகிறது. இதில் வெந்நீர் தயாராகிக் கொண்டேயிருக்கும், தேநீருக்கு வெந்நீர் கிடைப்பது மன்றி, அறையில் சூடு பரவிக்கொண்டுமிருக்கும்; அறைகள் ஓரளவு வெது வெதுப்பாக இருக்கும்.

எனினும், முக்கியமாக எளிய மக்களுக்கு, மிகச் சிறந்த சூடேற்றுமுறை சந்தாலி (Sandali) என்பதே

யாகும். அதாவது பாத்திரம் ஒன்றில் கரித்தூள் எரிந்து கொண்டேயிருக்கும். இரவில் அந்தப் பாத்திரம் அறையின் நடுவில் ஒரு தாழ்ந்த ஸ்டூலின் கீழ் வைக்கப்பட்டிருக்கும். அதன் மேல் ஒரு பெரிய விரிப்பு விரிக்கப்படும். வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் அந்தப் போர்வைக்குள் நுழைந்து கொள்வார்கள். அப்படியே தூங்கியும் விடுகிறார்கள். சந்தாலி (Sandali) இரவு முழுவதும் எரிந்து, மக்களை வெதுவெதுப்பகா வைக்கிறது; செலவும் மிதமே. 1962-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், பகலில் பொக்காரியின் உதவியாலும் இரவில் சந்தாலியின் உதவியாலும் காபூலில் காலங்கழித்தது நன்கு நினைவுக்கு வருகிறது. அந்தக் குளிர்காலத்தில் காபூலின் சாலையோரங்களில் பல விடங்களில் உறை பனி காணப்பட்டது. அதைவிடக் கொடிய பனிநாட்களும் உண்டெனக் கேள்வி; அந்த அநுபவம் எனக்கு ஏற்படவில்லை.

காபூலிலேயே பெரிய கடை மைவாண்ட் ஸ்தூபிக்கு அருகிலேயே உள்ளது. அது, ஆப்கானிஸ்தானின் பண்டைத் தொழில் நிபுணர்களில் ஒருவரான காலமான அப்துல் அஜிஸ் லண்டனி என்பவரின் குடும்பத்திற்கு உரியது. நான் அந்தக் கடைக்குச் சென்றேன்—இறக்குமதிச் சரக்குகள் எவற்றையும் வாங்கும் பொருட்டல்ல, லண்டனியின் மகன் திருவாளர் ஜான்பஸ் கபிஸை என்பாரைக் கண்டு அவருடன் உரையாடும் பொருட்டே சென்றேன், அவர் எனக்குப் பழக்கமானவர்.

ஆப்கானிஸ்தானின் நவீன வர்த்தக முறைகளின் சரித்திரமே 1930க்குப் பின்புதான் தொடங்கிற்றெனலாம். அமனுல்லாவின் காலத்தில் பாங்கி முறையின்மையால், பணப் பாதுகாப்பு மிகவும் பாதிக்கப்பட்டது. ஆகவே, 1932ல் ஆப்கானியப் பிரபல வர்த்தகர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நடந்த ஒரு சந்திப்பில், பாங்கி ஒன்று

நிறுவனம் செய்யவேண்டும் என்று தீர்மானமாயிற்று. பாங்கி முறைக்கு மதவாதிகளால் பெருத்த எதிர்ப்புக் கிளம்பியது. அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இந்த பாங்கிற்கு "மில்லி பாங்கி" எனப் பெயர். இது பாங்கி வரவு செலவு மட்டுமேயன்றி வணிக முறை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பாங்கிமில்லி, ஏராளமான தனி உரிமைகளை எய்தியதோடு ஆண்டுதோறும் பெருத்த லாபம் ஈட்டிக்கொண்டிருந்தது; மிக முக்கிய ஏற்றுமதி இறக்குமதிகளிலும் அந்நிய நாட்டு வர்த்தகத்திலும் தனி உரிமை பெற்றது. புது 'ஷர்க்கத்' (Conpanies) களில் சேர்ந்து அவற்றின் பங்குகளை வாங்கத் தொடங்கிற்று. தன் பங்குகளையும் விற்றது. இப்படி பங்கு பரிமாறப்படும் நிலை அதிகரிக்கவே, பலருடைய நலன்களும் நன்முய்ப் பின்னியிணைக்கப்படும் முறை தவிர்க்க முடியாத நிலையில், பாங்கிமில்லி உச்சத்திலிருந்தது. பொருளாதார வலு பாங்கியின் குறிப்பிட்ட ஒரு சில சீமான்களின் கைக்குள் அமைந்தது. பாங்கி மில்லியின் பொருளாதார வலுவைக் கண்டு அரசாங்கமே அஞ்சி தனி உரிமை ஆதிக்கத்தை உடைத் தெரியவும் பிரபல தொழிற்சாலைகளில் ஏராளமான பங்குகளை வாங்காவும் முடிவு செய்தது. பாங்கியில் தொடர்பு கொண்ட வர்த்தகர்களில் அப்துல் அஜீஸ் ஒருவர். அவர் லண்டனில் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததால் அவருக்கு லண்டனி என்ற பட்டப் பெயர் வழங்கி வந்தது. அவர் ஐக்கிய நாட்டிற்குள் கருக்குல் ஏற்றுமதி செய்வதின் மூலம் பெரும் பணம் ஈட்டினூர். வட ஆப்கானிஸ்தானில் பருத்தி உற்பத்திக்கென உண்டான புதிய ஆப்கான் பருத்திக் கம்பெனி என்ற நிறுவனத்திற்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆனூல் இந்தக் கம்பெனி அவரது குடும்பத்தினர் ஆதிக்கத்திற்கு வரவில்லை. பின்னர் பங்குகளில் அநேகம், அரசாங்கத்தாரால் வாங்கிக்

கொள்ளப்பட்டன; அது அவர்களின் அப்போதையக் கொள்கையாயிற்று.

லண்டனியின் அரசியல் ஈடுபாட்டுச் செயல்கள் பற்றி வாதிக்கவோ வறண்ட விவாதங்களை மேற்கொள்வதைவிட நான் அவர்கள் நாட்டைப்பற்றி ஆய்வு செய்வதையே அவர்கள் மிகவும் விரும்பினார்கள். மறுநாள் காபூலின் எல்லைப்பக்கம் நடைபெற இருந்த ஒரு வன விருந்து அழைப்பிற்கு உடன்பாடு தெரிவிக்கும்வரை என்னை அவர்கள் விடவில்லை.

சார்டிஹறி அவர்களது தோட்ட வீடு (வன விடுதி) காபூலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ளது. அவர்களின் சொந்தக் காரில் அங்கு சென்றேன். விருந்து வைக்கும் திரு. அப்துல் காதிர் என்பவரும் அவரது மூன்று நண்பர்களும் என்னுடன் வந்தார்கள். தோட்டம் முழுவதிலும் ஆப்பிள் மரங்கள் நிறைந்திருந்தன. இடையிடையே பிளம் என்னும் ஒருவகை மரங்களும் நிறைந்திருந்தன. தோட்டத்திற்கு 'காரஸ்'யினால் நீர் பாய்ச்சப் பட்டது. அது ஐந்து மைலுக்கப்பாலிருந்து தண்ணீரைக் கொணர்ந்தது.

காரஸ் நமக்கு ஆச்சரியம் தரக்கூடியதொன்று. மலைச்சரிவிலுள்ள பிரதேசங்களின் தண்ணீரையெல்லாம் இழுத்துக்கொள்ளும் முறையில் சாமர்த்தியமாக வெட்டப்பட்ட ஒரு பாதாள வாய்க்காலே அது. அது 50 அடியிலிருந்து 80 அடிவரை ஆழத்தில் துவங்கி 300 அடி ஆழம்வரை பாய்ந்து தண்ணீரைக் கொண்டு போகிறது. இதே முறையில் நெடுந்தொலைக்குத் தண்ணீரைக் கொண்டு செல்கிறது. இம்முறை 'ஆப்கானிஸ்தானில் அதிகம் கையாளப்படுகின்றது. அல்லது காற்றில் ஈரமின்மையால் தண்ணீரெல்லாம் ஆவியாக மாறிவிடுமே. தண்ணீர் தடங்கலின்றி ஓடும்பொருட்டு

காரஸ் அடிக்கடி பழுது பார்க்கப்படுகிறது. ஆகவே காரஸ் வெட்டும் பொருட்டுத் தரைமட்டத்திலிருந்து தோண்டப்பட்ட கிணறுகள் வேண்டும்போதெல்லாம் மனிதர் இறங்குவதற் கேதுவாக செம்மையாகப் பாது காக்கப்படுகிறது.

வனபோஜனத்தின்போது, நிலா வெளிச்சத்தில் நீந்துதடாகத்தின் அருகே அமர்ந்திருந்தோம். மிகத் திருப்திகரமாக விருந்து நடைபெற்றது. கதை சொல்வதிலும் வேடிக்கைப் பேச்சிலும் பிரசித்தி பெற்ற ஆப்கானியப் பிரமுகர் ஒருவர் தனி அழைப்பின்பேரில் அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய பேச்சுக்களிஞல் நள்ளிரவுவரை விருந்தைச் சுவைத்துப் பொழுதைப் போக்கிஞேம்.

*　　　*　　　*

காலப்போக்கில் வேறு பல மக்களேயும் காபூலில் சந்தித்தேன். அவர்கள் உயர்திரு அப்துஸ் சத்தார் சாலிஸி (திட்டத் தலைவர்) காபூல் பல்கலைக் கழகப் பேராசிரியர் முகமது அலி, "டிசட்" ஆசிரியர் ஸையத் சுல்தான் அமதி ஆப்கானிஸ்தான் பாங்கியின் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த அப்துல் ஹகீம் ரங்கின், காபூலிலேயே பெரும் பணக்காரராக மதிக்கப்படும் ஷாஸதா அப்துல் அஜீஸ் என்பவர்களே. இவர்களில் ஒவ்வொருவரும் என்னிடம் அன்புடன் நடந்து கொண்டனர். ஒவ்வொரு ஆப்கானிய உள்ளத்திலும் இந்தியாவின்மீது நல்ல எண்ணம் நீடித்து வளர்வதை எங்கும் கண்டேன்.

அத்தியாயம் 4

# ஹிந்துக்குஷ் பிரதேசம்

"ஆ, தெய்வமே! நாட்டில் பொன்னும் பொருளும் இல்லாதொழியினும் ஒழியட்டும்; பனி இல்லாது போக வேண்டாம்" என்பது ஒரு ஆப்கானியப் பழமொழி. மழை குறைந்த ஆப்கானியப் பிரதேசங்களில் பனியின் முக்கியத் துவத்தை உணர்த்துவதே இந்தப் பழமொழி. ஆப்கானிஸ் தானை வடபகுதி தென்பகுதி என்று இரண்டு பகுதி களாகப் பிரிக்கிறது ஹிந்துக்குஷ் மலைத்தொடர். ஆப்கா னிஸ்தானின், நில நீர்வளங்கள் இந்த மலைத்தொடரைப் பொறுத்தனவேயாகும். மலைத்தொடர் வடகிழக்கு முனையில் 6000 மீட்டருக்கு மேல் உயர்ந்து, மேற்கு நோக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகச் சரிந்து செல்கின் றது. முடிவாக 600 மீட்டருக்கு மேற்போகாத தாழ்ந்த குன்றுத் தொடர்களாக மாறி விடுகின்றன. ஆப் கானிஸ்தான் தேசப்படத்தில் வளைந்து காணப்படும் இந்த மலைத்தொடர் பெரும்பாலும் வெறுமையானதே. ஆனால் அவற்றின் மிக உயர்ந்த சிகரங்களில் விழும் பனியானது நதிகளை நீரினால் நிரப்புகின்றது.

இந்தப் பிரதேசத்திற்கு வடக்கே வடஆப்கானிஸ் தான் சமவெளி உள்ளது. தெற்கிலும் தென்மேற்கிலும் பாலைவனப் பிரதேசம் கிடக்கின்றது. அதில் அங்கொான்

றும் இங்கொன்றுமாகச் சோலைகள் காணப்படுகின்றன; குறுகிய பள்ளத்தாக்குகளும் ஆங்காங்கே உள்ளன. பாலைவனச் சோலைகளிலும் நதிப் பள்ளத்தாக்குகளிலும் உள்ள சுமார் 24000 கிராமங்களில் ஆப்கானியர் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இந்தப் பிரதேசங்களின் ஓரங்களிலுள்ள புல்வெளிகள் ஆடு மாடுகள் மேய்வதற்கு உகந்த நிலமாக விளங்குவது, மட்டுமின்றி ஒவ்வொரு வசந்தகாலத்திலும் நாடோடிக் கூட்டத்தார் இங்கே வருவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளன. ஆயின், இந்தத் தாழ்ந்த வறட்டுப் பிரதேசங்களால் கோடைக்காலத்திலும் முதுவேனிற் காலத்திலும் ஆடு மாட்டினங்களுக்கு ஈடுகொடுக்க முடிவதில்லை. மேலும் நிலையான வேளாண்மை, தண்ணீர் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் நாடோடி வாழ்க்கை நீடித்துக்கொண்டே யிருப்பதற்கு இதுவே காரணம். ஆப்கானிஸ்தானின் மொத்த நிலப்பரப்பில் 12 சதவீதம் மட்டுமே பண்படுத்தப்படுகிறது. மற்றும் 12 சதவீதம் பிற காரியங்கட்குப் பயன்படுத்தப்படுகிறது; ஆக, நாட்டின் மொத்தப் பரப்பில் முக்கால் வாசிக்குமேல் (2,45,000 சதுர மைல்) எந்தமுறையிலும் பயன்படாததாக உள்ளது.

ஆப்கானிஸ்தானின் நிலப்பகுதியிலும், சாலைகள் நன்கமையாக் குறையினுல் போக்குவரத்து அபிவிருத்தி மிகவும் தடைப்படுகிறது. இதனுல் தேசீய மார்க்கெட் அமைப்பும் வளர்ச்சியும் தாமதமாகின்றது. ஆரத் மாநிலத்திலிருந்தும் வடக்கு ஆப்கானிஸ்தானிலிருந்தும் ரஷ்யன் எல்லையைத் தாண்டி போக்குவரத்துப் பாதைகள் சென்று ரஷ்யாவின் குஷ்கா, தர்மாஸ் என்னும் இருப்புப் பாதை நிலையங்கள் வரை எட்டுகின்றன. மறுபுறத்தில் தெற்கு ஆப்கானிஸ்தானிலிருந்து பழைய பாதைகள்

இந்திய எல்லைகளினூடே (தற்போது பாகிஸ்தான்) சென்று பாகிஸ்தானின் இருப்புப்பாதைத் திட்டங்களைச் சாமன், பெஷாவர் முதலிய இடங்களில் சந்திக்கின்றன. ஹாரத்திலிருந்து ஈரானின் மேஷட்வரை செல்லும் பாதை 1962வரை முக்கியத்துவம் அடையவில்லை. 1962ல்தான் அதற்கு முக்கியத்துவம் உண்டாயிற்று. இவ்வாறு, தேசமானது தேசீய—உலக அடிப்படையில் இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. பண்டைக் காலத்தில் வட ஆப்கானிஸ்தானும் ஹாரத் பிரதேசமும் வர்த்தகத்திற்கு ரஷ்யாவையே நம்பியிருந்தன; தெற்கு ஆப்கானிஸ்தானோ இந்தியத் துணைக் கண்டத்தை எதிர் நோக்கியிருந்தது.

ஹிந்துக்குஷ் மலையின் இருமருங்கிலுமுள்ள பகுதிகளை இணைக்கவல்ல வண்டிப்பாதை எதுவுமே இல்லாதிருந்தது. காபூல் மற்றெல்லா நகரங்களுடனும் சாலைகளால் இணைக்கப்பட்டிருந்ததெனினும் அந்தச் சாலைகளெல்லாம் கரடு முரடானவையாயும் அடிக்கடி வெள்ளப் பெருக்காலும் பனியாலும் தடைபடுவனவாயும் இருந்தன. காபூலிலிருந்து இந்திய எல்லை வரை ஓடும் பாதைகள் மட்டுமே (அதாவது தில்லிச் சக்கரவர்த்திகள் தங்கள் ராணுவப் போக்குவரத்திற்காகப் போட்டு வைத்திருந்த பாதைகள்) ஒழுங்கான போக்குவரத்திற்கு உதவுவனவாக உள்ளன. 1915ல் முதன் முறையாக அமீர் அபிபுல்லா வாங்கிய பதினைந்து மோட்டார் வண்டிகளுமே இந்தப் பாதைகளில் இயங்க இயலாது போனது ஒரு சுவையான செய்தியாகும். பாதைகள் அவ்வளவு மோசம்! பெஷாவருக்கும் காபூலுக்கும் உள்ள 180 மைல் தூரத்தை அந்தக் காலத்தில் மிக உயர்ந்த வகைக் குதிரைகள் 7 நாளில் கடக்கக் கூடும்; சாதாரண முறையில் கடப்பதென்றால் 14 நாள் பிடிக்கும். முதல் கம்பளித் தொழிற்சாலைக்கான இயந்-

திரங்களை யானைகளால் இழுக்கப்பட்ட தனி வண்டிகளில் காபூலுக்குக் கொண்டு செல்ல வேண்டியதாயிருந்தது.

நல்ல காலமாக, போக்குவரத்துச் சங்கடங்கள் துரிதமாக நீக்கப்பட்டு வருகின்றன. எல்லாக் காலங்கட்கும் பொருத்தமான சாலைகள் இரு மடங்கு அதிகரித்து விட்டன. 1929க்குப் பின்னால் போக்குவரத்து வண்டிகளின் எண்ணிக்கை சுமார் 20 மடங்கு அதிகரித்து விட்டது. முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் போது போக்குவரத்துச் சாலைகளின் தர மாறுதல் மிகவும் குறிப்பிடத்தக்கது. தற்போது சுமார் 3000 கிலோ மீட்டர் அளவுக்கு நவீன முறைச் சாலைகள் அமைந்துள்ளன. நவீன முறைச் சாலை, அமைப்புச் செலவு இனத்தைக் குறைப்பதாக உள்ளது; வர்த்தகத்தை அதிகரிக்க ஏதுவாக உள்ளது. இது பெட்ரோல் தேவையையும் அதிகரித்து எண்ணெய் தேடும் நிலையையும் கொணர்ந்துள்ளது. ரஷ்ய உதவியால் பெட்ரோலிய விநியோகம் அபிவிருத்தி செய்யப்படுமேல், ஒரு போக்குவரத்துக் கம்பெனி பெட்ரோல் வினியோகத்தில் முனைந்து விடும். இது இன்றைய நவீன நாடுகளில் ஒரு காலத்தில் இருப்புப் பாதைக் கம்பெனியார் செய்ததைப் போன்றது.

காபூலுக்கு இரண்டாவது முறை நான் வந்தபோது, காடு முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற பெரிய திட்டம் வைத்திருந்தேன். உதாரணமாக, வடகிழக்கிலுள்ள பதக்ஸான் வரை செல்ல மனம் நாடிற்று. மேலும் குவாந்தகாருக்கு மேற்கேயுள்ள பெரிய பாலைவனத்தைக் கடந்து செல்ல ஆசைப்பட்டிருந்தேன்; ஆனால் ஆப்கானிஸ்தானின் போக்குவரத்துச் சங்கடங்களைப் பார்த்தபொழுது என் திட்டங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. காபூலுக்கு வெளியே

உள்ள இடங்களுக்குச் செல்வதென்றால் முதிர்-இ-விஸா (Director of Vision)வையும் இ-தக்காலியட் (Home ministry)டையும் பார்த்து அனுமதி பெற வேண்டும். இதன் பொருட்டு நான் பன்முறை செல்ல வேண்டிய தாயிற்று. வெளித் தங்கலுக்கு உதவியாக "புஷ்டு" வில் தட்டச்சில் (டைப் அடித்தது) எழுதிய ஒரு தனி அனுமதி கிடைத்தது. அதனால் நான் வட ஆப்கானிஸ்தான் செல்ல அனுமதிக்கப்பட்டேன். அதற்குரிய அலுவலக உதவியாளர் நான் இரண்டு வாரத்திற்குள் காபூலுக்குத் திரும்பி விட வேண்டும் என்று விளக்கினர். எந்த இடத் திலுமே 24 மணி நேரத்திற்குமேல் தங்க நேரிட்டால் காவல் துறையினர்க்கு (Police) அறிவித்துவிட வேண்டு மெனவும் சொல்லப்பட்டது. வெகு தொலைவிலுள்ள பதாக்ஸானுக்குப் போக நான் அனுமதிக்கப்படவில்லை.

நான் முதலில் சென்றடைந்த இடம் புல்-இ-கும்ரி என்பதே. இதுகாபூலிலிருந்து 246மைல்களுக்கப்பாலுள்ள ஒரு சிறிய தொழிற்சாலை மிகுந்த நகரம். வாரத்தின் குறிப்பிட்ட சில நாட்களில் தபாலுக்கென்றும் பிரயாணி களுக்கென்றும் ஒரு மோட்டார் ஊர்தி (Bus) காபூலுக்கும் புல்-இ-கும்ரிக்கும் இடையே ஓடிற்று. நான் இந்த மோட்டார் ஊர்தியைத் தவற விட்டு விட்டு ஒரு மோட்டார் சாமான் வண்டியைப் பிடித்தேன்.

காலை 9 மணியளவில் நாங்கள் புறப்பட்டோம். பொடி நிறமுள்ள வெறுமையான குன்றுகளால் சூழப் பட்ட காபூல் பள்ளத்தாக்கினூடே சென்றோம். இந்தக் குன்றுகள் எந்தத் தாவர வர்க்கமும் இன்றி வெறுமையா யிருந்தன. ஆனால் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் நதி யோரங்களில் குறுகிய பசுமை நிலம் தொடர்ந்து சென் றது. அதில் சேனர் மரங்கள், பழமரங்கள் தானிய வயல்கள் வரிசையாகக் காணப்பட்டன.

பெட்ரோல் எடுக்கும் பொருட்டு சாக்ஞரில் பிரயாணத்தை நிறுத்திஞேம். ரஷ்யர்களால் கட்டப்பட்ட பெரிய பெட்ரோல் நிலயங்கள் நண்பகல் வெயிலில் மின்னின! சுற்றுச் சுவருடைய ஒரு மல்பரித் தோட்டத்தினருகில் நின்று அங்குள்ள பாசனக் கால்வாயைக் கவனித்தேன். அதன் வழியாக ஆற்றுநீர் தோட்டத்திற்குக் கொணடுவரப்பட்டது. நதியின் இருமருங்கிலுமுள்ள கோதுமை வயல்களும் என் கண்களுக்கு தென்பட்டன.

சாக்னர் காபூலிலிருந்து 40 மைல் தொலேவில் உள்ளது. அது பர்வான் மாநிலத்தின் தலைநகர். சக்ஞரிலிருந்து மேற்கு நோக்கி, கோர்பந்து நதிப் பள்ளத்தாக்கைக் கடந்து பயணத்தை மீண்டும் தொடர்ந்தோம். இந்துக் குஷின் மத்தியில் இந்தப் பள்ளத்தாக்கு அகலத்தில் மிகக் குறைவாக உள்ளதெனினும் நீளத்தில் 70 மைல் கொண்டது. மேலும் இது ஜனநெருக்கம் உள்ளதாகத் தெரிகிறது.

சியாகரில் சாப்பிடும் பொருட்டு வண்டியை நிறுத்திஞேம். தேநீர் விடுதியின் அமைப்பு விநோதமானது. சாலேயோரச் சேஞர் மரங்களுக்குப் பின்ஞல் பழமரத் தோட்டத்திஞூடே அமைக்கபபட்டிருந்தது. ஆப்கானிய தேநீர் விடுதிகளின் இயல்பிற்கிணங்க, அங்கே எவ்வித மரச்சாமான்களோ இரும்புச் சாமான்களோ உட்காரும் வசதிகளோ கிடையா. ஒன்றரை அடி உயரமுள்ள மேடையில் சமுக்காளம் விரித்திருக்கும். அதிலேதான் உட்காரவும், சாப்பிடவும் வேண்டும், சிலர் ஒருமூலேயில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். தேநீர் விடுதி மிகவும் விருவிருப்பாகக் காட்சியளித்தது. பான பாத்திரமும் தின்பண்டங்களும் அங்கு அலங்காரத்தோடு விளங்கின. எனது வண்டிக்காரன் சொற்படி எங்களுக்கு நேன் (ஒருவகைச்

சப்பாத்தி) கறி இவை கொண்டு வரப்பட்டன: பின்பு தேநீர் வந்தது.

ஆப்கானிஸ்தானில் தேநீர் விடுதியானது ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும், ஆண்கள் சந்திக்குமிடமாக வுள்ளது. அதன் வேலை, வருபவர்கட்குத் தேநீர் கொடுப்பதோடு மட்டும் நிற்காமல் இன்னும் மிகுதியான அளவு தொடரும். தொலைவிலுள்ள கிராமாந்திரங்களில் சகல விதமான செய்திகளுக்கும் கிராமவாசிகள் அந்த விடுதிகளையே நம்பியிருக்கிறார்கள். அவர்கள் பந்தலின் கீழ், காலை மடக்கிக்கொண்டு மணிக்கணக்கில் உட்கார்ந்திருப்பார்கள். பான பாத்திரமும் சிறு சிறு கோப்பைகளும் தேநீர்த் தவலையும் அங்கே காட்சியளிக்கும்.

ஆப்கானியர்கள் காரமான தேநீர் அருந்துவதில்லை. நம்மைப்போல் அவர்கள் பால் சேர்த்துக் கொள்வதுமில்லை. முதலில் ஊற்றும் தேநீரில் மட்டும் சர்க்கரை போட்டுக் கொள்வார்கள்; தொடர்ந்து சர்க்கரையின்றிப் பல கிண்ணங்கள் பருகி விடுவார்கள். நான் ஒவ்வொரு முறை குடித்து முடிந்ததும் நண்பன்—வண்டிக்காரன்—கிண்ணத்தைத் தவறாது மீண்டும் நிரப்புவான். அப்பொழுது அவனை எப்படித் தடுப்பது என்று எனக்குத் தெரியாது. பிற்பாடு தெரிய வந்தது; போதும் என்று தெரிவிக்க வேண்டுமென்றால் கிண்ணத்தைத் தலை கீழாகக் கவிழ்த்து வைத்துவிட வேண்டும். இன்னும் சில கூட்டங்களில் "பஸ்" (போதும்) என்ற சொல்லை உச்சரித்துவிட வேண்டும்; வருபவர்களுக்குத் தேநீர் வழங்கப்படும்; அதை வாங்கிக் கொள்ள மறுப்பது நல்ல பழக்கமில்லையென்று கருதப்படுகிறது.

சாப்பாட்டிற்குப் பின்பு, என் நண்பன் நதியோரம் ஒரு சேனார் மரவரிசைப் பக்கம் தொழுகைக்காகச் சென்றான். நான், விடுதிக்கு வந்திருந்த ஒருவருடன் அரை

குறை உருதுவில் பேசிக் கொண்டிருந்தேன். அந்த மனிதன் சாரஸ் இனத்தைச் சார்ந்தவன். அவர்கள். செங்கிஸ்கானின் போர்வீரர்கள் பரம்பரையில் உதித்தவர்கள் என்று பெருமை பாராட்டுவதுண்டு. இந்த வகுப்பினர் தற்காலத்தில் ஆப்கானிஸ்தானில் சுமார் அரைமில்லியனுக்குக் குறையாது உள்ளனர்.

அந்த மனிதனைப் பார்த்து நான் "நீ எப்படி உருது கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டேன். அதற்கவன் "திரைப்படக் கொட்டகைகளுக்கு அடிக்கடி போவதன் மூலம்" என்று பதிலளித்தான். ஆப்கானிஸ்தானில் படத் த்யாரிப்பு நிலையம் கிடையாதாகையால் இந்துஸ்தானிப் படங்களே அங்குக் காட்டப்படுகின்றன, ஆங்கிலப் படங்களையும் ரஷ்யப் படங்களையும்விட இந்தியப் படங்களை அதிகமாக மக்கள் விரும்புகிருர்கள். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, உருதுவுடன் கலந்த ஆப்கான் மொழிப்பற்று. மற்ருென்று இந்திய இசையுடன் கூடிய ஆப்கான் மொழிப்பற்று. படக்கொட்டகைகளிலேயே ஆப்கானிஸ்தானியர்கள் உருது, இந்துஸ்தான் முதலிய இன்னிசைகளைக் கற்றுக் கொள்கின்றனர். சமுத்திர மட்டத்திற்குமேல் 17,000 அடி உயரத்திலுள்ள சலாங் கணவாயின் ஊடே உள்ளதுதான் சக்ருருக்கும் புல்-இ-கும்ரிக்கும் குறுக்கு வழியாகும். அதுவரை இந்தக் குறுக்குவழி பழக்கத்தில் இல்லாமையால் சுற்றுவழியொன்றைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஆனல் இப்பொழுது சலாங் வழி பழக்கத்திற்கு வந்து விட்டது என்று கேள்விப்படுகிறேன். ரஷ்யப் பொறியியலறிஞர்கள் (Russian Engineers) இந்துக்குஷ் மலையைக் குடைந்து மூன்று மைல் நீளச் சுரங்கம் வெட்டுவித்து காபூலுக்கும் புல்-இ-கும்ரிக்குமுள்ள தூரத்தை 80 மைல் குறைத்துள்ளனர்.

என்றாலும் நான் பழைய பாதையிலேதான் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அது ஒருமுக வழி; சக்னருக்கு அப்பாற்பட்ட பகுதி கரடு முரடானது. இருட்டுக்குச் சற்று முன்பு, 9800 அடியுயரத்தில், ஷிபார்க் கணவாயைக் கடந்தோம். ஷிபார் கணவாயைக் கடந்த பெரிய வடக்குப் பாதையானது 1933ல் முற்றுப் பெற்றது. ஹிந்துக்குஷுக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள பாகங்களை இணைத்த முதல் வண்டிப் பாதை இதுதான். 1933க்கு முன்பு சாமான்களுடன் ஒட்டகங்கள் மட்டுமே மலையைக் கடக்க உதவின.

மிகவும் இருட்டாகுமுன்பே ஷிபார்க் கணவாயைக் கடந்ததுபற்றி நான் மகிழ்ச்சி யடைந்தேன். சிலமணி நேரம் இருளில் சென்ற பின்பு இராத் தங்கலுக்குகந்த இடமொன்றைத் தெரிந்து கொண்டேன். அது ஒரு சாலையோரத் தேநீர் விடுதியே. ஆப்கானியத் தேநீர்விடுதி பிரயாணிகளுக்குத் தங்குவிடுதியாகவும் உதவும். இங்கே பயணத்தால் அலுப்புற்றவர்கள் "சர்ப்பைஸில்" துயில் கொள்ளலாம். ஆகவே நான் திறந்தவெளியில் மத்திய ஆசிய நீலவானத்தின் கீழே சர்ப்பைஸ் ஒன்றில் தாராளமாகப் படுத்தேன். புக்காரா, கிவா, சோமர்க்கண்ட் ஆகிய இடங்களிலிருந்து இந்துஸ்தானத்திற்குச் செல்லும் வர்த்தகர்கள், போர்வீரர்கள் முதலியவர்கள் நடந்துசென்ற பழைய ஒட்டகப் பாதையின் கவர்ச்சியை உணர்ந்தேன்.

அதிகாலையில் எங்கள் வண்டிக்காரன் தொழுகையை முடித்துக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினான். அதே நிலக்காட்சி தொடர்ந்தது. இந்துக்குஷ் வெறுமையாகக் காணப்பட்டது. ஆனால் நதியோரங்களில் சேனார் மரவரிசைகளும், கதிர் நிறைந்த வயல்களும் திராட்சைத் தோட்டங்களும் தென்பட்டன. ஒரேவகைக் காட்

சியே தோன்றினாலும் அது ரம்மியமாக இருந்தது. பாபர் சக்கரவர்த்தியின் சுயசரிதத்தில் இடம்பெற்ற ஆப்கானிஸ்தானின் வர்ணனை எனக்கு நினைவுக்கு வந்தது. அவருக்கு ஆப்கானிஸ்தானின் பள்ளத்தாக்குகள் மீதுள்ள அன்புணர்ச்சியை நான் ஊகிக்க முடிந்தது. இந்த நாட்டை அவர் எவ்வளவாக நேசித்தார் என்றால், தான் இறந்தவுடன் தன் உடல் காபூல் பள்ளத்தாக்கில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கும் அளவுக்கு நேசித்தார். ஆகையால் அவர் இறந்தவுடன் அவரது சடலம் ஆக்ராவிலிருந்து காபூலுக்கு (ஈமச்சடங்குகளின் பொருட்டு) கொண்டு வரப்பட்டது; அவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கச்சிதமான சலவைக்கல் கட்டிடம் எழுப்பப் பட்டுள்ளது. இது காபூலின் கோடியில் குன்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. காபூலுக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் இதனைப் பார்ப்பதுண்டு.

நாங்கள் மதியம் 1 மணி அளவில் அதாவது காபூலை விட்டுப் புறப்பட்டதிலிருந்து 28 மணி நேரத்திற்குப் பின்பு புல்-இ-கும்ரியை அடைந்தோம். ஆப்கானிய வண்டிக்காரன் பிரிவுப் பயணம் சொல்லிக் கொள்ளும் போது என்னை மார்புறத் தழுவிக் கொண்டான். உள்ளூர்த் துணி உற்பத்திசாலையின் தங்குவிடுதிக்குச் செல்லும் பொருட்டு தங்கா (ஒற்றைக் குதிரைவண்டி) ஒன்றை அமர்த்திக் கொண்டேன். காபூலிலுள்ள இந்தியத் தூதுக் குழுவினர் அதுபோழ்து வட ஆப்கானிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்ய வந்திருந்தார்கள். அவர்களை நான் அங்கே சந்திக்கத் திட்டமிட்டிருந்தேன். இந்தப் பிரதேசத்தின் மற்றொரு பெயர் ஆப்கன்—துருக்.

கிஸ்தான் என்பது. அமுதர்யாவின் மறுபுறத்திலுள்ளது ரஷ்யன் துருக்கிஸ்தான் ஆகும்.

* * *

ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மை மக்கள் ஹிந்துக் குஷுக்குத் தெற்கே வசித்தபோதிலும், பொருளாதாரக் கண்ணோட்டம் வடக்கேதான் செலுத்தப்பட்டது. புன்செய்ப் பயிர்த்தொழிலின் மூன்றிலிரண்டு பகுதி, வட ஆப்கானிஸ்தானில்தான் உள்ளது. அங்கேதான் பருத்தி, சர்க்கரை, காரக்குல், போர்வை, கரி ஆகியவையெல்லாம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அண்மையில், பெட்ரோல் கண்டுபிடிப்புக்கூட அங்கேதான் நடைபெற்றது. ஆப்கானிஸ்தானின் தொழில் இயக்க முறையின் உண்மையான அடிப்படையைக் காண்பதெனில் இந்தப் பிரதேசத்தை நேரில் காண்டல் இன்றியமையாததாகும்.

இந்தப் பிரதேசம் அமுதர்யாவினாலும் அதன் உபநதிகளினாலும் செழிப்படைகின்றன, 700 மைல் தூரத்திற்கு ஆப்கானிய எல்லைபோல் அமைவுறும் அமுதர்யாவானது, பாமிரின் பனிக்கட்டிப் பிரதேசத்தினின்று புறப்படுகிறது. நதியானது சமவெளியை யடைந்தபின் ஆப்கானிய நிலப்பரப்பிலிருந்துவந்து கலப்பவை இரண்டு உபநதிகளே—அவை கோக்சாவும்—குண்டஸும் ஆகும். ஹிந்துக்குஷிலிருந்து வரும் ஏனையச் சிற்றாறுகளெல்லாம் நிலப் பாசனத்தின் பொருட்டு வற்றிப் போகின்றன. அவை எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் போய்ச்சேருமுன்னம் அவற்றை வறண்ட பூமி (பசிமிக்க நிலம்) உட்கொண்டு விடுகின்றது. அமுதர்யாப் பள்ளத்தாக்கு நீர்வளம் கிட்டிய இடங்களில் செழித்து விளங்குகிறது;

பரந்த பாலை நிலத்தில் சோலைவனங்களாகவும் விளங்குகிறது. இந்தப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்க்கையில், புராதன பாக்டீரியாரின் குடியேற்றத்தை ஊக்குவித்த் பழைய பாசனத் திட்டங்கள் தக்க காலத்தில் அதனை மீண்டும் ஜன நெருக்கமுள்ள பிரதேசமாக்கி விடும் என்று நான் உணர்ந்தேன்.

அத்தியாயம் 5

# தொழில் மயமான வடபகுதி

நமது தூதுவக் கூட்டத்தாருடன் துணையாகச் செல்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அதனால் நான் இரட்டை நன்மை யடைந்தேன். ஒன்று அவர்களுடைய மொழி பெயர்ப்பாளரின் உதவி கிடைத்தது; மற்றொன்று எனக்கிருந்த மிகக் குறைந்த காலத்தில் சுற்றிப்பார்க்கும் செயலில் மிகுந்த பலனைப்பெற முடிந்தது.

புல்-இ-கும்ரி ஒரு புதுத்தொழிற்சாலை நகர். சுமார் 25 ஆண்டுகட்கு முன்பு இந்த இடம், பாங்க்மில்லி தொடங்கிய துணி ஆலை ஒன்றின் கட்டும் இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. பின்னர், அது ஒரு மலேரியாக் கிராமமாகக் கிடந்தது. இப்பொழுது அங்கே மலேரியாவே கிடையாது. வளர்ச்சியுற்று வருகின்ற நகராட்சியில் பள்ளிக்கூடங்களும் மருத்துவ நிலையங்களும் சேவை புரிகின்றன; மின்சார வினியோகமும் உண்டு. துணிஆலை மட்டுமின்றி, ஹைட்ரோ எலெக்ட்ரிக் திட்டமொன்று, சிமெண்ட் உற்பத்தி சாலையொன்று, நிலக்கரிச் சுரங்கமொன்று ஆகியவற்றால் தொழில் மயமாக விளங்குகின்ற பிரதேசத்தின் மத்தியில் நகரம் அமைந்துள்ளது.

துணி ஆலையில், ஆலை மேலாளர் எங்களை அன்போடு வரவேற்றார். அவர் பெயர் உயர்திரு நெக்சாத். நாங்கள் புல்-இ-கும்ரியில் தங்கியிருக்கும்வரை, அவரது நிறுவனத்தின் விருந்தினராக இருக்க வேண்டுமென்று முதலிலேயே அழைப்பளித்து விட்டார். எங்கள் குழுவின் தலைவர் அதற்கு இணங்கவில்லை. ஏனெனில் அவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலேதான் வந்திருந்தார்கள். ஆனால், உயர்திரு. நெக்சாத், தமது அழைப்பிற்கு ஓரளவேனும் இணங்கினாலொழிய ஆலையைச் சுற்றிக் காட்டுவதில்லை என்று சொல்லிவிட்டார். முடிவில், அன்று மாலை நாங்கள் அவருடன் சாப்பிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

புல்-இ-கும்ரி ஆலை இரண்டாவது உலகப் போரின் துவக்க ஆண்டுகளில், ஆங்கிலப் பேரரசுவினின்றும் வரவழைக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு நிறுவப்பட்டது. போர்க் கடுமையின் ஈனநிலை அது முடிவுறுவதைச் சில ஆண்டுகள் பாதித்துவிட்டது. 1962ல் கதிர்களின் எண்ணிக்கை 30,000க்கு மேல் அதிகரிக்கப்பட்டது. நான் ஆலையைப் பார்வையிட்ட சமயம் சுமார் 3,000 பேர் முறைமாற்று திட்ட (Shifts) அடிப்படையில் இரு பகுதிகளாக வேலை செய்தனர். எனினும் அதன் குறிப்பிட்ட வகை உற்பத்தியின் தேவைக் குறைவினால் 25 மில்லியன் மீட்டர் தயாரிக்கும் தன் முழுத்திறனையும் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே 1960ல் 60,000 கதிர்கள் கொண்ட மற்றொரு ஆலை குல்பகாரில் உண்டாயிற்று. குல்பகார் ஆலை, ஆசியாவின் மாபெரும் ஆலைகளில் ஒன்று. 1500க்கு மேற்பட்ட ரகத் துணிகளைத் தயார் செய்யும் சக்தி அதற்கு உண்டு. இன்றைக்கு ஆப்கானிஸ்தான் தன் தேவையில் பாதியளவைத் தானே தயாரித்துக்கொள்கின்றது; சுமார் 8000 பேர் வேலை செய்கின்றார்கள்.

புல்-இ-கும்ரியிலிருந்து சுமார் 20 மைல் தொலைவி லுள்ள பிரான்சு-தொல்பொருட் சுரங்கங்களைப் பார்வை யிடுதல் எங்கள் அடுத்த திட்டம். மதிய உணவிற்கு நாங்கள் கொஞ்சம் பிந்தி விட்டோம். நாங்கள் திரும்பி வரும்போது திருவாளர். நெக்சாத் எங்களுக்காகக் காத் திருந்தார்.

திரு. நெக்சாத் ஆங்கிலத்தில் பேசுவதில்லை. அவர் பேசிய அன்னியமொழி ஜெர்மன். முழுநேரமும் திரு. புதிராஜ் (Budhiraj) ஆங்கிலத்திலிருந்து பெர்ஸியனுக்கும் பெர்ஸியனிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்புச் செய்து கொண்டிருந்தார்.

திரு. நெக்சாத் சிக்காரில் (sikar) மிக்க ஆர்வங் கொண்டவர் என்று தெரிந்தது. ஏனெனில் அவரே அந்தப் பேச்சை எடுத்தார். அந்தப் பக்கங்களில் விளை யாட்டுகளுக்குக் குறைவு ஒன்றுமில்லையென்றும் அங்கே மான்கள், பறவைகள் காட்டுக் கழுதை முதலியன மிகுதி யாக உள்ளன என்றும் குறிப்பிட்டார். அவருக்கு விருப்ப மான மற்றொன்று இந்துஸ்தானி சங்கீதம். இந்தியா வைப்போலவே ஆப்கானிஸ்தானும் சங்கீதத்தில் பங்கு கொள்கிறது என்றார். இந்திய இசை வல்லுநர்கள் (சங் கீத வித்வான்கள்) அவ்வப்போது தங்கள் கலைநிகழ்ச் சியை நடத்தும் பொருட்டு ஆப்கானிஸ்தானுக்கு வர வழைக்கப் பட்டுள்ளனர். எங்கள் கோஷ்டித் தலைவரான திரு. ஓரி (Obri) அவ்வாண்டு நடைபெற இருக்கும் ஆப் கானியச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது இந்தியாவின் பிரபல பாடகர்கள் காபூலுக்கு வரப் போகிறார்கள் என்று அவரிடம் தெரிவித்தார்.

எங்கள் சாப்பாடு சற்று அதிகமாகவே இருந்தது. அதன்பின் காபி வேறு அருந்தினோம். கிட்டத்தட்ட

நள்ளிரவில்தான் அவர் எங்களை விட்டார். ஆப்கானில் விருந்தளித்த முக்கியமானவர்களில் அவரும் ஒருவர்.

* * *

மைதான்—இ—கர்க்கராவின் நிலக்கரிச் சுரங்கம் புல்-இ-கும்ரியிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில்தான் உள்ளது. சுரங்கப் பிரதேசத்திற்குப் போகும்போது எங்களுடன் ஒரு இளம் ஆப்கானியப் போலீஸ் அதிகாரி எங்கள் ஜீப்பில் (jeep) வந்தார். அவர் ஆங்கிலம் பேசவில்லை. நாங்கள் கேட்காமலேயே அதன் காரணத்தையும் விளக்கினார். "பாடங்களில் கருத்துள்ளவனாக இருந்திருந்தால் பள்ளிக்கூடத்திலிருந்த காலத்தில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு விட்டிருப்பேன்; ஆனால் எனக்கு அவ்வளவு அக்கறை இருந்ததில்லை" என்றார் அவர். அவர் கஜ்னி (Gajni)யைச் சேர்ந்தவர்; அண்மையிலே அங்கு மாற்றப்பட்டிருந்தார். நான் அவரிடம் "இந்த இடம் உங்களுக்குப் பிடிக்கிறதோ?" என்று கேட்டேன். அவர் "இல்லை. இங்கே மிகவும் சூடாக இருக்கிறது" என்று பச்சையாகச் சொன்னார்.

'கஜ்னி குளிர்ச்சியான இடமா?"

"அது காபூலைவிடக் குளிர்ச்சியானதே. ஏனெனில் அது அதிக உயரத்திலிருக்கிறது."

கஜ்னியைச் சேர்ந்த அந்த வாலிப பஸ்தன் ஏன் ஆப்கன்—துர்க்கிஸ்தான் சீதோஷ்ண நிலையை வெறுத்தார் என்பது இப்பொழுது எனக்குப் புலனாயிற்று. ஆனால் புஸ்காஷியைப்பற்றி உச்சரித்த மாத்திரத்தில் அவரது முகம் உணர்ச்சி வசப்பட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிற்று. எந்த உஸ்பெக் அல்லது துர்க்கொமானுக்கும் அப்படித்தான் உணர்ச்சி பிறக்கும் போலும். "புஸ்காஷியை உங்களுக்குப் பிடிக்கிறதோ?" என்று கேட்டவுடனே அவர் "நன்றாகப் பிடிக்கும். அறுப்புக் காலம் கழிந்து

வுடனே துர்க்கிஸ்தான் மக்கள் புஸ்காஷி என்ற பெயரி லேயே பைத்தியமாகி விடுவார்கள். அப்பொழுது ஒவ் வொரு வெள்ளிக்கிழமையிலும் விளையாட்டு எங்கும் நடைபெறும்; நான் அதை விடுவதில்லை.

புஸ்காஷி என்பது ஒரு விளையாட்டையும் குறிக்கும். அது கிட்டத்தட்ட போலோ விளையாட்டைப்போல இருக்கும்; மத்திய ஆசியா தான் அதன் பிறப் பிடம். அந்த விளையாட்டிற்கு இரண்டு கட்சிகள் வேண் டும். குதிரைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கட்சியிலும் பன்னிரண்டிலிருந்து நூறுவரை மாறி மாறிவரும். பந்து ஒன்றும் கிடையாது. கொல்லப்பட்ட ஒரு கன்று அல்லது ஆடு மைதானத்தின் மத்தியிலுள்ள குழியொன் றில் இடப்பட்டிருக்கும். மைதானத்தின் கோடியில் எதிர் எதிராக இரு கட்சியினரும் வரிசையாய் நிற்பார் கள். நோக்கம் அந்தப் பந்தயப் பொருளைக் குழியிலி ருந்து எடுத்து மைதானத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல். இதற்கிடையில் ஏற்படும் எதிர்ப்புகளை வெல்ல வேண்டும்.

குறிப்பிட்ட அடையாளத்தினால் விளையாட்டு ஆரம்ப மாகும்போது உண்டாகும் இடிமுழக்கம் போன்ற ஆர்ப் பரிப்பு உலகத்தில் உள்ள மற்ற விளையாட்டுக்களெல்லாம் நயமான விளையாட்டுக்கள் என எண்ணத் தூண்டும். ஒருவனிடமிருந்து வேறொருவன் அந்தப் பொருளைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டு விழுந்து கிடப்பதும் அவனவன் கட்சியினர் அவனவனுக்குத் துணையாகச் செய லாற்றுவதும் முடிவில் குதிரைகளுக்கும் மனிதருக்கும் பெருத்த காயங்கள் ஏற்படுவதும் வழக்கம்.

ஹிந்துக்குஷுக்கு வடக்கிலுள்ள பட்டணங்களில் புஸ்காஷி விளையாட்டு நடைபெறும். குளிர் காலங்களில் தான் இது நடக்கும். காபூலிலும் ஒவ்வொரு ஆண்டும்

அக்டோபர் 15ல் தற்கால அரசன் சாஹிர்ஷாவின் பிறந்த நாள் விழாவின் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக இந்த விளையாட்டு நடைபெறுகிறது. புஸ்காஷிக்கு என்று தெரிந்தெடுக்கப்படும் குதிரைகள் பெரும்பாலும் கட்டகான் அல்லது மஜார்-இ-ஷரிப் வகையைச் சேர்ந்தவையாக இருக்கும்.

தர்க்காராவிற்குப் போகும்வழியில் சாலை ஓரத்து சிமெண்ட் தொழிற்சாலை கண்ணுக்குத் தெரிந்தது. அது அப்பொழுதுதான் கட்டுமானத்திலிருந்தது. இது செக்கோஸ்லோவேகியாவின் உதவியாலும் கலைநுட்ப ஆலோசனையாலும் கட்டப்பட்டு வந்தது. சாலைமிகவும் மண்படிந்து கிடந்தது. இருமருங்கிலும் கோதுமை வயல்கள் தொடர்ந்து காணப்பட்டன.

* * *

தர்க்காரா சென்றதும், சுரங்கம் மூடியிருக்கக் கண்டோம். ஏனெனில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விடுமுறை நாள். எனினும் அங்குள்ள முக்கியஸ்தர் எங்களை உள்ளே செல்ல அனுமதித்தார். நாங்கள் ஒரு பாதாளப் பாதைவழியே சென்று நிலக்கரி வெட்டியெடுக்கப்படும் இடத்தைக் கண்ணுற்றோம். அண்மையில்தான் செக்கோஸ்லோவேகியாவின் உதவியால் வண்டித் தண்டவாளங்கள் போடப்பட்டிருந்தன. அதுவரை சுரங்கமானது மிகச் சிறியதாகவே இருந்தது; பொடிக் கரி மிகக் குறைந்த அளவே தயாராகிக் கொண்டிருந்தது.

எப்படியும் மூன்று சுரங்கங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் ஆப்கானிஸ்தானின் நிலக்கரி உற்பத்தி பாராட்டிற்குரியதே. 1940க்கு முன்பு நிலக்கரி உற்பத்தியே கிடையாது. ஆனால் எனது கடைசிப் பிரயாணத்தின் போது மொத்த உற்பத்தி 80,000 மெட்ரிக் டன் என்று தெரிய வந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்

படி 1965—66ம் ஆண்டின் உற்பத்தி அளவு 170,000 டன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் முக்கிய சக்தியில் நூற்றிலொரு பங்குகூட இது இல்லை. ஆப்கானிஸ்தான் நிலக்கரி உற்பத்தியில் அத்துணைச் செழிப்பு வாய்ந்தது!

1960 வரை கர்க்காராவின் வேலையாட்கள் துப்புரவற்ற குடிசைகளில் வசித்து வந்தார்கள். அதன்பிறகு சிறு சிறு வீடுகள் வரிசையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு ஆண்டுதோறும் உற்பத்தி போனஸ் சம்பளத்துடன் கிடைக்கிறது. சம்பளத்துடன் 20 நாள் விடுமுறையும் உண்டு. மேலும் அங்கு (ஆப்கானிஸ்தானில் வேறெங்குமே) தொழிலாளர் யூனியன் என்பது கிடையாது என்று கேள்விப்பட்டேன்.

''சாக விரும்புபவன் குவந்தஸ் போகலாம்'' என்பது பழமொழி. சுமார் 35 ஆண்டுகட்கு முன்பெல்லாம் குவந்தஸ் ஒரு சிறு கிராமமாக இருந்தது; எங்கும் தண்ணீர் தேங்கி நிற்கும். மலேரியாவும் கொசுக்களும் மலிந்து கிடக்கும். ஆகவே குவந்தஸுக்குச் செல்வது சாவைத் தேடிப் போவதே ஆகும். ஆனால் இப்பொழுது மாறிவிட்டது. சுத்தமான ஒரு தொழில் ஸ்தலமாகிவிட்டது. புல்-இ-கும்ரியுடனும் பக்லானுடனும் சேர்ந்து அது ஆப்கானிஸ்தானின் தொழில் துறையில் முன்னோடியாகத் திகழ்கிறது. துணிகள், தாவரஎண்ணெய் இன்னும் மற்ற சிறுதொழில் உற்பத்திப் பொருள்களின் அவசரத் தேவையானது தற்கால மன்னர் ஆட்சியில், தொழில் அபிவிருத்திக்கு ஏதுவாயிற்று. மூலப்பொருள்கள், கூலிகள், சக்தி ஆகியவற்றின் கூட்டு ஸ்தலங்களாயிருத்தலின் இந்தப் பட்டணங்கள் தொழிற்சாலைக்கு மிகவும் கண்கண்ட இடங்களாகின்றன. இப்பொழுது திட்டமுறைப்படி ஆட்கள் வேலை செய்கின்றார்கள். கிராம மக்களுக்கு

இது ஒரு புது அநுபவம். பள்ளிக்கூடங்களும் மருத்துவ மனைகளும் ஆங்காங்குள்ள பிரதேசப் பழக்க வழக்கங்களை மாற்றுகின்றன. இக்காரணத்தால்தான் குவந்தஸ் பற்றிய பழமொழியும் தன் பொருளை இழந்து விட்டது. ஆகவே புதியதொரு பொன்மொழி பிறந்துவிட்டது. "பணம் திரட்ட விரும்புபவர்கள் குவந்தஸுக்குப் போகலாம்" என்பதே அது.

புல்-இ-கும்ரியிலிருந்து குவந்தஸுக்குச்செல்ல நான்கு மணி நேரம் பிடிக்கிறது. வழியில் பகலானைக் கடந்தோம் அது புல்-இ-கும்ரியிலிருந்து 15 மைலிலுள்ளது. அங்கே ஒரு சர்க்கரை ஆலையுள்ளது. இதற்கு பீட் உள்ளூரிலேயே கிடைக்கிறது. இந்த ஆலை செக்கோஸ்லோவேகிய உதவியால் 1940ல் கட்டப்பட்டது. இதுவரை ஆப்கானிஸ்தான் தனது தேவையில் பாதி அளவுதான் தனது சொந்த உற்பத்தியிலிருந்து பெற முடிகிறது. மீதியெல்லாம் ரஷ்யாவிலிருந்து வருகிறது.

கோதுமையும் பீட்டும் தவிர, பக்லானின் பயிர்த் தொழிலாளர்கள் பஞ்சுப்பட்டும் தயார் செய்கிறார்கள். வடக்கு நோக்கி குவந்தஸ் நதி ஓரமாகப் பிரயாணஞ்செய்யும்போது மொத்தத்தில் மக்கள் தொகை குன்றிய திறந்தவெளிப் பிரதேசத்திலே போவதாகக் கண்டோம். ஆலியபாத குறுக்குச் சாலையில் கன்னபாத்திரத்திற்கான திருப்பத்தைத் தாண்டிச் சென்றோம்.

குவந்தஸ் போய்ச் சேர்ந்ததும் பருத்திக் கம்பெனியின் பிரயாணி விடுதியில் ஓய்வு கொண்டோம்.

குவந்தஸ் புல்-இ-கும்ரியிலிருந்து 65 மைலில்தான் உள்ளது. குவந்தஸில் இரண்டு காரியங்கள் உள்ளத்தைத் தொட்டன. முதலில் சாலையோர மரங்களும் சோலைகளும். ஆப்கானிஸ்தானில் நான் பிற நகரங்களில் கண்ட

வற்றைவிட இங்கே மிகுதியாக உள்ளன. இரண்டாவதாக காபூலில் போல, பர்தா இல்லாத பெண்களை வீதிகளில் ஏராளமாகக் காண முடிந்தது. பின்னர் சோப்பு முதலிய உற்பத்தி சாலைகளில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து வேலை செய்வதையும் பார்த்தேன்.

ஆப்கானிஸ்தானில் டஜனுக்கு மேற்பட்ட பருத்திப் பஞ்சாலைகள் உள்ளன. அவை பெரும்பாலும் வடபகுதியைச் சேர்ந்தவையே. நான் கடைசியாக ஆப்கானிஸ்தான் சென்றபோது இந்தத் தொழிற்சாலைகளில் எல்லாம் ஆண்டுக்கு 40,000 டன் பஞ்சு பயன்படுத்தப்படுகிறது எனத் தெரிந்தது. இவை உள்நாட்டுப் பஞ்சேயாகும். இரண்டாவது திட்டம் 1966க்கு இந்த மதிப்பை 60,000 டன்னுக்கு உயர்த்த வேண்டுமென்று குறிப்பிடுகிறது. ஆப்கானிஸ்தானின் ஏற்றுமதிப் பொருட்கள் நான்கில் பஞ்சு ஒன்று. பிற முக்கிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்காவிலும், ஐக்கிய நாட்டிலும் மேற்கு ஜெர்மனியிலும் நல்ல மார்க்கெட் இருக்கிறது. ஆனால் பஞ்சுக்கும் கம்பளிக்கும் நம்பிக்கைக்குரிய விற்பனை ஸ்தலம் ரஷ்யாவேயாகும். ஆப்கானிஸ்தானின் பழங்களையும் வேறு சில சரக்குகளையும் இந்தியா மிகுதியாக வாங்குகிறது.

பருத்திக் கம்பெனியானது குடியானவர்களிடமிருந்து மூலப் பருத்தியை வாங்குகின்றது. உண்மையில் உற்பத்தியாளர்கள் கம்பெனியிடமிருந்து முன்பணம் பெற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு வாங்கிச் சுத்தம் செய்யப்பட்ட பஞ்சு நாட்டின் மூன்று பஞ்சாலைகளுக்கு விற்பனையாகிறது. மீதம் ஏற்றுமதியாகிறது.

மேலாளர் அந்தக் கம்பெனியின் சரித்திரத்தை எடுத்துரைத்தார். சோவியத் மத்தியஆசியா குவந்தஸிலிருந்து 60 மைலில்தான் உள்ளது. பருத்தி 'அமுதர்யாப் பள்ளத்

தாக்கில் வெகு காலமாகப் பயிராகி வந்தது. சோவியத் புரட்சிக்கு முன்பு இந்தப் பருத்தி ரஷ்யாவிலும் ஐரோப் பாவிலுமுள்ள பஞ்சாலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் புரட்சிக்குப் பின்பு பருத்திப் பிரதேசங் களிலேயே அரசாங்கத்திற்குச் சொந்தமான பஞ்சாலை கள் உண்டாயின. சோவியத் மத்திய ஆசியப் பருத்தி அவர்களது தொழிற்சாலைக்குப் போதவில்லை. ஆகவே சோவியத் அதிபர்கள் பக்கத்து நாடுகளிலிருந்து பருத் தியை வாங்கத் தொடங்கினர். பருத்திக்குப் பதில் பொன்னையே கொடுத்தனர். ரஷ்ய துருக்கிஸ்தான் பருத்தியைப் பயிரிடுவதானால் ஆப்கான் துருக்கிஸ்தான் ஏன் கூடாது? என்ற வினா எழுந்தது. ஆப்கானிய வர்த்த கர்கள் சிலர் பருத்தி பயிரிடுதலில் ஆர்வங் கொண்டனர், அவர்கள் திட்டங்களுடன் அரசாங்கத்தை அணுகினார் கள்.

இவையெல்லாம் 35 ஆண்டுகட்கு முன்பு நிகழ்ந்தன. அப்பொழுது கட்டகன் பதக்ஷான் ஐக்கிய மாகாணத் தின் கவர்னர் உயர்திரு. ஷெர்கான். அவரது விருப்பத் திற்கிணங்க தரிசு நிலங்களெல்லாம் அரசாங்கச் செலவில் சுத்தப்படுத்தப்பட்டன. பிறகு பெரும் பெரும் நிலப் பகுதிகள், ஏக்கருக்கு 40 அல்லது 50 ஆப்கானிஸ் என்ற அவ்வளவு குறைந்த விலையில் மக்களுக்கு விற்கப்பட்டன. அதில் பருத்தி பயிரிடப்படவேண்டும் என்பது நிபந்தனை. பாங்கிமில்லி பருத்திக் கம்பெனியை ஊக்குவித்து சோவி யத் ரஷ்யாவுடன் மூன்றாண்டு வணிக ஒப்பந்தம் ஒன்றை உண்டாக்கியது. ரஷ்ய இயந்திரங்களினால்தான் குவந் தஸின் பெரிய ஆலை 1938ல் ஸ்தாபிக்கப்பட்டது. பின், உற்பத்திசாலையின் சக்தி பன்மடங்கு அதிகரித்தது. ஆப் கானிஸ்தானிலிருந்து தட்டுப்பாடின்றிப் பஞ்சுபெறும் நம்பிக்கையில்தான் ரஷ்யா இந்தத் திட்டத்திற்குப் பொருள் வழங்கியது என்பது தெளிவு.

மேலாளர் உற்பத்திசாலையைச் சுற்றிக் காண்பித்தார். பயிராளர்கள் பருத்தியை ஆலையின் உள்முற்றத்திற்கே நேரடியாகக் கொண்டுவந்து விடுகின்றனர் என்று கூறினார். பருத்தியின் கொள்விலையை, கம்பெனியானது மூவர் சபை ஒன்றின் மூலம் நிர்ணயித்தது. கம்பெனியின் சார்பிலும், அரசினர் சார்பிலும், பயிராளர் சார்பிலும் அந்தச் சபை இயங்கிற்று. கம்பெனி ஒருவகையில் பொதுஜன ஸ்தாபனமே. ஏனெனில் அதிகப் பங்குகளை ஏற்கெனவே அரசாங்கம் வாங்கியிருந்தது.

ஆப்கானிஸ்தானின் மண் நீண்ட இழையுடைய பருத்தியைப் பயிர்செய்வதற்கு ஏற்றது. ஆனால் பயிராளருக்குக் கொடுக்கப்பட்ட விலையானது செலவோடு ஒப்பிடப்படும்போது மிகவும் குறைவாயிருந்தமையால் இந்தவகைப் பருத்தியை எதிர்பாக்கும் அளவிற்கு அவர்கள் பயிரிடவில்லை. ஆனால் 1940க்கு பிற்பாடு பருத்திக் காடுகளில் 90 சதவிகிதம்வரை அத்தகைய பருத்தி பயிரிடப்பட்டது. அயல்நாட்டு விதைகளை இத்துறையில் மிகவும் பயன்படுத்தினார்கள்; இந்த முயற்சி வெற்றியும் தந்தது. ஆனால், இரண்டாவது உலகப்போர், பருத்தி விற்பனையைத் தற்காலிகமாக, மூடிவிட்டது. இதன் விளைவாகப் பருத்தி தன் இடத்தைக் கோதுமைக்குத் தந்து விட்டது; 1947லிருந்து 50வரை பருத்தி ஏற்றுமதியே நடைபெறவில்லை. இந்த மூன்று ஆண்டு இடைவெளியில் நீண்ட பருத்திவகையே முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு விட்டது. பிற்பாடு, 1950க்குப்பின் ஏற்றுமதியின் பொருட்டுப் பயிர்த்தொழில் புத்துயிரளிக்கப்பட்ட போது, பல்வகைப்பட்ட பருத்திகள் மிதமியாகப் பயிரிடப்பட்டு விலை தாறுமாறாக உயர்ந்து விட்டது. F.A.O. ஏற்றுமதியாளர்கள், மீண்டும் நீண்ட பருத்தியைப் பயிரிடுவதற்கு மிகவும் உதவியாயிருக்கின்றார்கள். பிற்

காலம் ஆப்கான் பருத்திக்குப் பொற்காலமாக இருக்கும் (நல்ல பருத்தியின் இழை, ஒன்று அல்லது ஒன்றேகால் அங்குலம் இருக்கும்.)

பஞ்சுக் கட்டுகளுக்கு வேண்டிய கட்டுப் பொருள்கள் இந்தியா, பாக்கிஸ்தான், ரஷ்யா இவற்றிலிருந்து வருகின்றன என்று கண்டோம். ரஷ்யாவில் மீட்டருக்கு 5 ஆப்கானிஸ் விலை உள்ள ஏசியின் (சணல்) இந்தியாவில் 6½ ஆப்கானிஸ் மதிப்பு அடைகிறது. கம்பெனியின் சுற்றுச் சுவருக்குள்ளேயே ஒரு சோப்பு உற்பத்திசாலையும் சைனுப்பாத்திர உற்பத்திசாலையும் உள்ளன. அவற்றையும் பார்வையிட்டோம். சோப்புத் தயாரிப்புக்கு பருத்திக் கொட்டை எண்ணெய் உபயோகப்பட்டது. அது பருத்தி ஆலையில் ஒரு உப உற்பத்திப் பொருளாகும்.

பிரயாண விடுதியில் என்னுடன் தங்கியிருந்த தூதுவ கோஷ்டிப் பிரமுகர்கள் பதக்ஷானுக்குப் புறப்பட்டார்கள். எனக்கு நுழைவனுமதி யில்லையாதலின் நான் அங்கு செல்லவில்லை. அவர்கள் திரும்பி வரும்வரை, இரண்டு நாட்கள், நான் குவந்தஸிலேயே தங்கியிருப்பது என்று ஏற்பாடாயிற்று. உள்ளூர் மொழி தெரியாததால், ரந்தவா குடும்பம் அங்கில்லாவிடில் நான் அங்குத் தனியாக மிகவும் சங்கடப்பட்டிருப்பேன். திரு. ரந்தவா, 'உலக சுகாதார ஸ்தாபன''ப் பணியில் உள்ள ஒரு இந்திய நிபுணர் (Expert visince of World Health Organisation) குவந்தஸில் மலேரியா ஒழிப்பு நிலையம் ஒன்று W. H. O பார்வையில் இயங்கி வந்தது. உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் அங்கே பணி புரிய அலுவலர் வந்திருந்தனர். இவர்களெல்லோரும் உலக கொசு ஒழிப்புக் குடும்பத்தினர் (International Mosquito Family) என்று அழைக்கப்பட்டனர்.

ரந்தவா குடும்பத்தினருடன் உரையாடும்போது குவந்தஸ் அவர்களுக்கு எப்படித் தோன்றுகிறது என்று கேட்டேன். திருமதி ரந்தவா சோகப் புன்னகையுடன் சொன்னார்:

"இந்த நாட்டை நீங்களே பார்த்துக் கொண்டீர்கள். தெருக்களில் ஒரு சில மாதரை முக்காடின்றிப் பார்க்க நேர்ந்ததால் பர்தா (சாத்ரி) எடுபட்டே விட்டது என்று நினைத்து விடாதீர்கள். குவந்தஸிலேனும் முக்காடில்லாப் பெண்களைப் பார்த்துச் சகித்துக் கொள்கிறார்கள்—அதுவும் போலீசாருக்குப் பயந்து. வெளியிடங்களுக்கு நான் அதிகமாகப் போனதில்லை."

திருமதி ரந்தவா கூறிய பிறிதொரு குறைபாடு பல உணவுகள் கிடைப்பதில்லை என்பது. வடக்குப் பாகங்களில் மரக்கறிகள் கிடையா. வருடத்தில் நான்கைந்து மாதங்கள் ஹிந்துகுஷ்மலை பனியால் மூடப்பட்டிருக்கும் காலத்தில்—குவந்தஸ் காபூலிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டிருக்கும். திருவாளர் ரந்தவா, "மாதக் கணக்கில் கடிதங்கள்கூட நமக்கு வந்து சேர்வதில்லை" என்றார். பொதுவாக அவர்கள் சொன்னவையெல்லாம் சரியே. ஆனால் சலாங் கணவாயில் ரஷ்யர் அமைத்த சுரங்கப் பாதை முடிவுற்ற பின்னர் காரியங்கள் வெகு தூரம் முன்னேறியுள்ளன.

திருவாளர் ரந்தவா என்னை பருத்திக் கம்பெனியின் அலுவலர் சங்கத்திற்கும் (Staff Club) சர்க்கார் பழமரத் தோப்புக்கும் அழைத்துச் சென்றார்.

அந்த நகரத்திலேயே அதிக ஆதிக்கம் உடையவர் பருத்திக் கம்பெனியின் தலைவர் (President) என்பது போகப் போகப் புலனாயிற்று. அப்போதைய தலைவருக்கு இரண்டு மனைவியர்—ஒருவர் ஜெர்மானியர்; மற்றவர்

ஆப்கானியர். உள்ளூர் திரைப்படக் கொட்டகை அவருடையது; சொந்த வீடுகளும் பல அவருக்கிருந்தன. இன்றைய ஆப்கானிஸ்தானில் சொத்துக்களையுடையவர்கள் சமூகத்தின் சிகரத்திலிருக்கும் ஒரு சிலரே. அவர்கள் எண்ணிக்கை 15 மில்லியன் மக்களுள் ஒரு சில ஆயிரங்களே ஆம். குவந்தஸ் பருத்திக் கம்பெனித் தலைவரும் அவர்களுள் ஒருவரே.

தூதுவ நண்பர்கள் பதாக்ஷானிலிருந்து திரும்பியவுடன் நான் அவர்களோடு சேர்ந்து மசார்-இ-ஷெரிப்புக்குப் பயணமானேன்.

அத்தியாயம் 6

# பாலைவனத்தினூடே: மஜர்—பால்க்

குவந்தஸிலிருந்து பஜார்-இ-ஷெரிப் போகும் வழியில் பாலைவனத்தைக் கடந்தாக வேண்டும். பகலின் வெப்பத்தைத் தவிர்க்கும் பொருட்டு இரவில் பிரயாணஞ் செய்யத் திட்டமிட்டோம். ஆனால் பிரயாணிகள் விடுதி மேலாளர், இரவில் பயணஞ் செய்தால் வழி தப்ப ஏதுவாகும் என்று எச்சரித்தார். பாலைவனத்தில் பாதை தவறினால், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அவசரத்திற்குக் கிடையாது; இத்தகைய சங்கடங்களைத் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்தோம். ஆகவே பொழுது புலரப் புறப்பட்டு வெயில் துவங்கு முன்னரே பாலைவனத்தைக் கடந்து விட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

எங்கள் ஜீப் வண்டியில் புறப்பட்டுச் செல்லும் பொழுது இருட்டு வேளையாகவே இருந்தது. நகரத்திற்கு வெளியே சென்றதும் குவந்தஸ் நதியைப் படகின் மூலம் கடந்தோம்; பின் பல ஊர்களையும் கடந்து சென்றோம். அதன் பின்பு மண் மயமான பாலைவனப் பிரதேசம் ஆரம்பமாயிற்று. தரை மட்டம் ஒரே மட்டமாகக் காணப்பட்டது; சிற்சில இடங்களில் மட்டும் மண் குவியல்கள் (மேடுகள்) தோன்றும். அவை பார்வைக்கு

ஓரளவு மாறுதல் அளித்தன. ஓரிடத்தில் இரண்டு காட்டு நரிகள் எட்டி நின்று எங்களைக் கூர்ந்து கவனித்தன. ஜீப் நெருங்கவே அவை ஓட்டம் பிடித்தன; வேறோரிடத்தில் மூன்று மான்கள் அங்ஙனமே எதிர்ப்பட்டு ஓடின. பாலை வனத்தின் ஓரங்களில் முட்செடிகளும் புற்களும் நிறையக் காணப்பட்டன. ஆகையால் அங்கே மிருகங்களும் தென் பட்டன. ஜூன் மாதத்தின் வெப்பத்தின் காரணத்தால் எங்குமே புல் காணப்படவில்லை. ஆயினும் அங்கு மிங்கு மாக முட்புதர்களைக் கண்டோம். எங்களுக்கு முன் சென்று கொண்டிருந்த ஒட்டகக் கூட்டத்தை எங்கள் ஜீப் தாண்டிச் சென்றது. உலர்ந்த புதர்க் கற்றைகளைக் கழுதைகள்மீது ஏற்றிக்கொண்டு, கால் நடையாக, குவந்தலை நோக்கி அநேகர் போய்க் கொண்டிருந் தார்கள். அவர்கள் விறகு விற்பவர்கள் போலும்.

சுமார் 8 மணியளவில், பழுதடைந்த ஒட்டகாலயம் ஒன்றை அடைந்தோம். ஆப்கானிஸ்தானில் தேனீர் விடுதியானது எப்படி கிளப்பாக விளங்குகின்றதோ அது போன்று, பெரிய நிலப்பரப்பில் ஒரு புள்ளியாக உள்ள அந்த ஒட்டகாலயமானது ஒட்டகப் பிராணிகளுக்கு "ஹோட்டல்களாக" விளங்கின. (அமெரிக்காவில் மோட்டார் பயணிகளுக்கு உணவருந்தவும் வண்டி நிருத் தவும் உதவும் பெரும் விடுதிகள்). அந்தக் குதிரை லாயம் சுற்றுச்சுவரையுடைய ஒய்விடம்; பிரயாணிகளுக் கும் அவர்தம் சுமை தாங்கிய பிராணிகளுக்கும் களைப் பாற்றும் சோலைகளையுடைய கோட்டை. சாதாரணமாக அங்கு, ஊற்று அல்லது ஓடை அல்லது கிணறு இருக்கும். உயர்ந்தவொரு சுவரை ஒட்டி மனிதர்களுக்கு அறை களும் மிருகங்களுக்குத் தொழுவங்களும் கட்டப்பட்டிருக் கும். சாமான்களை இறக்கவும் ஏற்றவும் உகந்த முற்ற வெளி ஒன்றும் இணைந்திருக்கும். சுற்றுக் கட்டானது

பெருங் காற்றின் கொடுமையிலிருந்து அவர்களைக் காத்துக் கொள்கிறது. திருடர்கள் நுழையாதிருக்கவும், பாது காப்பாக நிற்கின்றது. இந் நாளில் ஒட்டகலாயங்களின் முக்கியத்துவமெல்லாம் போய் விட்டது; ஆகவே அங் கொன்றுமிங்கொன்றுமாகவே சில காணப்படுகின்றன; அவையும் சீர்கேடான நிலையிலேயே உள்ளன. அங்கே ஒரே ஒரு மனிதன்தான் இருக்கக் கண்டோம். அவன் ஒரு தலை நரைத்த வயோதிகன்; எங்களுக்கு எதையோ விலைக் குத் தரக் காத்திருப்பவன் போல் தோன்றினான். அவ னிடம் கரியடுப்பில் தயாரான தேநீர் ஒரு பானையும் கொஞ்சம பிஸ்கட்டும் வாங்கிக்கொண்டு எங்கள் காலை உணவை முடித்தோம்.

குவந்தஸுக்கும் தாஸ்குர்கானுக்கும் உள்ள தூரம் 75 மைல். அங்கேதான் பாலைவனப் பிரதேசம் முடிந்து பசுமையான சோலை நிலம் தொடங்கியது. தாஸ்குர்கான் முலாம் பழத்திற்கும் (Melom) பிக்காப் பழம், கர்ப்பூசணி (Water melom) முதலியவற்றிற்கும் பெயர் பெற்றது என்று சொன்னார்கள். அவை ஆச்சரிய மூட்டும் வண்ணம் பெரியவையாகவும் இனிப்பாகவும் இருந்தன. தாஸ்குர் கானைக் கடந்து கொண்டிருக்கையில் ஹிந்துகுஷுக்குத் தெற்கே கண்டிராத சிற்ப வேலைப்பாட்டின் விநோதங் களையெல்லாம் கண்டேன். காபூலிலும் ஜலலாபாத்திலும் வீடுகள் தட்டையாகக் கூரை வேயப்பட்டிருந்தது. ஆனால் இங்கே வீடுகளின் கூரை வளைவாக இருந்தது; அதுவும் மண்ணினால் கட்டப்பட்டிருந்தன; அந்தப் பிரதேசத்தின் மற்றையப் பட்டணங்களில் இருந்தது போலவே தாஸ்குர்கானிலும் சம உயரமுள்ள தேன் கூட்டு வடிவான வீடுகள் வரிசை வரிசையாக அமைந்தி ருந்தன. இந்த மண் வீடுகளெல்லாம் அடித்தளத்தில் சதுரமாகவும் மேல்தளத்தில் வளைவாகவும் (domed) இருந்

தன. ஒருவேளை, மரமில்லாக் காரணத்தால் இந்தவகையான வேலைப்பாடு மேற்கொள்ளப்பட்டது என்று நினைக்கிறேன்: ஏனெனில் இந்த முறையில் சட்டங்களும் வரிச்சுக்களும் தேவையில்லை. இந்த வீடுகள் டெல்லியிலுள்ள லோதி (Lodi) மசூதிகளைப்போல் காட்சியளிக்கின்றன.

இந்தப் புராதன நகரத்தைவிட்டு 40 மைல் சென்றவுடன் மஜரா-இ-ஷெரிப்பை அடைந்தோம்.

எங்கள் பிரயாணத்தின் பாதையானது ஒரு சோலையையும் மற்றொரு சோலையையும் இணைத்துக்கொண்டே சென்றது.

*  *  *

காபூல் நண்பர் ஒருவர் மஜரா-இ-ஷெரிப்பில் தண்ணீர் குடிக்கவேகூடாது என்று ஏற்கெனவே எச்சரித்திருந்தார். "தேநீர் அருந்துங்கள்; தண்ணீர் பருகவே வேண்டாம்" என்பது அவர்தம் அறிவுரை. நான் அதிர்ச்சியுற்று, "ஏன்?" என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு நிதானமாகச் சொன்னார்: "போங்கள்; உங்களுக்கே தெரியும்."

ஆம். மஜாருக்குள் நுழைந்தவுடனேயே அவர் சொன்னதின் உண்மை புலனாகிவிட்டது. புல்-இ-கும்ரியிலும் குவந்தஸிலும் போல் பிரயாணி விடுதிகளோ உணவு விடுதிகளோ இங்குக் கிடையாதாகையால் நகரத்தின் சொந்த விடுதியொன்றில் தங்க நேர்ந்தது. (private hotel) அங்கு துப்புரவே கிடையாது, படுக்கையில் விரித்திருந்த விரிப்புகள் அண்மையில் தண்ணீரையே காணாதவைபோல் தோன்றின, ஈக்கள் ஏராளம். பாலைவனத்தின் வழியே வரும்போது உடலில் படிந்த மண்ணை நன்றாகக் கழுவிக் குளிக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் குளிக்கும் அறையில் சென்று பார்க்கும்போது அதிர்ச்சியுற்

றேன். தொட்டியிலுள்ள தண்ணீரில் லட்சக்கணக்கான புழுக்கள் நெளிந்தன. என் அநுபவம் அத்துடன் நிற்க வில்லே. தாக மிகுதியால் ஒரு கிண்ணம் தண்ணீர் கேட்டு விட்டேன்—நண்பர் சொன்ன எச்சரிக்கையும் மறந்து—கிண்ணம் தண்ணீரையும் நான் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று; அதிலும் எண்ணிலடங்காத கிருமிகள் மிகுந்திருந்தாலும், தண்ணீரைக் காய்ச்சாமலேயே அங்குள்ள மக்கள் குடிக்கிறார்கள் என்பதைக் கண்டேன். ஆனால் வேறொருவர் சொன்னார், "நான் வந்து இரண்டு வருடகாலமாகத் தேநீரைத்தான் பருகி வருகிறேன்; தண்ணீரைக் குடிப்பதே இல்லை என்று.

இந்துக்குஷுக்கு வடக்கிலுள்ள பட்டணங்களெல்லாவற்றிலும் பெரியது மஜரா-இ-ஷெரிப். அதன் தற்கால மக்கள் தொகை 1 லட்சத்திற்கு அதிகமாகிறது; (காபூல் மக்கள் தொகை 3 லட்சத்திற்கு அதிகம்) இங்கேயும் சிறு சிறு தொழிற்சாலைகள் அநேகம் உள்ளன. ஆனால் நகரத்தின் முக்கியத்துவம் எல்லாம் கரக்குல், கம்பளி இவற்றின் வியாபாரத்தில் தான் அடங்கியிருக்கிறது. சோவியத் ஆப்கானிய வர்த்தகத்தின் விளைவாக, இந்த முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே போகிறது. மற்றும் மஜராவிலிருந்து அமுதர்யாவிலுள்ள நதித் துறைமுகம்வரை ஒரு அழகிய சாலை செல்கிறது. எனது கொஞ்ச அநுபவத்திலேயே, அதன் பயனைத் தெரிந்து கொண்டேன். சோவியத்திற்குச் செல்ல வேண்டிய சாமான்கள் அந்தப் பாதை வழியே வண்டிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு துறைமுகத்தில் இறக்கப்படுகின்றன; உள்ளூர்க் கடைகளில் பல பொருள்களுக்கிடையே. "ரஷ்ய சரக்கு" (Madeui russia) என்ற முத்திரையிட்ட சரக்குவகை மிகுந்து கிடக்கும். உண்மையில் இறக்குமதியாகும் சர்க்கரை, மண்ணெண்ணெய், நெருப்புப் பெட்டிகள் யாவும் ரஷ்யாவிலிருந்து

வருபவையே. இயந்திரங்கள் துணிகள் இவையும் பாதிக்கு மேல் ரஷ்யச் சரக்குகளே.

விரிப்புகள் விற்கும் சில கடைகளுக்குப் போனோம். பலவகையான விரிப்புகள் இருந்தன. அநுபவமுள்ளவர்கள் எந்தத் தினுசு எந்த ஊரிலிருந்து வந்தது என்று சொல்லி விடுவார்கள். ஆப்கானிஸ்தானில் விரிப்பு நெய்தல் பலர் சேர்ந்து செய்யும் கூட்டு வேலையாகிறது. ஒரு பெரிய விரிப்புத் தயாரிப்பதற்குப் பல மக்கள் பல மாதம் சேர்ந்து உழைக்க வேண்டியதிருக்கிறது. பொதுவாக, பெண்கள்தான் இந்த நெய்தல் வேலையைக் கவனிக்கின்றனர். விரிப்புகள் நெய்யும் திறமை பெண்களுக்கு ஓர் யோக்யதாம்சமாகவே கருதப்படுகிறது. திருமணப் பேச்சில், நெசவுத் திறமையும் ஒரு அங்கமாக அமைகிறது எனலாம். விரிப்பு நெய்வதில் திறமைசாலியான ஒரு பெண், திருமணக் காலங்களில் கடைவீதிகளில் ஒரு லட்சம் ஆப்கானியரைக் கவரும் வாய்ப்பு உடையவளாக விளங்குவாள்—எனக் கேள்விப்பட்டேன்.

ஏற்கெனவே, குவந்தஸில் படுக்கையறை விரிப்பொன்று வாங்கியிருந்தேன். ஆதலால் இப்பொழுதொன்றும் தேவைப்படவில்லை. திருவாளர் புதிராஜ் (இந்தியத் தூதுவர் கோஷ்டி மொழிப் பெயர்ப்பாளர்) 3,500 ஆப்கானிஸ் பெறுமானமுள்ள ஒரு அரையளவு விரிப்பை வாங்கினார். ஆப்கானிய விரிப்பு சாதாரணமாக வீட்டுப் புழக்கத்திற்கு மூன்று தலைமுறை வரைக்கும் தாங்கும் என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். மற்றப் பொருட்கள் நாட்கள் செல்லச் செல்ல மதிப்பிற் குறைவடைகின்றன. ஆனால் ஆப்கான் விரிப்புகள் கொஞ்ச நாள் உபயோகப்பட்ட பின் மதிப்பு மிகுகின்றன. காலப்போக்கில் அவற்றிலுள்ள வர்ணங்கள் பிரகாசமாகின்றன.

பிரயாணிகளின் மனதைக் கவர்வதில் சிறப்பு வாய்ந்தவை நீல மசூதியும், ரவுசா (rowza) ஷரீபும் (அதாவது தீர்க்கதரிசியின் மருமகனுன அலியின் மசூதி) ஆகும். பஜாரிலுள்ள மசூதியின் கோபுர வளைவுகள் வானளாவி நின்று ஒன்றையொன்று எதிர்ப்பதுபோல் தோன்றும். கோபுரங்கள் கணித முறைப்படி அமைந்திருக்க, வளைவுகள் கணக்கின்றி அமைந்திருந்தன. இந்தக் கோபுரங்களும் வளைவுகளும் திமுரீதுச் சிற்பக் கலையைப் பிரதிபலிக்கின்றன. இனுமல் பூசிய நீல ஓடுகளில் அமைந்த வேலைப்பாடு இந்த முறையின் ஒரு முக்கிய அம்சமாகும். 15ஆம் நூற்றுண்டில் ஹீறாத்தில் திமுரீத் பரம்பரையினர் மத்திய ஆசியாவை ஆண்டு வந்தனர். இந்த மசூதி அவர்களது ஆதிக்கத்தை நினைவூட்டுவதாக உள்ளது. அதற்கு நீலமசூதி என்று பெயர் வந்ததின் காரணம், அதன் சிற்ப வேலைப்பாட்டில் நீலவண்ணம் அதிக இடம் பெற்றிருப்பதுதான். மசூதியில் நூற்றுக்கணக்கான வெண்புறுக்கள் பத்திரமாக அடைந்து கிடந்ததைக் கண்டோம். ஒவ்வொரு வசந்த காலத்திலும் நடைபெறும் மேலா-இ-குல்-இ சுரக் (Red Tulip festival) ஆயிரக்கணக்கான பக்திமான்களை பஜாருக்குக் கவர்கின்கின்றன, இந்த விழா 40 நாட்கள் நீடிக்கும்.

எங்கள் விடுதிக்குமுன் சில அரசாங்கக் கட்டிடங்களும் வெகுதூரம்வரை பரந்து காணப்பட்டன. தெருவோரங்களில் வழக்கமான ஜூய் (open ditch) முறை இயங்கியது. நகரத்தின் தண்ணீர் வினியோகம் அவற்றின் வழியாக நடந்தது, பஜார் வீதிகளிலே, குல்லா அணிந்த மனிதர்கள் கழுதைகள் மீது போவதும் முக்காடிட்ட பெண்கள் நடந்து செல்வதும் முக்கியமான அம்சங்களாக விளங்கின. என்றுலும் பழமை நீங்கிப் புதுமை புகுவதும் ஓரளவு உணரக் கிடந்தது. இரண்டு

ஆண்டுகட்குப் பின்னர், அங்கே ஒரு பெரிய விடுதி உண்டாயிற்று என்றும் எங்களுக்கிருந்த பலவிதமான சங்கடங்கள் அப்பொழுது நீங்கிவிட்டன என்றும் சில ஆப்கானிய நண்பர்கள் சொன்னார்கள். ஆயினும் இரண்டாவதுமுறை பஜாருக்குச் செல்லும் வாய்ப்பு எனக்கில்லை.

* * *

ஒருநாள் காலை, "பால்க்கைப் பார்ப்பதற்கு வடக்குப் பிரதேசங்களுக்குச் சென்றோம். பால்க், மஜாரிலிருந்து 15 மைல் தொலைவில் தான் உள்ளது. சாலைகளின் இருபுறங்களிலும் கிணற்றுப் பாசன வயல்களைக் கண்ணுற்றோம். பாழடைந்த நோபகார் தலைவாசல் (Nobahargat) வழியாக நகரத்திற்குள் நுழைந்தோம். வாசலின் இருமருங்கிலும் உயர்ந்த மண் சுவர்களின் இடிந்த பகுதிகள் காணப்பட்டன. பால்க் நகரமானது அதன் காலத்தில் சுற்றுச்சுவருடன் விளங்கிய தென்று நன்கு புரிந்தது. ஆனால் பாழானது சமீப காலத்தைச் சார்ந்தது என்று தோன்றியது—அதாவது மாட்சிமை தங்கிய இஸ்லாமியர் காலம். இந்த இஸ்லாமிய நகரம் 13-ஆம் நூற்றாண்டில் தான் செங்கிஸ்கானால் அழிக்கப்பட்டது. பால்க் மிகப் பழமையானது; அதன் காலம் சுமார் 3000 ஆண்டுக்கு முற்பட்டது. ஆகவே அதற்கு நகரங்களின் அன்னை என்று பெயர். இந்தப் பட்டணத்தில் சோரஸ்தன் கிறிஸ்து பிறப்பிற்கு ஆயிரமாண்டிற்கு முன் வசித்தார் என்று சொல்லப்படுகிறது. அவருடைய கொள்கைகள் பிற்காலத்தில் ஜெண்ட் அவெஸ்தா என்ற பெயர் கொண்டு பெரிய நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டணத்தைக் கிரேக்கர்கள் "பாக்டீரிய" என்று அழைத்தனர். பாக்டீரியாவில் அலெக்ஸாந்தர் தமது வெற்றிகளுக்கிடையே தம் வீரர்கள் விரும்பிக் கேட்ட ஓய்வை அளித்தார்.

கிரேக்கர்களில் அநேகர் மேஸிடோனியாவிற்குத் திரும்பிச் செல்லாமல் பாக்டீரியாவிலேயே குடியிருந்து விட்டனர். மனைவிகளில்லாத வீரர்களாக வந்திருத்தலின் அவர்கள் அந்த நாட்டிலேயே மணம் செய்து கொண்டனர் ஆதலால் இரண்டாவது தலைமுறையிலிருந்து கிரேக்கர்கள் கிரேக்கர்களாக இல்லை; கிரேக்கோ பேக்டீரியர்களானார்கள். ஆகவே ஒரு காலத்தில் பால்க், கிரேக்கோ பாக்டீரிய சாம்ராஜ்யமாக விளங்கியது; அது சிரியாவிலிருந்து இந்தியாவரை வியாபித்திருந்தது. கிரேக்கர்கள் பேக்டீரியா என்று அழைத்ததைத் தான் இந்தியர்கள் பால்கிக் என்றழைத்தனர்.

இவ்வாறு, தற்காலப் பால்க் ஆனது ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி அழிந்த பழைய நகரங்களின் தலமேயாகும். ஒரு நகரம் அழியுந்தோறும் மற்றொரு நகரம் காலப்போக்கில் அதன் இடத்தில் உண்டாயிற்று. இவ்வாறே காலமெல்லாம் நடைபெற்றது. ஆகையால் பூமியின் கீழுள்ள மண்ணின் பல அடுக்குகளும் பல நகரங்களின் அழிவுப் பொருள்களை உடையன வாயிருத்தல் வேண்டும். தோண்டிக்கொண்டே போனுல் கிரோக்கோ பாக்டீரியர் நகரத்துப் பொருட்கள் உள்ள அடுக்கைக்கூடக் காணலாம். உண்மையில் பிரான்சு நாட்டுப் பழம் பொருளாராய்ச்சித் திட்டத்தார் பால்க்கில் ஆராய்ச்சி வேலையைத் தொடங்கினுர்கள். ஆனுல் 35 மீட்டர் ஆழத்திலே கூட, இஸ்லாமிய நாகரிகக் காலத்து அடுக்கிலே நின்றனர். ஆகவே திட்டத்தைக் கைவிட்டனர். மேலும் ஆழமாகத் தோண்டுவதில் சில நேரடிச் சங்கடங்களும் குறுக்கிட்டன.

பால்க்கில் ஒரு உயர்ந்த மண்மேடு உண்டு. அதன் பெயர் தொப்பி-இ-ரஸ்தம். அது பண்டைக்காலத்து

ரஸ்தம் என்ற மல்யுத்த வீரனது தொப்பியைக் குறிக்க வந்த சொல் என்று கூறினார்கள். மற்று, அந்த இடமானது ஒரு புத்த ஸ்தூபி அழிந்து போன இடம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். உண்மையில் ஆப்கானிஸ்தான் முழுவதுமே புத்தமத ஆதிக்கத்தின் கீழ் பல காலம் இருந்து வந்தது. குவந்தஸின் அருகில் கி. மு. 250-ஐச் சேர்ந்த அசோகரின் கல்வெட்டுச் சாசனம் ஒன்றிருக்கின்றது. ஆப்கானிஸ்தானின் ஏனையப் பட்டணங்களில் புத்த ஸ்தூபிகளும் ஆசிரமங்களும் மிகுதியாக உண்டு. ஆனால் மிகவும் கவனத்தைக் கவரும் பாழ் கட்டிடங்கள் ஹிந்துகுஷுக்கு வடக்கிலுள்ள பாமியன் பள்ளத்தாக்கிலுள்ளன. புத்தர்களின் கல்வெட்டுக்களில் மிகப் பெரியவை இரண்டு குறிப்பிடத்தக்கன. ஒன்று 170 அடி உயரமும் மற்றொன்று 115 அடி உயரமுமாகும். நேரமின்மையால் நான் பாமியனுக்குச் செல்லவில்லை.

பால்க்கிலும்கூட ஒரு அழகிய நீல மசூதி இருக்கிறது. இது திமுரீது காலத்தைச் சேர்ந்தது. இதையும் போய்ப் பார்வையிட்டேன். மசூதியினருகில் மூன்று வயோதிர்கள் எங்களை அணுகினார்கள். அவர்கள் வெகுநேரமாக எங்களைக் கவனித்துக் கொண்டேயிருந்தனர். அவர்களில் ஒருவர் ஒரு குல்லாவும் கலாத் என்ற அங்கியும் அணிந்திருந்தார். அமுதர்யாவின் இருபுறப் பிரதேசங்களிலும் உஸ்பெக் மக்களுக்கென "கலாத்" தேசீய உடையாக இருந்து வந்தது. ஆனால் ஆப்கானிஸ்தானின் இதர மக்களும் வசதியின் பொருட்டு அதனை அணிந்து கொள்கிறார்கள். கலாத் ஒன்று வாங்கி அணிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டாயிற்று. கலாத் அணிந்திருந்த வயோதிகர் தன்னை நகரத்தின் முன்னாள் தலைவர் (Ex-Mayor) என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, என்னுடன் பேசத் தொடங்கினார்.

"காபூல் தூதுவ நிலையத்திலிருந்து இந்தப் புராதன நகரத்தைப் பார்க்கும் பொருட்டு இவ்வளவு தூரம் வந்திருப்பதை அறிந்து பெருமைப் படுகிறோம். ஆதலால் ஓரிரவேனும் எங்கள் உபசாரங்களை ஏற்றுக்கொண்டா லன்றி உங்களைவிட மாட்டோம்" எங்கள் தலைவரான திரு. ஓரி (Ohri) அதிர்ச்சியடைந்துவிட்டார். ஆப்கானி யர்கள் எவ்வளவு உண்மையுள்ளவர்களென்றும் அவர்கள் அழைப்பை மறுப்பது எவ்வளவு சிரமமானது என்றும் பலநாள் அனுபவத்தில் அவருக்கு நன்கு தெரியும். என்றாலும், அது போன்ற சூழ்நிலையிலிருந்து எப்படித் தன்னை விடுவித்துக்கொள்வது என்பதும் அவருக்குத் தெரியும். வழக்கமான முறைக்குரிய சொற்களைப் பொறுக்கி எடுத்து அந்த நண்பர்கள்மீது சொரிந்தார்; மீண்டும் அடுத்த ஆண்டு நீண்ட நாள் திட்டங்களுடன் கட்டாயம் வருவதாக வாக்களித்தார். பின்பு அவர் கட்கு பிரியாவிடை வணக்கம் செலுந்தலானோம், பிரிவு வணக்கத்தின் முழுச் சடங்கும் விமரிசையாய் நடந்தேறியது. முதலில் தழுவல்கள்; பிறகு கைகுலுக்கல் கள்–பின்பு ஜீப்பினுள் ஏறிக்கொண்டோம்.

"சலாம் அலேக்கும்" என்றார்கள் அவர்கள் நாங்களும் "சலாம் அலேக்கும்" என்று பதிலுரை தந்து விடை பெற்றோம். ஆக மஜாருக்குத் திரும்பினோம்.

* * *

தூதுவரகக் கோஷ்டியினர் திரும்பிப் போகும்போது அவர்களுடன் ஹிந்துக்குஷ் பிரதேசத்தை திரும்பக் கடந்து செல்ல எனக்கு நேரமில்லை, ஆதலால் மஜாரில் காபூல் போகும் விமானத்தைப் பிடிக்கத் திட்டம் செய்து கொண்டேன். காலை 8 மணிக்கு அங்குள்ள ஆரியனு விமான வசதி நிலைய அலுவலகத்தை அடைந்தேன். அது ஆப்கானிய அரசாங்க விமான நிலையமேயாகும். விமான

நிலையத்தில் தயாராக இருப்பதற்குக் குறிக்கப்பட்ட நேரம் 12 மணி (நண்பகல்) காபூலை அடைவதற்குக் குறிக்கப்பட்ட நேரம் பிற்பகல் 2 மணி. ஆனால் நாங்கள் 2 மணி நேரம் பிந்தியே விமான நிலையத்தில் சேர்க்கப் பட்டோம். ஆப்கானியப் பிரயாணிகள் தாமதத்தைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. அவர்களுக்குத் தாமதம் மிகவும் பழக்கமானதே; மத்திய ஆசிய வாழ்க்கையின் போக்கில் அவசரமே கிடையாது; குறிப் பிட்ட நேரங்களில் அவர்கள் எந்த மகிமையும் இல்லை என்பது அவர்கள் கருத்து. மஜார் விமான நிலையம் எனக்குத் திருப்தியாக இல்லை, போவதற்கு ஒழுங்கான வழிகூட இல்லை. புறப்படுமிடம் வெறும் பாலைவனத்தின் தட்டை நிலமே. பிரயாணிகளுக்குத் தங்குமிடம் எதுவும் இல்லை. எல்லாம் இனிமேல் தான் கட்ட வேண்டும். ஆனால், ஆப்கானிஸ்தானில், மோட்டார்ப் போக்குவரத்து ஏற்படும் பொழுதெல்லாம் சாலைகள் தாராளமாக அமைக்கப்படும். விமானப் பிரயாண வசதிகளும் அவ்விதமே சிறந்திருந்தன. இறங்கும் வெளிகள் முதலில் அமைக்கப்படுகின்றன. பின்பு விமான நிலையம் கட்டப்படுகிறது. இதுவே நாட்டை நவீனப் படுத்தும் ஆப்கானிய முறை.

பிற்பகல் சுமார் 4 மணிக்கு நான் காபூலை அடைந் தேன். இப்பொழுது மஜாரில் ஒரு பிரசித்தி பெற்ற விமானநிலையம். இருப்பதாகக் கேள்வி.

* * *

புல்-இ-கும்ரியினருகேயுள்ள தொல்பொருள் அழிவுச் சின்னங்களை பார்வையிட்டபோது, ஆப்கானிய விவரங் களைத் தொடர்ந்து அறிந்து கொள்ளாவிடில் புராதன இந்தியாவின் வரலாற்றிலேயே எவ்வித ஆராய்ச்சியும்

செய்திருக்க முடியாது என்பது விளங்கிற்று. நமது ரிக் வேதத்தில் கப்பா நதியைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. ஆரியர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்த பொழுதே வேதங்களைத் தொகுக்கத் துவங்கிவிட்டனர் என்று அநேகர் கருதுகின்றனர். மகாபாரத காலத்தில் 'காந்தார்' என்றழைக்கப்படும் பிரதேசமானது தற்காலத்துக் குவந்தகார்ப் பிரதேசத்தை முக்கிய பகுதியாகக் கொண்டிருக்கிறது. இத்தகைய சரித்திரச் செய்திகளையுடைய காரணத்தால் ஆப்கானிஸ்தான் தானும் ஆர்யாளு (ஆரியர்களின் பூமி)தான் என்று கருதுகிறது. அரசியல் வரலாற்றில் கி. மு. 330ல் ஆப்கானிஸ்தானில் அலெக்ஸாந்தர் வந்தது ஒரு முக்கியத்துவத்தைக் குறிக்கும். ஆகவே, கிரேக்கோ பாக்டீரியர், சாக்கர்கள், கனிஷ்கர்கள் முதலியவர்கள், அதாவது மத்திய ஆசியாவிலிருந்து இங்கு வந்தவர்கள்—தங்கள் பண்பாடுகளை இந்தியப் பண்பாடுகளுடன் ஒப்புரவாக்கியிருந்தனர். ஆகவேதான் ஆப்கானிஸ்தானின் தொல் பொருளாராய்ச்சி இந்திய சரித்திர மாணவர்களுக்குச் சுவை தருவதாக உள்ளது. கி. மு. 250ல் அசோகரால் செதுக்கப்பட்ட கல்வெட்டுச் சாசனம் குவந்தகர் அருகில் கண்டுபிடிக்கப்பட்டது 1958ல் தான். அகமைக், கிரீக் ஆகியவற்றிலுள்ள மூலப்பகுதிகளுக்கு இது ஒன்றே ஆதார தஸ்தாவேஜியாக விளங்குகிறது; மொழி ஆராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி இவைகட்கு இருப்பிடம்போல் விளங்குகிறது. ஆனால், புல்-இ-கும்ரியிலிருந்து 20 மைல் தொலைவிலுள்ள அர்க்குக் கோட்டலின் கண்டு பிடிப்புகள் இன்னும் அதிகமாக உணர்ச்சி ஊட்டுபவைகளாகவுள்ளன.

ஆப்கானிஸ்தானிலுள்ள பிரெஞ்சு தொல்பொருள் ஆராய்ச்சிக் குழு 1952ல் சுர்க்குக் கோட்டலில் தங்கள் ஆராய்ச்சியைத் தொடங்கினார்கள்; ஆராய்ச்சி இன்னும்

முடிவுறவில்லை. 1960ல் நாங்கள் அந்த இடத்தைப் பார்த்தபோது மூன்று பிரெஞ்சு நிபுணர்கள் வேலைத் தளத்திலேயே குடியிருக்கக் கண்டோம். அவர்கள் இடங்களைச் சுற்றிக் காண்பித்தனர். முதலில் குன்றின் மேலுள்ள கோவிலின் அஸ்திவாரத்தைப் பார்த்தோம். அதில் ஒரு பெரிய சதுரஅறை இருக்கிறது. அதை நான்கு சுற்றுகள் தாங்குகின்றன. தரையின் மத்தியில் கல் பாவிய மேடை உள்ளது. கோவிலின் அத்திவாரத்தைச் சுற்றிலும் பிராகாரப்பாதை அமைந்துள்ளது. கோவிலின் பெரிய முற்றத்திலிருந்து நான்கு படிக்கட்டுகள் குன்றின் அடிமட்டத்தின்வழியே ஒரு பாசனக் கால்வாய்வரை அமைந்திருந்தன. ஐந்தாவது படிக்கட்டு ஒரு கிணற்றில் போய்முடிகிறது—இவைகளெல்லாம் எட்டு ஆண்டு ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டன, சுரக்குக் கோட்டல், குன்றின் மேல் கட்டப்பட்ட கோவில் அல்ல. ஒரு குன்றைத்தான் அரசன் ஒருவன் கோவிலாகச் செதுக்கியிருப்பான் என்று கூறலாம்.

குன்றின் உச்சியில் கல்லாலும் களிமண்ணாலும் ஆன சிலைகளின் உடைந்த துண்டுகள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டன, குன்றின் அடிவாரத்தில் சில கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்புக்கள்—கனிஷ்கர்களின் காலத்தைச் சேர்ந்த இவை —புத்தமதத்தின் சின்னம் எதனையுமே உணர்த்தவில்லை. கற்சிலைகள் மத்திய ஆசிய உடைகளை அணிந்த மனிதர்களைக் குறித்தன. உண்மையில், இதுபோன்ற சிலைகள் மதுரையிலும் உள்ளன. இந்தச் சிலைகளிலொன்று கனிஷ்கரது சிலை என்றே கல்வெட்டின் வாயிலாகத் தெரிகின்றது. குன்றின் அடிவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கனிஷ்கரின் கல்வெட்டு குஷான்களது மொழியின் மாதிரியாகும். இந்த எழுத்துக்களில் சில பகுதிகளை மட்டுமே

அறிய முடிகிறது. அக்காலத்தில் பாக்டீரியாவில் வழங்கிய ஆரிய மொழியைக் குஷானர்கள் பேசினார்கள் என்பது திட்டமாக அறியப்படுகின்றது.

கோவிலைச் சார்ந்த இடம் எங்குமே புத்தமதச் சின்னம் எதுவும் காணப்படாமையால், கனிஷ்கரின் மதத்தைப் பற்றிய பிரச்னை தானே எழுகிறது. இதே பிரச்சினையைத்தான் பிரெஞ்சு நிபுணர்கள் முனைந்து ஆராய்ச்சி செய்தனர். கனிஷ்கர் இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த பின்னர்தான் புத்தமதத்தை மேற்கொண்டார் என்பது அவர்களுடைய கருத்து. அதற்கு முன் அவர் வேறொரு மதத்தையே அநுசரித்திருக்க வேண்டும்—சுர்க்குக் கோட்டல் அவர் வாழ்க்கையின் அந்த அம்சத்தைத்தான் குறிக்கும்—அது பாக்டீரியாவைப் பற்றிய செய்திகளையே கூறுவதாகும். அது என்ன மதமாக இருக்கக்கூடும் என்பது ஒரு பிரச்சினை. கோவிலில் வணங்கப்படுவது கனிஷ்கருடைய சிலையேதான் என்பது ஒருசாரார் துணிபு. பேராசிரியர் டானியேல் ஸ்லம்பர்கொர் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார். புராதன காலங்களில் உயிரோடிருப்பவர்களைக்கூடக் கடவுளாகக் கருதித் தொழுகை முறைகளை உண்டாக்கி விடுவது வழக்கம். கோயிலின் பெரிய கல்வெட்டில் அதன் பெயர் "கனிஷ்கா நிகேடார்" என்று மட்டுமே குறிப்பிடப் படுகிறது.

மற்றொரு ஐதிகம், அந்தக் கோயிலானது அக்னியின் ஆலயம் என்பது. ஏனெனில் அதன் மத்தியிலுள்ள கப்பாசிய மேடையானது நெருப்பு மயமான பீடம்போல் காணப்பட்டது. சாம்பல்கள்கூட அங்குக் காணப்பட்டன. சுர்க்குக்கோட்டல் பொருள்கள் கண்டுபிடிக்கப்

பட்டவுடன், பிரெஞ்சு நிபுணர்களுக்கு அநேக பார்ஸீயர்களிடமிருந்து கடிதங்கள் வந்தன. அவர்கள் ஒரு ஸோரோஸ்திரியன் தொழுகைத்தலத்தைக் கண்டுபிடித்த தாக எண்ணினார்கள். ஆனால் இந்த நெருப்புக்கும் ஸோரோஸ்திரியத்திற்கும் தொடர்பு எதுவுமில்லை என்று நன்குணர்ந்திருந்தார்கள். நெருப்பானது குறிப்பிடும் தெய்வம் என்ன என்பதை இன்னும் நிர்ணயிக்கவில்லை. ஆனால் இதற்கிடையில் முதலாவது கோட்பாட்டின்மேல் அதிக நம்பிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கருத்து உண்மையானால் கனிஷ்கர்களது மதக் கொள்கைகள் பற்றிய ஒரு புதிய பிரச்சினையைக் கவனிக்க வேண்டியுள்ளது. புத்தமத இலக்கியங்களுக்கிணங்க கனிஷ்கர் ஒரு புத்தமத பக்தர் என்பது மட்டுமல்ல; தொழுகை முறையையும் அவர் கண்டுபிடித்தார்; அதன்படி அவரே அவரது குடிமக்களுக்குத் தெய்வமுமானார்.

இவ்விதமாக, சுர்க்குக் கோட்டல் மாபெரும் சரித்திரக் காலத்தையும்—கனிஷ்கர் காலம்—ஒரு மாபெரும் அரசனையும்—கனிஷ்கச் சக்கரவர்த்தி — உணர்த்தும் தொல்பொருள் சின்னங்களை நமக்குத் தந்து உதவுகின்றது. இந்தப் பழங் கட்டிடங்களில் நாம் காண்பதென்ன? கிரேக்கப் பண்பாடு பொருந்திய மத்தியஆசிய நாகரிகமே. இந்த நாகரிகத்திற்கு ஆதாரமானவர்கள் இருவகைப்படுவர். கிரேக்கோ பாக்டீரியர்களும், கனிஷ்கர்களுமே. சுர்க்குக் கோட்டலில் நாம் காண்பது இரட்டைக்கலை எனத் தகும். கிரேக்க நாகரிகம் ஒருபுறம்; ஆசிய நாகரிகம் ஒருபுறம். பச்சைச் செங்கற்சுவர் பாக்டீரியக் கலையைச் சார்ந்தது; கற்சுவர்கள் ஆசிய நாகரிகத்தைச் சார்ந்தது. சிலைகளின் உடைகள் இன்னும் ஆப்கானியக் குதிரை வீரர்கள் அணிந்துவரும் பாக்டீரிய நாகரிகத்திற்குரியவை. கல்வெட்டுக்களின் எழுத்துக்கள்

பாக்டீரிய மூலத்தில் கிரேக்கைத் தழுவியவை. பின்னல் புத்த சமயத்தோடு இணைந்த இந்த இணைப்பே கிரேக்கோ—புத்த நாகரிகம் அல்லது கந்தாரக்கலை என்பதை உருவாக்கிற்று. இவ்விதமாக, பாக்டீரியாவில் பிறந்த காந்தார் நாகரிகத்தின் ஆரம்பப் பருவம் சுர்க்குக் கோர்ட்டவிஞல் அறியப்படுகிறது.

அத்தியாயம் 7

# கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே ஆப்கானிஸ்தான்

மஜாரின் கடும் வெப்பத்தை அநுபவித்த பின்னர், காபூலின் சீதோஷ்ணநிலை மிக ஆச்சரியமாகத் தெரிந்தது. காபூல் சமுத்திர மட்டத்திற்கு 6,000 அடி உயரத்திலுள்ளது. ஜூன் மாதம் அங்கு வெப்பமும் கடுமையாக இராது; குளிரும் அவ்வளவு கடுமையாக இராது. ஆனால் அதுதான் பழங்கள் போதிய அளவு கிடைக்காத மாதம். அப்பொழுது கிடைக்கும் பழங்கள் பிளம், செரி, மல்பேரி, இவைகளே. சந்தைகளில் பச்சைக் காய்கறிகளைக் காண்பது அரிது. சிற்றுண்டிகளில் தந்தூரி, நேன்ஸ், புலாவ் தேநீர் இவை உபயோகப்படுகின்றன. சாப்பாட்டிற்கு புலவு அல்லது பிரியாணி பரிமாறப்படும். ஆப்கானிஸ்தான் முழுவதிலும், நேன்ஸ் ரொட்டிக்காரர்களிடம் சுட்டு வாங்கப்படுகிறது; அல்லது விலைக்கே வாங்கப்படும். கடை வீதிகளில் நேன் சுடுபவர்கள் தலையில் குல்லாவுடன் அமர்ந்து கொண்டு, அவற்றை வெட்டி வெட்டி தந்தூரில் சுட்டு எடுக்கின்றனர். தந்தூர் என்பது எரிந்துகொண்டிருக்கும் ஒரு மண்குழி. அநேகர் தங்கள் பதார்த்

தத்தைப் பச்சையாகக் கொணர்ந்து குறைந்த செலவில் இந்தத் தந்தூரில் சுட்டு வாங்கிக்கொண்டு போகின்றனர். 1960ல், ஒரு ஆப்கானிக்கு ஆறு நேன்ஸ் சுட்டு வாங்கிக் கொள்ளலாம்.

ஆப்பிளும் கொய்யாப் பழங்களும் செப்டம்பரிலிருந்துதான் நிறையக் கிடைக்கும் என்று கேள்விப் பட்டேன். அந்த ஊருக்கே உரித்தான பானீர் (பால் கட்டி) மிகவும் மலிவாகக் கிடைக்கும். ஒரு கை உலர்ந்த திராட்சைகளும் (கிஸ்மிஸ்-Kismis) ஒரு துண்டு பாற் கட்டியும் எனது நண்பன் துனிச்சந்துவின் வழக்கமான சிற்றுண்டியாகும்.

ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மை மக்கள் புலா லுணவை அடிக்கடி உண்பதில்லை; இதற்குக் காரணம் எளிமை. கோதுமை ரொட்டிதான் ஆப்கானியரின் பிர பலமான உணவு; சில சமயங்களில் அரிசி உணவு இடம் பெறும். பருவங்களில் கிடைக்கும் பழங்கள் இந்த உணவு வகைக் குறைபாட்டை ஓரளவு நிரப்பும். பொதுவாக ஆப்கானியர் நாள் ஒன்றுக்கு மூன்று முறை சாப்பிடு வார்கள். பட்டணத்திலும் கிராமத்திலும் சாதாரண மான ஒரு சாப்பாட்டிற்கு, ஒரு பெரிய நேன், ஒரு ஜாடி தேநீர், அவ்வப்போதுள்ள சில மலிவுப் பழங்கள் இவை களே இருக்கும்.

காபூல் நகரம் இரு பாகங்களாக அமைவுறும். ஒன்று பழையது. மற்றது புதியது. பழைய காபூலிலுள்ள இரண்டு மாடிக் மூன்று மாடி கட்டிடங்கள் எல்லாம் பச்சைச் செங்கல்களால் கட்டப்பட்டவை. வெளித் தோற்றத்திற்கு ஒவ்வொரு கட்டிடமும் ஒரு அரண் போல் விளங்கும். நவீனச் சுத்தி முறை (Modern Sanitation System) இன்மையால், பின்புறச் சந்துகள், குப்பைகள், மலஜலங்கள் முதலியவற்றால் ஆபசமாகிக் கிடக்கும்.

யுது நகரமோ (சார்-இ-நே) வென்றால் அகன்ற வீதிகளும் நவீனக் கட்டிடங்களும் உடையதாய் விளங்குகிறது. இந்தக் கட்டிடங்களில் சுத்தி செய்யும் ஏற்பாடுகள் உண்டு. இந்த "சார்-இ-நே"யில் தான் (புதுநகர்) அந்நியத் தூதுவ நிலையங்களும் குடியிருப்புகளும் பெரும்பாலும் அமைந்துள்ளன. ஆப்கானிஸ்தானின் முன்னேற்றத்திற்கு முக்கியமான காரணம் அந்நிய நாட்டு உதவியேயாகும்.

ஆப்கானிஸ்தானின் பிறநாட்டுக் கொள்கை நடுநிலைமையை அடிப்படையாகக் கொண்டது. ஐக்கிய நாடுகளில், ஆப்கானியப் பிரதிநிதி "கம்யூனிஸ்ட் பிளாக்" கிற்குப் பல பிரச்சினைகளிலும், "மேற்குப் பிளாக்" கிற்கு மாவிட உரிமைப் பிரச்சினையிலும் வாக்குகளை (Votes) அளித்திருக்கின்றனர். பிரிவினையில்லாத இந்தக் கொள்கையானது, எல்லா இடங்களிலிருந்தும் அந்நிய உதவியைப் பெறப் பெரிதும் பயன்பட்டது. அங்கே கிடைத்த முதல் அந்நிய நிதி உதவி இந்தியாவிற்குக் கிடைப்பதைவிட மிக அதிகமாக உள்ளது.

மிகப் பெரிய உதவித் தொகையானது சோவியத் யூனியனிலிருந்து கிடைக்கிறது. ரஷ்ய, செக் (Russian and Zech) கடன்களில் ஒரு பெரிய வசதி என்னவென்றால், சாமான்களின் உருவத்தில் (ஏற்றுமதிகளை அதிகரித்து) அவற்றைத் திருப்பிக் கொடுக்கலாம். ஆனால் அமெரிக்காவில் கொள்ளும் கடன்களை டாலர்கள் மூலமேதான் தீர்க்கவேண்டும். சமீபகாலத்தில் ஆப்கானியத் தொழில் முன்னேற்றம் அடைவதற்கு சோவியத் யூனியனே காரணமாயுள்ளது; அமெரிக்கா, தொழிலுக்கு உதவி புரிவதைவிட கல்விக்கும் வேளாண்மைக்குமே அதிக ஆர்வத்தோடு உதவுகிறது. ஆயிரக்கணக்கான அந்நிய நிபுணர்கள் ஆப்கானிஸ்தான் உறுதியாக முன்னேறு

வதற்கு உதவி புரிய முன் வருகிறார்கள். அவர்களில் பெரும் பான்மையர் ரஷ்யர்கள். ரஷ்யர்கள், ஆப்கானியர்களுக்கு இயந்திரப் (Inplant) பயிற்சி யளிப்பதில் மற்றவர்களைவிட அதிக வெற்றியடைந்துள்ளனர். 500க்கு மேற்பட்ட ஆப்கானிய வேலையாட்கள் செங்கல் கட்டுதல். பற்ற வைப்பு, உலோகப் பொருள் வேலை, பிட்டர் (Fitter) தொழில் முதலிய பல்வேறு தொழில்களில் பயிற்சிபெறுகிறார்கள். ரஷ்யர்கள் காபூலின் நவீன "கிரேய்ன் எலிவேட்டர்" (Crain Elevater) கட்டினார்கள். ஜங்கலக் தொழிற்சாலை இயந்திர இயக்க வேலைகளில் 450 ஆப்கானியர்கள், மோட்டார் உதிரிச் சாமான்கள் செய்வதில் பயிற்சி பெற்றார்கள். கிசில் குவலாத் துறைமுகக் கட்டுமான வேலையில் 400 ஆப்கானியர்கள் சோவியத் நிபுணர்களால் பயிற்சி பெற்று இயந்திர இயக்குநர்களாகவும், நிலப் பெயர்ப்பாளர்களாகவும், தூக்கி இயக்குநர்களாகவும், காறையமைப்பாளர்களாகவும் இயந்திர ஓட்டிகளாகவும் விளங்குகிறார்கள். ஹிந்துகுஷ் பெருஞ்சாலைத் திட்டத்தில் 6,000 ஆப்கானியர்கள் சாலையமைப்பு வேலையில் பயிற்சியடைந்தனர். இதே வகையான பயிற்சி அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை இவற்றின் உதவியாலும் நடைபெறுகிறது; ஆயின் அது குறைந்த அளவினதே.

இரண்டாவது உலகப் போருக்குப்பின், கொஞ்ச நாள், ஆப்கானிஸ்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. போரின் தொடக்கத்திலிருந்தே கரக்குல் ஏற்றுமதிகளை வாங்கிய நாடு அமெரிக்க ஐக்கிய நாடு ஒன்றே. ஏற்றுமதி இறக்குமதிச் சங்கடங்களின் நெருக்கத்தினால் வழக்கமான பொருள்கள் கூடக் கிடைக்காது, ஆப்கானிஸ்தான் பஞ்சமுற்றது. ஆக, கரக்குல் விற்பனை மூலம் அமெரிக்க

ஐக்கிய நாடுகளில் பெரும் அளவிற்கு டாலர்களைச் சேர்த்தது. இயல்பாக தன் நாட்டுத் தொழில் வளர்ச்சியின் நலனுக்காக அந்தத் தொகை பயன்படும் என்று ஆப்கானிஸ்தான் எண்ணங் கொண்டது. ஆனால், அமெரிக்கா வேறு விதமாகக் கருத்துரைத்தது; ஹால்நந்துப் பள்ளத்தாக்கின் பலநோக்குத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பாலைவனத்தின் ஒரு பகுதியைப் பண்படுத்தும் பொருட்டு ஹெல்மந்து, அர்கன்பாத் நதிகளில் வசதியான இடங்களில் அணைகளைக் கட்டி நீர் தேக்குவதே அந்தத் திட்டம். இந்த மாபெருந் திட்டம் பணச் செலவு மிக்கது. ஆப்கானிஸ்தானின் சொந்தப் பொருள் பலத்தால் அதைத் தொடங்க முடியாது. (திட்டம் முடிவுற மொத்தச் செலவு 120 மில்லியன் அதாவது 60 கோடி ரூ ஆகும்). ஆகவே அமெரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதி பாங்கி ஒரு பெரிய கடன் தொகையளிக்க முன் வந்தது. 1946ல் நில அளவை வேலை தொடங்கியது.

மன்ற மனைகள் (Club houses), நீச்சல் குளங்கள் முதலியவைகள் பிற கட்டுமானங்கட்கு முன்பு கட்டப்பட்டன. அணைத்திட்டம் வருடக் கணக்கில் வேகமற்று நடைபெற்றது. எதிர் பார்த்த பலன்கள் கிட்டவில்லை. ஆனால் மதிப்பிட்ட செலவு அதிகரித்துக்கொண்டே போயிற்று. பண்பட்ட நிலத்தில், அதாவது 5 லட்ச ஏக்கர் பரப்பில். ஆயிரக்கணக்கான நாடோடிகள் குடியேற்றப்படலாம் என்று முதலில் மதிப்பிட்டார்கள். இரண்டு பெரிய அணைகளும் அவற்றைச் சார்ந்த பாசன வேலைகளும் குறிப்பிட்ட காலத்திற்குச் சில மாதங்கட்கு முன்பே முடிவுற்றன. ஆனால் நிலப் பண்பாடு, நாடோடிக் குடியேற்றம் ஆகியவை நடைபெறவில்லை.

திட்ட வேலையானது ஒரு அமெரிக்கத் தனிக் கம்பெனியாரால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. சரியான நில அளவை கிடையாது. 20,000 ஏக்கர் திருந்திய நிலத்தில் நடந்த முதல் வருடப் பாசனத்திற்குப்பின், நிலப்பரப்பு உப்பு மண்ணாக வெள்ளை நிறத்தில் காணப்பட்டது. புதிதாகக் குடியேறிய நாடோடிக் குடியானவர்களுக்கு நிலத்தையும் தண்ணீரையும் கையாளும் முறை புரியவில்லை. திடீரென்று ஏராளமான தண்ணீர் வினியோகமானதால், தங்கள் நிலங்களை மூழ்கவிட்டார்கள்; உப்புச்சத்து அழிவு சக்தியின் அளவிற்கு ஓங்கியது ஆதலால் உப்பை நீக்குவதற்கு மறுபடியும் பெருத்த தொகையைச் செலவிட நேர்ந்தது. அமெரிக்கக் கம்பெனியானது நில அளவை முறையைச் செவ்வனே கைக்கொண்டு திட்டத்தின் பலதிறப்பட்ட அம்சங்களையும் கவனித்துச் செயலாற்ற முற்பட்டிருந்தால் இந்தச் சீர்கேடு தவிர்க்கப்பட்டிருக்கும்.

இந்தக் குறைபாட்டால் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு உள்ள மதிப்பு மிகவும் பாதிக்கப்பட்டது. ஆப்கானிய அமெரிக்கப் பத்திரிகைகள் குற்றச்சாட்டுகளை மிகுதியாக எடுத்தியம்பின ஹெல்மாந்திற்கு "ஆப்கானிஸ்தானின் துக்க நதி" என்றும், அமெரிக்க மதிப்பின் தண்ணீர்ச் சவக்குழி" என்றும் நாமம் சூட்டினார்கள். அந்தச் சம்பவத்திற்குப் பின் ஆப்கானிஸ்தானில் பொதுஜனக் கருத்து அமெரிக்காவுக்கு எதிராக வளரத் தொடங்கியது. 1954 லிருந்து பாக்கிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவியளிக்கத் தொடங்கவே, இந்த வேற்றுமை எண்ணங்கள் அதிகரித்து உறுதிப்பட்டன. அமெரிக்காவோ என்றால், கடந்த ஐந்தாண்டுகளில் இழந்த மதிப்பை மீண்டும் பெறுதற்கு (முக்கியமாக ஹெல்மாந்துப் பள்ளத்தாக்கில்) நினைத்து ஆப்கானிஸ்

தானுக்குத் தனது உதவியை அதிகரித்தது. ஆனால் இதற்கிடையில், சோவியத் யூனியன் ஆரம்பித்த எதிர் இயக்கத்தால் இழுப்புற்றது. இன்றைக்கு, சுமார் 40 சதவீத வர்த்தகம் கம்யூனிஸ்ட் நாடுகளுடன் நடத்தப் படுகின்றது. கூடிய விரைவில் இந்தச் சதவீதம் மேலும் உயரலாம்.

ஆனால் ரஷ்யர்கள் மிகவும் விவேகமாக, வேறு முறையில் காட்சியளித்தனர். அமெரிக்காவின் மிகுதிக் கோதுமை (PL 48 ல்) ஆப்கானிஸ்தானின் உணவுப் பற்றுக்குறைக்கு ஆண்டுதோறும் ஈடுகொடுத்து வந்தது. ஆனால், காபூலில் ரஷ்யர் கட்டிய கிரெயின் எலிவேட்டர் ரொட்டி தயாரிப்பு நிலையம் (Bakery) இவற்றின் வெற்றியின் வழியாக, உணவுத் துறையில் ஆப்கானிஸ்தானுக்கு உதவிபுரியும் பெருமையை ரஷ்யர்கள் கவர்ந்துகொண்டார்கள். ஆயிரக்கணக்கான டன் கோதுமையைச் சேர்க்கும் மாபெரும் கிரெயின் எலிவேட்டர்கள், தினமும் 180 டன் கோதுமையை மாவு இயந்திரச் சாலைக்குள் செலுத்துகிறது, மாவு உற்பத்தியில் 40 சதவீதம் அருகில் இணைக்கப்பட்ட பேக்கரிக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பேக்கரி தன்னுடைய உற்பத்திப் பதார்த்தங்களைச் சில்லறை வியாபாரிகளுக்கும் ஏனைய விநியோகஸ்தர்களுக்கும் வண்டிகளில் ஏற்றி அனுப்புகின்றன. இந்த கிரெயின் எலிவேட்டர்களும் ரொட்டிக் கிடங்குகளும் கறுப்பு விற்பனைக்கு ஏதுவான மாவு, கோதுமை இவற்றிற்குப் பதிலாக, ரொட்டியை அரசினர் கடைகளில் விற்பதற்கு, அனுமதி வழங்கின. இந்தக் கடைகளிலிருந்து நகர ஏழை மக்கள், கட்டுப்பாட்டு விலைக்கு, ரொட்டியை வாங்கும் போது அவர்கள் ரஷ்யருக்கு மதிப்பு அளிப்பவர்களாகின்றனர். 1962 ஆம் ஆண்டிலேனும் நகரப் பேருந்துகள்

(City bus) காபூல் வீதிகளில் ஓடத் துவங்கின வென்றுல் அது ரஷ்யாவின் பரிசு எனலாம். இவ்விதம் ரஷ்யாவின் உபகாரங்களும் தொழிற்சாலையுதவியும் உயிர் நாடி போன்ற முக்கிய இடங்களில் மிகுந்துவிட்டதால், ரஷ்யர்களுக்கு வேறு விளம்பரமே தேவையில்லை.

உதவிபுரியும் குறிப்பிட்ட ரஷ்யர்களுக்குச் சாதகமான ஒரு நுட்பம் என்னவெனில், உதவி பெறும் நாட்டில்-ஆப்கானிஸ்தானில்-நடத்தும் ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கையே யாகும். ரஷ்யத் தொழிலாளிகளின் நலத்தை முன்னிட்டு, குடியேற்றங்களையும், குளங்களையும் முதலில் அமைக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துவதில்லை. காபூலில், டஜன் கணக்கில் ரஷ்யர்கள் நகரப் பஸ்களில் (City bus) சென்று கொண்டிருப்பதை எல்லாவிடங்களிலும் கண்டேன். ஆனுல் அமெரிக்கர்களை அப்படிப் பார்க்க முடிவதில்லை. அமெரிக்கர்களுக்கு எதையும் விரும்பி அறியும் ஆவல் உண்டு. ரஷ்யர்களுக்கு (வெளித் தோற்றத்திற்காகவேனும்) அந்தத் தன்மை கிடையாது. ஒருவேளை, ரஷ்யர்கள் கம்யூனிஸத்தை உருவாக்கும் பணியிலீடுபட் டிருக்கின்றனரோ என்று ஆப்கானியர்கள் ஐயப்பாடு கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவர்கள் ஆப்கானியர்களை அதிகமாகக் கேள்வி கேட்கக்கூடாது, என்று அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கலாம். ஆப்கானிஸ்தானின் ஒரு சாதாரண மனிதன், கம்யூனிஸமும் இஸ்லாமியமும் கொள்கையில் முற்றிலும் எதிரானவை என்று அறிவான். ஆயினும், ரஷ்யாவானது ஆப்கானிஸ்தானின் முக்கிய நட்பு நாடு என்று கருதுகிருன். வேலைத்தலத்தில், அவசியப்பட்டால், ரஷ்யத் தொழிலாளி ஒருவன் ஒரு நேன் ஒரு ஜாடித் தேநீர் இவற்ருல் பசியாறத் தயங்கு

வதில்லை என்ற உண்மையானது ஆப்கானியனின் உள்ளத்தைத் தொடுகின்றது.

1919-ல் ஆப்கானிஸ்தானின் சுதந்திரத்தை, எல்லா நாடுகளுக்கும் முதலாவதாக ஒப்புக்கொண்டது ரஷ்யா தான். ரஷ்யாவின் கோரிக்கையினால், இரண்டு நாடு கட்குமிடையே நீடித்த எல்லைத் தகராறு சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. நியாயப்படி நடுவோட்டக் கொள்கை (Mid stream principle (i. e) Thalwef) பின் பற்றப்பட வேண்டுமென்றாலும் ரஷ்யாவின் ஸார்கள் (Czars) அமுதர்யாவின் முழுப் பிரதேசத்தையும் தமதாக்க முனைவது வழக்கம். 1946-ல் சோவியத் யூனியன் அந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டு ஆப்கானிஸ்தானுடன் ஒரு எல்லை உடன் படிக்கையில் கையொப்பமிட்டது. இந்த உடன் படிக்கையின்படி ஆப்கானிஸ்தானுக்கு நதியிலுள்ள சில தீவுகள் கிடைத்தன.

1955 லிருந்து ரஷ்யாவின் புதிய கடன்கள் அறிவிப்பு ஆண்டுதோறும் நிகழும் ஒரு அம்சமாயிற்று. இத்தகைய கடன்கள் சாலையமைப்பு, கிரெய்ன் எலிவேட்டர்கள் நிறுவுதல், எண்ணெய்க் கண்டு பிடிப்பு, நதித் துறைமுக அபிவிருத்தி, தேசப்பாதுகாப்பு, மின்சார உற்பத்தி நீர்ப்பாசனம், இன்னும் இவைபோன்ற முன்னேற்ற வேலைகள், முதலிய நோக்கங்களுக்கே வழங்கப்படு கின்றன.

ஆப்கானிஸ்தானுக்கு எந்த உதவியும் செய்ய ரஷ்யா தயாராக இருக்கிறது; அதன்பொருட்டு ஆப் கானிஸ்தான் நடுநிலைமைக் கொள்கையில் நிற்க வேண்டும். அதற்கு ரஷ்யா பலவகைகளில் உதவி புரிகின் றது. 1935லிருந்து அமுதர்யாவின் இருபுறங்களிலுமுள்ள பயிர்களுக்குச் சேதம் வராமல் தடுக்கும்பொருட்டு, வெட்

டுக்கிளி போன்ற பறக்கும் பூச்சிகளின் படையை ஒழிக்க வல்ல விமானங்களை அவ்வப்போது ரஷ்யா அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஜலலாபாத் பள்ளத்தாக்குப் பிர தேசங்களுக்கு கோதா (Khoda) மிகுந்த தண்ணீர் அளிக் கிறது. ஆனால் வினியோகம் சரியில்லை. ஆக, ரஷ்யர்கள் வந்து காபூல் நதியைச் செம்மைப்படுத்தி ஒரு வாய்க்கால் கட்டினார்கள். திட்டப்படி 1965ல் சுமார் 15,000 ஆப் கானிய நிபணர்களும் 320 ரஷ்ய நிபுணர்களும் இந்த ஜலலாபாத் பலநோக்குத் திட்டத்தை நிறைவேற்றி முடித்தார்கள். ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்க மறுத்தபோது ரஷ்யா வழங்கிற்று. ஆப்கானிஸ் தான் தனது ஏற்றுமதிப் பொருள்களை வழக்கம்போல் விற்கத் தவறும்போதெல்லாம், ரஷ்யா விற்காத பொருள்களை வாங்கிற்று. முதலாளித்துவ நாடுகளில் பருத்தி, பழங்கள், ரோமம், கரக்குல் போன்ற பயிர்த் தொழிற் பொருட்களின் விலையானது இறங்கிக்கொண்டு போவதோடு, தாறுமாறான விலை மாறுபாட்டினால் பெரும் நஷ்டம் விளைவிப்பதுண்டு. ஆக, ஆப்கானிஸ் தான் கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுடன் கொண்டுள்ள வர்த்தக நிலவரம் எப்பொழுதும் ஒரேவிதமாக இருப்ப தில்லை, ஆனால் ரஷ்யாவுடன் நடத்தும் வர்த்தகம் அவ் விதச் சிக்கலுக்கு உட்படுவதில்லை. வர்த்தக உடன்படிக் கைகளின்படி, வரப்போகும் ஆண்டுகளில் எவ்வளவு விற் பனை செய்யலாம். எந்த விலையைக் கையாளலாம் என்ப தெல்லாம் ஆப்கானிஸ்தானுக்கு வெகு முன்பாகவே தெரி யும். மேலும் ஆப்கானிஸ்தான் ஒரு சிறு நாடாயிருந்த லால், ரஷ்யா அதனிடம் எப்பொழுதுமே சொல்லக் கூடும். அதாவது ''அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் அனுப்ப முடியாத பொருட்களை எங்களுக்கு அனுப்ப லாம்; நாங்கள் முடிந்தவரை முயல்கிறோம்'' என்று அறி விக்கக்கூடும். இது அவர்களுக்கு ஒரு பெரிய நன்மை.

ஆப்கானிஸ்தானில் சோவியத் செய்யும் கணிசமான உதவி மறைமுகமான நன்மையைம் பயக்கும் ஒரு சக்தியை பிறப்பிக்கிறது. இதனுல் அமெரிக்கர்களுக்குப் போட்டியுணர்ச்சி யெழுகிறது. இப்பொழுது அவர்கள் கடன் நிபந்தனைகளைத் தளர்த்தி விமானத் துறையிலும் கல்வித் துறையிலும் பெரும் போக்கான உதவியைச் செய்துள்ளார்கள். ஆப்கானிஸ்தானின் ஒரே விமானத்துறைக் கம்பெனியான ஆர்யானு விமான வசதியமைப்பாளர் (Aryana Airlines) என்ற ஸ்தாபனத்திடம் பெரும் முதல் போட்டுள்ளனர். இது 49 சதவீதம் பங்குகளைச் சொந்தமாக்கிக் கொள்ளும் நிபந்தனையின் மேல் ஏற்பட்டுள்ளது. குவந்தகாரிலுள்ள உலக விமானநிலையமும், குவந்தகாரிலிருந்து காமனுக்கும். ஜலலாபாத்திலிருந்து பெஷாவருக்கும் செல்லும் சாலைகளும், அமெரிக்கர்களால் போடப்பட்டவையே. கல்வித் திட்டத்தையே மாற்றியமைக்கும் முறையில் அமெரிக்க உதவி திருப்பப் பட்டுள்ளது. காபூலிலுள்ள கல்வி ஸ்தாபனம் (Institute of Education) கொலம்பியாப் பல்கலைக் கழகம் ஆசிரியர் கல்லூரியின் நிதியையெல்லாம் சேர்த்து பயிர்ச்சித் தரம், பாடத் திட்டங்களின் அபிவிருத்தி, பாடப் புத்தகங்கள், கல்விமுறை முதலியவற்றில், பயன்படுத்துகிறது. இவ்வாறே அமெரிக்க உதவியானது, பயிர்த்தொழில் கல்வி நிலையம், ஆப்கானிய நுண்கலை ஸ்தாபனம் (Afgan institute of Technology) விமானத்துறைப் பயிற்சிக்கூடம் (Aronotical Training) மோட்டார் இயந்திர இயக்குநர் பயிற்சித் திட்டம் (motor mechanics) முதலிய ஸ்தாபனங்கட்கும், இன்ன பிற நிறுவனங்கட்கும் பயன்படுத்தப்படுகின்றது. அத்தகைய ஒரு அமெரிக்க நிபுணர் ஒருவரைச் சந்தித்தேன்—பேராசிரியர் பிளாக்மான் (Black man) என்ற அவர்காபூல் பல்கலைக் கழகத்தில்

***பொருளாதாரப் பாடத்தை நடத்தி வந்தார். அத்துடன் முதன்முறையாக, ஆப்கானிய அறிஞர் ஒருவருடன் சேர்ந்து நாட்டின் வருவாயை மதிப்பீடு செய்தார்.***

உதவியளிக்கும் காரியத்தில் ரஷ்யாவுக்கு அதிகமான வசதிகள் உண்டு. ரஷ்யன் தொழில் நுணுக்கத்துறை (technology) தழுவி ஏற்க மிகவும் எளிதாயிருக்கும். சோவியத் நகரவாசிகள் காற்றுக் கட்டுப்பாட்டமைப்பு, (Air—conditioning) குளிரூட்டிகள் (refrigeration) முதல் தரத் துப்புரவு முறை (Sanitatin) எதுவுமின்றி வேலை செய்வார்கள். இறக்குமதிப் பிரதேசத்தில் சிக்காது கிராமத் தரத்தில் ஜீவிக்க அவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் நாட்டினர் ஆப்கானிஸ்தானியர்களைவிட பூகோள ரீதியில் முற்பட்டவர்களாயிருத்தல் அவர்களுக்குச் சாதகமாகவுள்ளது. துருக்கிஸ்தானின் சோவியத் பகுதியும் ஆப்கானியப் பகுதியும் ஒரேவிதமான சீதோஷ்ண நிலை, மண், தேசீயம், மொழி முதலியவற்றை உடையன. ரஷ்யர்கள் நேராக ஆப்கானிய எல்லைகளைக் கடந்து தங்கள் மனிதர்களையும் சாமான்களையும் கொண்டு வந்தார்கள். ஆனால் அமெரிக்க உதவிச் சாமான்கள் ஆப்கானிஸ்தானிற்குள் வருவதற்கு இரான் அல்லது பாகிஸ்தான் வழியாக உள்ள உலக நாடுகளின் பாதைகளை நம்பியிருக்க வேண்டும். திட்டமிட்ட பொருளாதாரத்தை உருவாக்கப் பணியாற்றும் ஆப்கானிய அதிகாரிகள் ரஷ்யாவை ஒரு நேசநாடாகக் கருதி, விரும்புகிறார்கள். தாஜிகிஸ்தானிலும் உஸ்பெகிஸ்தானிலும் உள்ள சோவியத் மாநிலங்களை, வேளாண்மை இரட்டை ஆட்சியிலிருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு மாறியதற்கு உதாரணங்களாக மதிக்கின்றார்கள்.

காபூலிலுள்ள அந்நியர் குடியிருப்புக்களில் நாட்டிற்கு உதவி வழங்குவதிலுண்டான அமெரிக்க-ரஷ்யப் போட்டியைப் பற்றிய கதைகள் பல உள்ளன. அத்தகைய கதைகளை நான் திரு. டே (Day) யிடமிருந்து தெரிந்து கொண்டேன். ஆப்கானிஸ்தானின் வேளாண்மைத்துறை அமைச்சின் ஆலோசகராக (FAO வின் பார்வையில் அனுப்பப்பட்ட ஒரு இந்திய நிபுணர் அவர். அவரிடம் கேட்ட கதைகளில் ஒன்றை மட்டும் இங்கே திரும்பச் சொல்கிறேன்.

ஆப்கான் துருக்கிஸ்தானில் கோதுமை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஆப்கானிஸ்தான் ஒரு சமயம் சில அமெரிக்க நிபுணர்களிடம் ஆலோசனை நடத்தியது. சகல அம்சங்களையும் ஆராய்ந்தபின் அமெரிக்காவில் பயனுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நல்ல விதை வகையை அந்த நிபுணர்கள் சிபார்சு செய்தனர். அவர்கள் அந்த விதையைப் பெரும் அளவில் உபயோகிக்குமுன்பு சோதனைப் பாத்திகளில் (அதாவது ஆப்கானிய மண்ணில்) விதைத்து நன்ருகச் சோதித்துக் கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தினூர்கள். பஞ்சம் நெருங்கி வந்து கொண்டிருந்ததனுல் இவ்விதச் சோதனைகளையெல்லாம் நெடுங்காலம் நடத்திக் கொண்டிருக்க ஆப்கானிஸ்தான் அரசாங்கத்திற்குப் போதிய காலம் இல்லை. ஆப்கானிய மண்ணில் நிகழ்த்திய சில சோதனைகளின் ஆரம்பப் பலன்களினுல் நம்பிக்கை கொண்டு, இறுதியான முடிவுகளுக்காகக் காத்திராமல், உடனே விதைக்கும் பொறுக்கு விதைகளை அனுப்ப வற்புறுத்தியது. ஆகவே அமெரிக்க உபகாரக் குழு (USOM) நேப்ரித் (Nebrid) என்ற தெரிந்தெடுக்கப்பட்ட ரக விதையை சுமார் 40 டன் இனமாக அனுப்பிவைத்தது. இந்த விதையை அரசாங்கம் குவட்டகம் மாநில விவசாயிகளுக்குப்

விரித்துக் கொடுத்தது. அந்த வருடம் சரியான விளைச்சல் இருக்கும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் விதைத்த சில நாட்களில், விதைகள் சரியாக முளைக்கவில்லை என்று அவர்கள் புகார் சொல்லத் தொடங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் விவசாய இலாகா மந்திரி சபையிலிருந்து ஈடு கேட்கத் தொடங்கினர். அதிர்ச்சியுற்ற ஆப்கான் அரசாங்கம் இப்பொழுது ரஷ்ய ஆலோசகர்களை அணுகிற்று. மீண்டும் விதைப்பதற்குப் பருவம் போய்விடவில்லை. ரஷ்யா உடனே விதைப்பதற்காக 6000 டன் விதைகளை அனுப்பி வைத்தது, ஆப்கானிய மண்ணில் சோதனை செய்து பார்க்கும் பிரச்னையே எழவில்லை. அந்த வருடம் உண்மையிலேயே குவட்டகான் மாநிலத்தில் நல்ல விளைச்சல் இருந்தது. ரஷ்ய உதவி மக்களை மகிழ்வித்தது. சோவியத் துருக்கிஸ்தானுடன் ஆப்கன் துருக்கிஸ்தான் கொண்டிருந்த பற்றுதலின் காரணமாக, எல்லா வகையிலும், நம்பிக்கையுள்ள விதைகளைக் கொடுத்துதவ ரஷ்யாவுக்கு முடிந்தது. துருக்கிஸ்தானத்தின் இரண்டு பகுதிகளிலும் ஒரே விதமான மண்ணும் சீதோஷ்ண நிலையும் உள்ள காரணத்தால், தங்கள் மண்ணில் சோதித்து நல்லவையாகக் கண்ட விதைகளை குவட்டகான் பிரதேசத்தில் உபயோகிக்க, தயக்கமின்றித் தர முடிந்தது. பின்னால், ஆப்கானிய நிலைகளுக்கு ஏற்ப நெப்ரிட் விதைகளையும் உபயோகிக்கக் கூடும் என்று ஆப்கானிய அரசாங்கம் கண்டு திருப்தியுற்றது. ஆனால் அந்த விதைகளுக்கு, விதைப்பிற்குப் பின்பு, போதிய கவனமும் உரமும் வேண்டும். அபிவிருத்தியடையாத ஆப்கானிஸ்தான் விவசாயிகளுக்கு உரங்களைப் (Fertilizer)பற்றி அவ்வளவு தெரியாது என்பது அமெரிக்க நிபுணர்களுக்குத் தோன்றவில்லை. ஆனால், ரஷ்யர்கள் எப்பொழுதுமே, சமூக இயல் அம்சங்களைக் கவனிப்பதுண்டு. ஏனெனில் அவர்களுடைய சொந்த

நாட்டிலேயே தாழ்ந்து கிடந்த இடங்களை முன்னுக்குக் கொண்டுவந்த அநுபவம் அவர்களுக்குண்டு.

திரு டே (Day) ஆப்கானிஸ்தானில் தான் பெற்ற வேறொரு அநுபவத்தையும் தெரிவித்தார். அமெரிக்க நிபுணர் ஒருவருடனும் இரண்டு ஆப்கானிய அலுவலர் களுடனும். அரசாங்கக் காரியமாக குவந்தகாருக்கு ஒரு முறை சென்றிருந்தார். குவந்தகாரில் ஒரே உணவு விடுதி (hotel) தான் உண்டு. அங்கு இவர்களுக்குத் தங்க இடம் இல்லை, ஆகவே, அந்த இரவைக் கழிப்பதற்கு, அமெரிக்க, உலகக் கூட்டுறவு நிர்வாகத்தின் விடுதிக்கு (Hotel of the United States International co-operation Administration (ICI) ச் செல்லலாம் என்று ஆலோசனை கூறினர். ஆனால் அந்த விடுதிக்குச் சென்றவுடன் அங் குள்ள மேட்ரன், சுவரில் தொங்கிய விளம்பர மொன்றை விரலால் சுட்டிக் காட்டினர். "அமெரிக்கர்களுக்கு மட்டும்" என்பது விளம்பரம் (For Americans Only) அமெரிக்க நிபுணர் மனக் கிளர்ச்சியுற்று, "தங்க இடம் எங்கள் எல்லோருக்கும் கொடுங்கள்; இல்லையேல், ஒரு வருக்கும் வேண்டாம்" என்றார். மிகுந்த தர்க்கங்களுக்குப் பின்பு, திரு. டே, ஐக்கிய நாடுகளின் அலுவலர் என்ற முறையில் உலக முழுவதிலும் அவருக்குள்ள இராஜ தந் திர நலன்களை முன்னிட்டு அவரையும் அந்த அமெரிக்க விடுதியில் தங்க அனுமதித்தது அந்த விடுதி நிர்வாகம், ஆனாலும், ஆப்கானிய அலுவலர்களை அனுமதிக்கவில்லை. இறுதியாக ஒருவகைச் சமாதானம் ஏற்பட்டது. ஆப் கான் அலுவலர்களும் அந்த இரவில் தங்கலாமென்றும் ஆனால் அவர்கள்விடுதிப் பதிவேட்டில் கையொப்ப மிட வேண்டாமென்றும் முடிவாயிற்று. அமெரிக்கரது இத் தகைய வேறுபாட்டு மனப்பான்மை ஆரம்பத்தில் அவர் கள் மீது வெறுப்பை உண்டாக்கியது. ஆனால் இப்

பொழுதெல்லாம் இது போன்ற காரியங்களில் அமெரிக்கர்கள் மிக்க கவனமாக இருக்கின்றனர்.

எப்படியும், ஆப்கானிஸ்தானின் முன்னேற்றத்திற்குக் காரணம் அந்நிய உதவியே—கிழக்கிலும் மேற்கிலுமுள்ள உதவிதான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது (1962-66) மொத்தச் செலவில் சுமார் 60 சதவீதம் அந்நிய நாட்டு உதவியைச் சார்ந்ததே. ஆனால் காபூலின் அரசாங்க நிலையங்களில் குறுகிய இடங்களில் வேலை பார்க்கும் அந்நிய நிபுணர்களின் எண்ணிக்கை பெரிதாகிக் கொண்டிருக்கிறது. நிலைமை எப்படி இருக்கிறதென்றால், அந்நிய நிபுணர்கள் ஆலோசனை வழங்குவது மட்டுமின்றி பல சமயங்களில் முக்கியமான நிர்வாகத் தீர்வுகளையும் தாமே செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். 1962ல் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதித்துவ நிலையங்களில் மட்டும் 150 நிபுணர்களுக்குக் குறையாமல் இருக்கின்றனர் என்று கண்டேன். ஐக்கிய நாடுகள் முதலியவற்றின் உபகார பிரதிநிதி நிலையங்களில் இன்னும், நூற்றுக் கணக்கில் உள்ளனர். இந்த நிபுணர்களில் சிலர் அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்கிறார்கள். அரசாங்கப் பத்திரங்களைத் தயாரிக்கிறார்கள். கொள்கை அமைப்புக்களிலுங் கூடப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இது எப்படியாகுமென்றால், நிபுணர்கள் போய்விட்ட பின்பு, நிலையைச் சமாளிக்க, ஆப்கானிய நிர்வாகம் அநுபவமற்றதாக இருக்கும்-என்று சில நிபுணர்கள் கூறினர் என்றும் திட்டக் குழுத் தலைவர் (President of the Planing Committee) நம்பிக்கையோடு சொன்னதாவது:

''திட்டத்தின் துவக்கத்தில் அதாவது 1956ல் எங்களிடம் கணக்கு விவரங்கள் கிடையாது. தக்க அநுபவமு

மில்லை. இப்பொழுது. கணக்கு விவரங்கள் கொஞ்ச மேனும் உண்டு. மேலும் சில இளம் ஆப்கான் நிபுணர்களும் உள்ளனர். ஆகவே, நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம், வேகமாக முன்னேறி விடுவோம்.''

திரு. ஷால்சி இப்படிச் சொல்வது சரிதான். முன்னேற்ற நாடுகளிலிருந்து வரும் நிபுணர்களுக்கு, முன்னேறாத நாட்டின் உயிர் நாடியான நுட்பங்களைப் புரிந்து கொள்ள இயலாததால், அவர்கள் அடிக்கடி மனந் தளர்ந்து அத்தகைய நாடுகளின் முன்னேற்றத்தைப் பற்றிய நம்பிக்கையில் குன்றி விடுகின்றனர். நல்ல சாதகங்களைக் குறைத்து மதிப்பிட்டு விடுகின்றனர். ஆனால் புதியதொரு ஆப்கானிஸ்தானம் உருவெடுத்து விடுவதை மனக்கண்ணில் தெளிவாகக் காண்கின்றேன். ஆப்கானிஸ்தானுக்காக, பிரகாசமுள்ள பிற்காலம் காத்திருக்கின்றது.

அத்தியாயம் 8

# ஆப்கானிய அரசியலும்— பாக்-ஆப்கானிய உறவுகளும்

*1933-ல், நாதர்ஷா கொலையுண்டபின், அவர் புதல்வன் இன்றைய அரசனுகிய ஜாஹிர்ஷா சிம்மாசன மேறிஞர். அப்பொழுது அவருக்கு வயது 19. ஐரோப்பியக் கல்வி கற்ற முதல் ஆப்கானிய மன்னன் ஜாஹிர்ஷா தான். அவர் கல்விப் பயிற்சி பெற்றது பிரான்சு நாட்டில். அவர் ஆட்சிக்கு வந்த காலத்தில் நாட்டின் தேவைகள் மிகுதியாயிருந்தன. முப்பதாண்டுக்கு மேற்பட்ட அரசாட்சிக்குப்பின், முன்ஞட்களை நோக்கும்போது எங்கும் உள்ள முன்னேற்றத்தை நினைந்து மகிழ்ச்சி அடையலாம். சமீபகாலம் வரையில் நாதர்ஷா உண்டாக்கிய 1931ஆம் வருடத்துச் சட்ட அமைப்பிற்கிணங்க அரசாட்சி நடந்துவந்தது. அதன்படி அரசனுக்கு எல்லா அதிகாரமும் உண்டு. நாட்டின் முதலமைச்சரை அவர் தெரிந்தெடுத்துப் பதவியில் வைக்கலாம்; அவர் நினைக்கும் பொழுது பதவியிலிருந்து எடுத்துவிடலாம். அரசாங்கத்திற்கு ஒரு பார்லிமெண்டு உண்டு. அதில் இரண்டு சபைகள் உள்ளன; ஒன்று, வயதுவந்த ஆண்கள் வாக்*

களிப்பு முறைப்படி (Adult male franchise) அமையும் தேசிய சபை; மற்றொன்று அரசனே தேர்ந்தெடுக்கும் செனட். ஆண்கள் வாக்கெடுப்பின்படி நடைபெறும் பொதுத் தேர்தல் மூன்று வருடத்திற்கொருமுறை நடைபெறும். ஆனால், அங்கு அரசியல் கட்சிகள் இன்மையால் தேர்தல் வெறும் ஒப்புக்கு நடக்கும் ஒரு இலகுவான காரியமாக உள்ளது. தற்கால ஆப்கானிய நிலையில் தனி மனிதன் யாருமே அரசாங்கத்தின் அதிருப்திக்கு ஆளானால், தேர்தலில் வெற்றி பெறுவது மிகச் சிரமமாகும். சபையானது (Council) கீழ்சபைகளுக்கு வழக்கமான சட்ட முறைச் செயல்களைக் கவனிக்கும். சட்டபூர்வமாக வரவு செலவுக் கணக்குகளையும் தேசீயக் கொள்கை யமைப்புக் காரியங்களையும் தன் அதிகாரத்திற்குள் வைத்துள்ளது. எனினும், ஒருவரின் சட்டப் பிரேரணை தேசீயச் சபையில் ஒப்புக்கொள்ளப் படவில்லை என்றாலும் அவர் பொருட்படுத்த வேண்டியதில்லை. தலைமையமைச்சரும் அவரது ஆலோசனை சபையும் சமீப காலம் வரை, அரசனுக்குத்தான் பொறுப்பாளிகளேயன்றி பார்லிமெண்டிற்குப் பொறுப்பாளிகளல்ல. பேச்சுரிமை, அச்சு, கூட்டங்கள், சங்கங்கள், தன் முனைப்பான அதிகாரத்தினின்று பாதுகாப்பு முதலிய உரிமைகள் ஆப்கானியர்களுக்கு இன்னும் கிட்டவில்லை.

என்றாலும், உள்நாட்டில், ஜனநாயக வேட்கை இல்லையென்று பொருளல்ல. 1949க்கும் 52க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆப்கானிய மக்கள்சபை (Parliament) முன்னேற்ற நடவடிக்கைக்கான உணர்ச்சியைப் பிரதிபலித்தது. இந்தப் பார்லிமெண்ட் குறைந்ததொரு அளவில் அச்சுரிமை வழங்கிச் சட்டங்கள் உண்டாக்கிற்று. உடனடியாக, ஏராளமான செய்தித்தாள்கள் (News-papers) ஆரம்பமாயின—எல்லாம் ஆட்சியாளருக்கு

எதிராக. இந்நாட்களில் காபூல் பல்கலைக் கழக மாணவர் யூனியன் ஒவ்வொரு காரியத்தையும் கம்யூனிஸ நோக்கிலிருந்து ஜனநாயகம் வரையுள்ள உணர்ச்சிகளோடு வாதித்து வந்தது. ஆனால், 1952ல் நிகழ்ந்த பொதுத் தேர்தலுக்கு முன்பே, இந்தச் செய்தித்தாள்களையும் மாணவர் யூனியனையும் ஆட்சி வலுவாக அடக்கி ஒடுக்கி விட்டது. டாக்டர் மஹ்மூதியும் (Dr. Mahmoodi) முகமது கோபாரும் உட்பட அநேக மாணவர்களும் சிறை செய்யப்பட்டனர். அதன் பின்பு அரசாங்கம் பொதுத் தேர்தலில் தம் ஆதிக்கத்தைப் பயன்படுத்தவே, அந்தத் தலைவர்களில் எவருமே புதிய மக்கள்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதிலிருந்து பத்து ஆண்டுகள் வரை, சீர்திருத்த இயக்கங்களோ, அரசாங்கத்திற்கு எதிர்ப்புகளோ சற்றும் தலைதூக்கவில்லை. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அரச குடும்பமே தளராது முக்கியத்துவம் வகித்தது ஒரு காரணமாகும்.

1963 வரை பிரதம மந்திரிகள் அரச குடும்பத்திலிருந்தே தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட்டனர். 1958ல் அரசனுடைய சொந்த மைத்துனனாகிய சர்தார் முகமது டாட் (Surdar Mohamad Daud) முதலமைச்சரானார். அரச குடும்பமே பொருளாதாரத் துறையில் முன்நின்று செயலாற்றுமாயின் எதிர் சக்திகள் தாமே குன்றிவிடும் என்று அவர் உணர்ந்தார். அவரது தலைமையின் கீழ், நாடு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்டது; சோவியத் அரசாங்கத்துடன் உறுதியான நட்பை உண்டாக்கிக்கொண்டது; பொருளாதார அடிப்படையில் பொதுஜன நிலையைத் திறமைப்படுத்தியது. பக்தூனிஸ்தான் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு எதிராக உறுதியாய் நின்றது; பெண்கள் தாராளமாக நடக்கும் உரிமை வழங்கியது. தன் வேலை முடிந்தது என்று அவர்

நினைத்ததும் 1963 மார்ச் 3ல் தம்முடைய பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட்டார். அத்துடன் அவர் விடுத்த விளக்கமாவது :

"நமது தேசிய வாழ்க்கையின் தீவிர முன்னேற்றத்தின் அவசியத்தை தோழர்களும் நானும் உணர்ந்தோம் ; பொருளாதார நிலையையும் சமூக நிலைகளையும் திடப்படுத்துவதேயாகும் அது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு உண்மையான நிரந்தர ஜனநாயகத்திற்கேதுவாக, ஆப்கானியச் சட்ட அமைப்பு மாற்றங்கள், தேர்தல் சட்ட மாற்றங்கள் அதிகாரங்களைப் பிரித்தல் ஆகியவற்றின் சம்பந்தமாக ஒரு திட்டத்தை மன்னர் பெருமானிடம் சமர்ப்பித்தேன்."

ஆக, ஜனநாயக ஆட்சியைத் தன்நோக்கில் கொண்டு பிரதம மந்திரி டாட், ஆப்கானிஸ்தானின் சட்ட அமைப்பு வரலாற்றிலே முதல் தடவையாக, சாமானிய மனிதன் பிரதம மந்திரியாக வருவதற்கு இடமளித்து வெளியேறினார். முகமது டாட்டின் இந்தச் செயலை ஜாஹிர் மன்னன் முற்றிலும் ஒப்புக்கொண்டார்—அவர் தூண்டப்பட்டாரென்பாருமுளர்.

ஜெர்மனியில் கல்வி பயின்ற டாக்டர் முகமது யூசப் பிரதம மந்திரியின் அலுவலகத்தில் பதவியேற்றது ஆப்கானிய அரசியலிலே ஒரு முக்கியத்துவத்தை உணர்த்தும். அவர், முந்திய சட்டசபையின் ஒரு முற்போக்கு அங்கத்தினர் (Liberal member). அரச குடும்பத்தில் எவ்விதத் தொடர்புமற்றவர். அவர் தேசீயச் சட்ட அமைப்பிலும் தேர்தல் சட்டங்களிலும் சில மாற்றங்கள் செய்யப் போவதாகத் தன் எண்ணத்தை வெளியிட்டார். 1965 அக்டோபரில் பிரசுரமான ஒரு செய்தியறிக்கையின் மூலம் அவர் தன் வாக்கை நிறைவேற்றினார் என்று நாம் அறிவோம். ஆயினும், திருத்தம் பெற்ற சட்ட அமைப்

பின் இயங்குதலையும் விளைவையும் இனிமேல்தான் காண வேண்டும். ஆப்கானிஸ்தான் தனது பொருளாதார முன்னேற்றத்துடன் அரசியல் முறையையும் நவீனமாக்கும் பணியில் வெற்றிபெறுமேல், இங்கிலாந்தைப் போன்று தனது அரசுமுறை ஆட்சியைக் (Monarchy) காத்துக்கொள்ளக்கூடும், இதில் வெற்றி பெருவிடில், என்றோ ஒரு நாள் பெரியதொரு புரட்சியினால் அரசு வீழ்த்தப்படலாம். ஆனால் நான் ஆப்கானிஸ்தானில் புரிந்துகொண்டதென்னவென்றால், ஆப்கானிய அரசர்களுக்குக் காலத்தோடு ஒன்றி இயங்கத் தெரியும்.

ஒவ்வொரு ஆப்கானியனுக்கும்—அரசன் முதல் சாதாரண குடிமகன் வரை—இப்பொழுது பாகிஸ்தானிலுள்ள, தங்கள் பஷ்தூன் உறவினர்கள் மீதும், கூட்டத்தார் மீதும், அக்கறை இருக்கிறது; பாகிஸ்தானில் சேர்வதா ஆப்கானிஸ்தானில் சேர்வதா என்ற முடிவுக்கு வரும் ஒரு நிர்ப்பந்தத்தின் விளைவாக அவர்கள் பாகிஸ்தானில் சேர நேர்ந்தது. பஷ்தூன்களுக்கு உண்மையிலேயே முடிவெடுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டதென்றால், அவர்கள் தங்களுக்கென்றே ஒரு தனி ராச்சியம் (பக்தூனிஸ்தான்) வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதை வாக்களிப்பு (vote) மூலம் நிர்ணயிக்கும் வாய்ப்பும் அந்தப் பிரச்சினையின் ஒரு அம்சமாயிருந்திருக்க வேண்டும் என்று ஆப்கானியர்கள் வாதிக்கின்றனர்.

பாகிஸ்தானின் வடமேற்கெல்லைப் பிராந்திய மாநிலத்தில் பெரும்பாலும் வசிப்பவர்கள் பஷ்தூன்கள். அதாவது, அப்ரிடிஸ், வாசீர்ஸ், மூகமெண்ட்ஸ், முதலிய கூட்டத்தார். இவர்கள் எண்ணிக்கை 5 மில்லியனைத் தாண்டும். 1893 வரை, இந்தக் கூட்டத்தாரில் சிலர் வசித்து வந்த "கூட்டத்தாரின் சுதந்திரப் பிரதேசம்"

(Tribal Independant area) என்ற பிரதேசமானது, ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்தது. அந்த ஆண்டில், இங்கிலாந்தினுல் நியமிக்கப்பட்ட ஒரு உடன்படிக்கையின்படி அவர்கள் அந்த நாட்டிலிருந்து துண்டிக்கப்பட்டு இந்தியாவுடன் இணைக்கப்பட்டனர். வரையறுக்கப்பட்ட எல்லையின் பெயர் துராண்டு எல்லை (Durand Line) என்பது. அது முதல் 1947 வரை, வடமேற்கெல்லைப் பிரதேச மாகாணம் (North west frontier Province), மக்களுக்குத் தீராத தொல்லையும் ஆங்கிலேயருடன் கலகங்களும் நிகழும் ஒரு களமாகக் காட்சியளித்தது. இந்தியப் பிரிவினைக்குச் சற்று முன்பு, அந்த மா நிலத்தையும் அத்துடன் இதர, புஷ்தூன்கள் வாழும் இந்தியப் பகுதிகளையும் இணைத்து "பக்தூனிஸ்தான்" என்றதொரு தனிநாடு அமைக்க வேண்டுமென்று கான் அப்துல் கபார்கான் தலைமையில் செஞ்சட்டையினர் (Red Shirts) விரும்பினுர்கள். செஞ்சட்டைத் தலைவர்கள் இந்த முடிவின் மேல் குடியொப்பம் வேண்டினுர்கள். ஆனுல் ஆங்கில அதிகாரிகள் அத்தகையதொரு குடியொப்பத்தை அனுமதிக்கவில்லை; முடிவில், வடமேற்கெல்லைப் பிரதேச மாநிலம் பாகிஸ்தானின் பகுதியாக்கப்பட்டது. இது ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிரந்தரமான பகையை விளைவித்தது. பக்தூனிஸ்தான் பிரச்சினையின் அடிப்படை. இங்கிலாந்தின் அரசியலாதிக்கம் இந்தியாவை விட்டு நீங்கியவுடனே துராண்டு எல்லையை மீண்டும் ஆராய்ந்து மாற்றியமைத்திருக்க வேண்டும் என்று ஆப்கானியர்கள் கூறுகின்றனர். பாகிஸ்தான் இங்கிலாந்து நிர்ணயித்தபடி எடுத்துக் கொண்டதாகப் பேசுகிறது. எனது சொந்த அனுபவத்திலிருந்து, இது எத்தனை ஆழமான பகை, என்று உணர முடியும். இரண்டு நாடுகளுக்குமுள்ள அரசியலுறவு சமீபகாலம் வரை துண்டிக்கப்பட்டிருந்து. பின்னர் மீண்டும் ஏற்பட்

டது. ஆனால் காபூலுக்கு நான் இரண்டாவது முறையாகச் சென்றபோது, பாகிஸ்தான் தூதுவர் குழு அங்கு இடம் பெற்றிருந்தது. நான் அவர்களைச் சந்தித்துப் பிரயாண அனுமதி (Transit Visa) வாங்கவேண்டுமென்று உத்தேசித்தேன். நில மார்க்கமாகப் பெஷாவருக்குச் சென்று அங்கிருந்து எந்த மார்க்கத்திலாயினும் தில்லிக்குச் செல்லவேண்டுமென்று திட்டமிட்டேன். பொதுவாக, காபூல் வீதிகளில் போகும்போது, நடந்து செல்லும் நல்ல மனிதர்களின் உதவியைப் பெறுவதுண்டு. தெருக்களில் போகும்போது திசைகளையும் வழிகளையும் காட்டுவதில் அவர்களுக்கு மகிழ்ச்சி அதிகம். சபரத்-இ-பாகிஸ்தான் (Safarat-E-Pakistan (ம்) (Pakistan Embassy) போன நாள் தவிர, மற்றெந்த நாளிலும் சிரமமே எனக்கு ஏற்பட்டதில்லை.

"சபரத்-இ-பாகிஸ்தான் கொஸஸ்ட்?" (பாகிஸ்தான் தூதுவ நிலையம் எங்கிருக்கிறது?")என்று தெருச் சந்திப்புகளில், காண்போரையெல்லாம் கேட்டு அவர்கள் காட்டும் வழிகளிலெல்லாம் சென்றேன். ஓரிடத்தில், போக்குவரத்துப் பணியிலுள்ள காவலாளர் (Police man) ஒருவர் எனக்கு வழி காட்டினார். அந்த இடத்திலிருந்து தூதுவ நிலையம் வெகு தொலைவில் இல்லை என்று எனக்கு உறுதியான நம்பிக்கையிருந்தது. ஆனால் வெகு நேரம் வரையிலும் அங்கு போய்ச் சேர முடியாமையால் எனக்குக் காட்டப்பட்ட வழியைச் சந்தேகித்தேன். இன்னும் கொஞ்சம் திரிந்த பின்பு, மீண்டும் அதே காவலாளர் அதிகார எல்லையில் (Police point) நான் வந்திருப்பதைக் கண்டேன். இப்பொழுது என்னிடமுள்ள காபூல் அமைப்புப் படத்தை (map) பார்த்து, தூதுவ நிலயமானது அங்கிருந்து 40 கெஜத்திலேயே உள்ளது என்று கண்டேன்.

போக்குவரத்து அனுமதி (Visa) யைப் பெற்றேன். பாகிஸ்தானில் ஏழு நாள் தங்கவும் அதில் அனுமதிக்

குறிப்பு இருந்தது. ஆனல் பல நாள் தாமதத்திற்குப் பிறகே இந்த அனுமதி கிடைத்தது. விசா அலுவலர் தன் சிரமங்களையும் தாமதத்திற்கு ஓரளவு காரணமாக விளக்கினர். தூதுவ உறுப்பினர்களுக்கு ஆப்கானியச் சமையற்காரர்கள், வேலையாட்கள், முடிதிருத்துபவர்கள் இன்னும் ஏனைய ஏவலர்கள் கிடைப்பதில்லை என்றும் அவர் விளக்கினர். அவர்கள் மிகுந்த சிரமங்களுக்கிடையேதான் காலங் கழிக்க வேண்டியதாயிருந்தது.

நான் ஜலாலாபாத்திலிருந்து பெஷாவருக்குச் செல்லும் போது பஸ்ஸில் (Bus) என்னுடன், குல்லா அணிந்த ஆப்கானியர் ஒருவரும் இருந்தார். அவர் பெயர் ஜம் அஹமது. பெரியதொரு சால்வை (Salwar), ஒரு நீண்ட சட்டை, வெல்வெட் சிறு கோட்டு (Waist Coat) இவற்றை அணிந்து கொண்டு, சற்றே குட்டையான ஒரு கைத்தடியுடன் உயரமான தோற்றத்துடன் காணப்பட்டார். பணம் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்யும் பொருட்டு கிழக்கே இந்தியாவிற்கு அடிக்கடி வரும் காபூலிவாலாஸ் என்று சொல்லப்படுபவர்களில் அவரும் ஒருவரென்று அவரது தோற்றம் எனக்கு உணர்த்திற்று. உண்மையில், காபூலிவாலாக்கள் என்று அவர்கள் அழைக்கப்பட்டாலும் காபூலிலிருந்து அவர்கள் வரவில்லை; பொதுவாக தெற்கு ஆப்கானிய எல்லைப் பகுதிகளிலிருந்தே வருகின்றனர். தான், கஜ்னி (Gajni)யைக் சேர்ந்தவரென்றும், தனக்கு கல்கத்தாவினருகில் கரக்பூரில் தொழில் நடைபெறுகிறதென்றும், ஜம் அஹமத் சொன்னர். அவர், பொடிடப்பியிலிருந்து அடிக்கடி "நஸ்வர்" எடுத்துக் கொண்டிருந்தார். நஸ்வர் என்பது வட இந்தியாவில் "கய்னி" என்று சொல்லப்படும் பொருளைக் குறிக்கும். அதாவது புகையிலைப் பொடியும் சுண்ணப் பொடியும் கலந்த ஒரு கலப்புப் பொருள். ஆனல் அது பச்சை நிறமாயிருக்கும்.

பழக்கமானவர்கள் அதை நாக்கிற்கும் கீழ்வாய்க்கு மிடையே வைத்துக் கொள்வார்கள்.

"ஜம் அஹமது'வுக்கு இப்பொழுது வயது 45. அவரது முதல் திருமணம் 20 ஆண்டுகட்கு முன்பு நடந்தது. ஆனால் முதல் மனைவிக்குக் குழந்தைகளின்மையால் இரண்டு வருடங்களுக்கு முன்பு, இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டார். இரண்டு மாதங்கட்கு முன்புதான் இரண்டாவது தாரத்திற்குப் பையன் பிறந்திருந்தான். இந்த நல்ல செய்தியை எனக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கும்போது சொன்னார். "பத்தான்களாகிய நாங்கள் கபடற்ற எளிய ஜனங்களாக இருந்தோம். கண் மூடிகளாக இருந்தோம். இந்தக் காலத்திலும்கூட எங்களில் பலர் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில்லை; அவர்களுக்குச் சிரமமாக இருக்குமாம். ஆனால் கல்வியின்மையின் தீமைகள் எனக்கு நன்றாகத் தெரியும். அல்லாவின் திருவருளால் இப்பொழுது என்னிடம் போதிய பணம் இருக்கிறது. ஆயினும் நான் படிக்கவில்லை யாதலால் எனக்குச் சமூகத்தில் மதிப்பில்லை. எனினும், என் பையனைப் படிக்க வைப்பேன். அவனுடைய கல்விக்காக எனது பணம் முழுவதையும் செலவழிப்பேன். அவன் ஒரு பெரிய மனிதனாக வர வேண்டுமென்று ஆசீர்வதியுங்கள்" என்று கூறினார்.

பத்தானுடைய துடிப்புள்ள குரலைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது பழைய காபூலிவாலா மறைந்து அவனது இடத்தில் (என் அருகில்) கனவு காணும் ஆப்கானிய இளைஞன் ஒருவன் உட்கார்ந்திருக்கிறான் என்று எனக்குத் தோன்றிற்று.

நாடோடிகள் ஒட்டகங்கள்மேலும் கழுதைகள் மேலும் தங்கள் மூட்டைகளையும், கறுப்பு ஆட்டுரோமக் கூடாரங்களையும் ஏற்றிக் கொண்டு கூட்டங் கூட்டங்களா

கச் சென்று கொண்டிருந்ததை நான் பேருந்திலிருந்தே பார்க்க முடிந்தது. குறிப்பிட்ட பருவ காலங்களில் இப்படி ஆயிரக் கணக்கில் நாடோடிகள் பாகிஸ்தானுக்குள் செல்வது ஆண்டுதோறும் நடைபெறும் முக்கிய அம்ச மாக இருந்திருக்கிறது. ஆயின், 1961லிருந்து ஆப்கன்-பாகிஸ்தான் உறவு முறிவினால் வந்த மாறுபட்ட அரசியல் சூழ்நிலையினால், நாடோடிக் கூட்டத்தார் இப்படிப் பாகிஸ்தானுக்குள் பிரவேசிப்பது நின்று விட்டது.

ஜலாலாபாத்திலிருந்து பெஷாவர் போகும் பாதை பிட்டுமன் பூச்சுள்ளதும் விஸ்தாரமுள்ளதுமாயுள்ளது. 1961ல், பாகிஸ்தான், போக்குவரத்துக்கு ஒரு பெரிய தடங்கல் உண்டாக்கினவரை, பெரும்பாலான ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளெல்லாம் இந்தப் பாதையின் வழியாகத்தான் கொண்டு செல்லப்பட்டன. பிற்பாடு, அதாவது வெகு நாட்களுக்குப்பின், ஒரு புதிய உடன் படிக்கையில் பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் கையொப்பமிட்டன. எனினும் அந்தச் சாலையானது தன் பழைய முக்கியத்துவத்தைத் திரும்பப் பெறவில்லை. போக்குவரத்துத் தடைப்பட்டிருந்த காலத்தில் ஆப் கானிஸ்தான் தனது பொருட்களைச் சோவியத் ரஷ்யாவின் வழியாகக் கொண்டு செல்வதற்கான எல்லா வசதிகளையும் அளித்தது. இப்பொழுதும்கூட பிற நாடு களிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு வரும் வர்த்தகப் பொருட்களில் பெரும் பகுதி இந்தச் சுற்று வழியாகவே வரவேண்டியுள்ளது: இதனால் செலவு அதிகமாகிறது. கொஞ்ச காலத்திற்கு முன்பு போக்குவரத்திலிருந்து ஒதுங்கியிருந்த பதினான்கு நாடுகளின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யா ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி, பக்கத்து நாடுகளின் வழியே செல் வதற்கும் துறைமுகங்களுக்குச் செல்வதற்கும் உரிமை

இருக்கும். ஆனால் இந்தக் கோரிக்கை தோல்வியுற்றது கராச்சியைத்தான் சமீபத் துறைமுகமாக ஆப்கானிஸ் தான் நம்பியிருக்கிறது. அங்கே பாகிஸ்தானிய அதிகாரி களின் நெருக்கம் அவ்வப்போது இருந்து கொண்டே இருக்கிறது.

எல்லையில் நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கிப் பாகிஸ் தானுக்குள் செல்லவேண்டும். இரண்டு நாடுகளின் தனித்தனி வேலிகளுக்கு இடையே ஒருவர்க்கும் சொந்த மில்லாத சில அடி நிலம் கிடக்கிறது. சுங்கச் சடங்குகள் நடந்தபின், மீண்டும் நாங்கள் பஸ்ஸில் ஏறிக் கொண் டோம். அங்கிருந்து ஜம்ருத் கோட்டைவரை அதாவது 24 மைல் தூரம் பிரசித்திபெற்ற கைபர் கணவாய் உள் ளது. அதில் பிரயாணம் செய்வது மிக இலகுவாயிருந் தது. வடமேற்கெல்லைப் பிரதேச மாநிலத்தின் தலை நகரான (தற்போது முற்றிலும் மேற்குப் பாகிஸ்தானு டன் இணைந்து விட்ட) பெஷாவருக்கும் ஜம்ருத்துக்கும உள்ள தூரம் 11 மைல்தான். ஜலாலாபாத்தில் காலை 6 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் பெஷாவருக்கு நண்பகலுக் குச் சற்று முன்பு போய்ச் சேர்ந்தோம். பெஷாவர், பஷ்தூன் பிரதேசத்தின் புராதன நகரங்களில் ஒன்று, கனிஷ்கரின் தலைநகரும் ஆகும். அப்பொழுது அதன் பெயர் புரஹிபூர். பெஷாவரின் தற்போதைய ஜனத் தொகை 2 லட்சம். இங்கே இரண்டு நாள் தங்க வேண்டு மென்ற எண்ணம் இருந்தது. ஆனால் நாங்கள் அங்கு இறங்கியவுடன் போய் தகவல் கொடுத்த நிலையத்துப் போலீஸ் அதிகாரிகள் நாங்கள் அன்றிரவே திரும்ப வேண்டுமென்று சொல்லி விட்டனர். நாங்கள் புகை வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டுமென்றும் உத்தர விட்டனர். பஸ்—பிரயாணம் செய்ய அனுமதி இல்லை.

பெஷாவரில் நான் சில மணி நேரம் தங்கியிருந்த காலத்தில் படத்தின் மறு புறத்தைப் பார்த்தேன்—அதாவது ஆப்கானியப் பிரஜை ஒருவனைப் பாகிஸ்தான் நடத்தும் விதம்—அங்கே, சுங்க அலுவலகத்திலும் போலீஸ் அலுவலகத்திலும் ஜம்அஹமத்திலும் மிகவும் நல்ல விதமாக நடந்துகொண்டார்கள். பஷதூன்களுக்கு,பெஷாவர் ஒரு அந்நிய நாடல்ல. பாகிஸ்தான் பிரஜைகளில் அவர்களுக்கு உறவினர்கள் உள்ளனர். ஆனால் அவனுக்கென்று பெஷாவரில் பொல்லாத மனிதன் ஒருவன் இருந்தான். எங்கள் அனுமதிச் சீட்டுக்களையும் ஏனைய பத்திரங்களையும் பாக்—அதிகாரிகளிடம் காட்டிக் கொண்டிருந்தபோது, அவனுடைய முறை கடைசியாக வந்தது. அவனை அவசியமற்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வைத்துக் குற்றப்படுத்தித் தொல்லை தந்தனர். கடந்த 18 ஆண்டுகளாக, பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே உள்ள தவறான எண்ணங்கள் சீக்கிரத்தில் மாறாது என்று நான் உணரலானேன். முக்கியமாக, ஆப்கானிஸ்தானில், பாகிஸ்தான் உறவினால் அரசியல் பாதிக்கப்படுகிறது. பாகிஸ்தானிலுள்ள பஷ்தூன்களின், தம் நிர்ணயப் பிரச்சினை ஆப்கானிஸ்தானியர்களின் நோக்கத்திற்கு இயையத் தீர்வு கண்டாலொழிய இரு நாடுகளுக்குமுள்ள சச்சரவுகள் நீங்கா. 1965ல், பழைய செஞ்சட்டைத் தலைவரான, கான்அப்துல் கபார்கான், காபூலில் வெகு நாள் தங்கியதின் காரணமாக, இந்தப் பிரச்சினை மீண்டும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. துராண்டு எல்லையானது (Durand Line) தேசீய இன ரீதிகளிலும், பூகோள அமைப்பிலும், இராஜ தந்திர முறையிலும் பொருத்தமற்ற எல்லை என்று கருதப்பட்டு 1949லிருந்து ஆப்கானிஸ்தான் அதை மதித்து நடப்பதில்லை.

* * *

ஜம்அஹமத் ஒரு இரவு ரயிலில் என்னுடன் அமிர்த சரஸ்வரை பிரயாணம் செய்தார். அதன் பின்பு, மீண்டும் சந்திக்கும் நம்பிக்கையுடன் பிரிந்தோம். சரித்திரம் கண்ட கைபர் கணவாயின் இனிமை கம்பீரமாகவும் பிரகாசமாகவும் விளங்கிய அழகான எல்லைப்புற மாநில ரம்மியத்தையும், அவரோடு நடத்திய கூட்டுப் பிரயாணத்தில் மிகுதியாகச் சுவைத்தேன். அவை மறக்க முடியவில்லை. அவரது முயற்சியால், பெஷாவரிலுள்ள அப்ரிடி ஒருவருடன் கொஞ்சம் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

''நீர் ஒரு பாகிஸ்தானியர்தானே?'' என்று அவரைக் கேட்டேன். அதற்கவர், ''ஆம்; ஆனால் பகலில் மட்டுமோ இரவிலோ பக்தூனிஷ்தான் பிரஜை; அது இனிமேல்தான் பிறக்கும்.'' என்றார். உடனே அவர் பெஷாவரின் கிஸ்ஸாகனி கடைவீதியின் கூட்டங்களில் மறைந்து விட்டார்.

அத்தியாயம் 9

# காபூலுக்கு மறு பயணம்

மேலே நாடுகளிலிருந்து திரும்பி வரும் வழியில் கடைசியாகக் காபூலைப் பார்வையிட்டேன். அப்பொழுது குளிர்காலம். தெஹ்ரானிலிருந்து காபூல் வரை செய்த விமானப் பயணம் சுவையாகவே இருந்தது. ஆப்கான்-இரான் எல்லையிலுள்ள தீவு ஏரிகளுக்கும் சீஸ்தான் (Seistan) பாலைவனத்திற்கும் மேலே பறந்து வரவேண்டியிருந்ததால், அவற்றையெல்லாம் விமானத்திலிருந்து கண்ணுற்றோம். சாம்பல் நிறத்திலும் மஞ்சள் நிறத்திலும் மண் குவியல்களைப் பார்த்தோம். குறிப்பிட்ட தூரங்களில் வரிசையாகக் கிணறுகளையும் பார்த்தோம். அவை பூமியின் கீழ் உள்ள கரீஸுக்குள் செல்வதும் தெரிந்தது. அவற்றின் தோற்றம் பசியுற்ற பாலைவனத்தின் பல, திறந்த வாய்கள் போல் இருந்தது.

காபூல் விமான நிலையத்தை யடைந்ததும் எனக்கொரு வியப்பு உண்டாயிற்று. இரண்டு ஆண்டுகட்கு முன்னர் வட ஆப்கானிஸ்தானில், எந்தப் பயணத்துணை கொண்டு பிரயாணம் செய்தேனோ அந்த அலுவலர், திரு. புதி ராஜ், திரு. ஓரி இவர்களை அங்குக் கண்டேன். இரண்டு

வருடங்கட்கு முன்பு குவந்தஸின் மலேரியா ஒழிப்பு நிலையத்தில் சந்தித்த திரு. ரூனி (Runi)யையும் அங்குக் கண்டேன். இவர்கள் யாவருமே என்னை வரவேற்க வந்திருக்கிறார்களோ என்று வியந்தேன். இந்தியத் தூதுவரின் மனைவியாரை அனுப்பும் பொருட்டு யாவரும் விமான நிலையம் வந்திருந்தனரென்று இரண்டு நிமிடங்களில் தெரிந்து கொண்டேன்.

விமான நிலையத்தினின்று நேரே புதிய ஓட்டல் அரியானுவுக்குச் சென்றேன். காபூல் ஓட்டலுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு செலவு குறைவு. ஆனால் ஓட்டலில் இன்னும் உணவு கிடையாது. கீழ் அறையானது, புகாரி இருந்தும், மிகக் குளிராகவும் களையற்றும் இருந்தது. ஆக இரவைக் கழித்த பின்பு, எனது கணக்கைத் தீர்த்துவிட்டு, என் பழைய நண்பர் லாலா ஜீயின் வீட்டிற்குச் சென்றேன். அந்த முறை நான் தொடர்ந்து நான்கு வாரம் காபூலில் தங்கினேன். அதன் வண்ண வீதிகளிலும் அழகிய மற்ற இடங்களிலும் சுற்றுவதற்குப் போதிய அவகாசமிருந்தது.

நகரத்தில் இரண்டு உயர்ந்த குன்றுகள் பிரசித்தி பெற்றிருந்தன—அவை அஷ்மாயி, ஷெர்தர்வாஸா என்பன. அவற்றைச் சுற்றிலும் புராதனச் சுவர்கள் நின்றன. காபூல் நதியானது நகரத்தினூடே செல்கிறது. ஷெர்தர்வாஸாவின் தென்கிழக்கு முனையில் காபூலின் புராதன அரண்மனையான பலாஹிஸாரின் அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. இந்த அரண்மனையானது 1879 வரை ஆப்கானிய அரசர்களின் இருக்கையாக விளங்கியது. அந்த ஆண்டில் இரண்டாவது ஆப்கானியப் போரின்போது ஆங்கிலேயரால் அழிக்கப்பட்டது. இக்காலத்தில் பலாஹிஸாரின் அடிவாரத்தில் ஆப்கானிஸ்தானின் இராணுவக் கலைமன்றம்

(Military Academy) அமைந்துள்ளது. காபூலின் புராதனச் சுவர்கள் அழிந்தது கிட்டத்தட்ட ஐந்தாம் நூற்றாண்டு என்று கணக்கிடப்படுகிறது.

பலாஹிஸாரின் பின்புறச் சாரலிலே ஒரு குக்கிராமத்தைப் பார்க்கச் சென்றேன். இந்துக்களின் மயானத்தைக் கடந்து ஒரு சிற்றூரை அடைந்தோம். அங்கே சில வீடுகளே இருந்தன. கீர்த்திவாய்ந்த ஒரு ஆப்கானிய ஹிந்துவின் பாழடைந்த வீடு ஒன்றைப் பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. அதில் யாரும் குடியிருக்கவில்லை யாதலால் அதன் உட்புறம் வெளிப்புறம் யாவற்றையும் பார்க்க முடிந்தது. அது சதுரமான அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்ட கட்டிடம்; இரண்டு மாடிகளை உடையது; நான்கு மூலைகளினின்றும் கோபுரங்கள் கூட்டப்பெற்றது. கட்டிடம் முழுமையும் மண்ணாலும் பச்சைச் செங்கல்லாலும் கட்டப்பட்டது; கோட்டை போல் காணப்படுவது. பெரிய மனிதர்களுடைய இத்தகைய மாளிகைகளுக்கு குவிலாஸ் (Q'ilas) என்று பெயர். நவீன ஆப்கானிஸ்தானில் இந்த குவிலாஸ் ஒட்டகம்போல் நடை போட்டு மறைகின்றன. கிராமத்திற்கு அருகில், பறவைகள் நிறைந்த ஒரு பிரதேசம் இருந்தது. திரும்பி வரும்போது அங்கே ஒரு பெரிய சிகார் (Sikar) கூட்டத்தைக் கண்டேன். இளவரசனும் அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் முர்காவி (Murghavi) என்ற ஒரு வகை நீர்ப்பறவையை வேட்டையாடுவதன் பொருட்டு அங்கே வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

நகரத்திற்குக் கிழக்கில், சிறிய குன்றின் உச்சியில் 1936ல் கொலையுண்ட நாதர்ஷா மன்னனின் மகுதி நிற்கின்றது. குன்றின் அடியில் ஆண்டுதோறும் நடைபெறும் தேசீயச் சுதந்திர விழாவின் கண்காட்சி மைதா

ணங்கள் உள்ளன. நாதர்ஷா மசூதியின் அடிப்பக்கத்தி லிருந்து காபூலை நோக்கும் காட்சி ஆச்சரியமாக இருக்கும். பள்ளத்தாக்கின் மைல்கணக்கான விரிவை நன்கு காணலாம்.

* * *

அன்று வெள்ளிக்கிழமை வார, இறுதி விடுமுறை நாள். பள்ளி வாசல்களெல்லாம் பக்தர்களால் நிறைந் தன. கடைக்காரர்கள் சரக்கு விற்பதில் முனைந்தனர். திரைப்படக் கொட்டகைகளினருகே இராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் இராணுவ ஸ்தலங் களிலிருந்து வாரம் ஒரு முறை காபூலுக்கு வரலாம். வெள்ளிக் கிழமைகளில் அநேகமாக எல்லோருக்குமே கொண்டாட்டம்தான். வன போஜனம் போன்ற உல்லாசப் பொழுது போக்குகள் மிகுதியும் உண்டு. பணக் காரர்கள் ஊர்திகளிலும் (Cars) எளியோர் நகரபஸ்களிலும் (buses) செல்வர். கோடையில் காபூலிலிருந்து புறப்படு பவர்களெல்லோரும் பக்மனுக்குத்தான் போய்ச் சேருவார் கள். பக்மன் உயரத்திலிருப்பதால் மிகவும் குளிர்ச்சியா யிருக்கும். காபூலிலுள்ள பணக்காரர் பெரும்பாலோர்க் குப் பக்மனில் வன வீடு (Garden House) உண்டு. இந் நாட்களில் இங்குள்ள இராஜவனங்கள் பொது ஜனங்களுக் காகத் திறந்து விடப்பட்டிருக்கும். தற்போது அவை காபூல் நகராண்மையின் சொத்துக்களாயுள்ளன. சுருங் கச் சொல்லின், ஆப்கானியர்கள் பக்மனை உலக மோட்சம் என்று கருதுகிறார்கள். அங்கே பிரகாசமான வண்ண முள்ள தோட்டங்கள் சின்னதொரு ஏரியின்மீது ஓங்கி நிற்கின்றன.

பிப்ரவரியில் நடுக்குங்குளிரில் பக்மனுக்குச் செல்வதில் அர்த்தமில்லை. ஆனால் நான் அங்குச் சென்றது ஆப்கான் மேதை ஒருவரைப் பார்க்கும் பொருட்டே. மகமது அலீ

என்ற பேராசிரியரே அவர். விலையுயர்ந்த கற்களை உற்பத்தி செய்யும் ஹஜாரி-நா-நஜாரி தொழிற்சாலையின் அருகிலேதான் அவர் வாசம் செய்கிருர்.

தார்-அல்-அமான் தோட்ட வழியே வெகுதொலை போகவேண்டியதிருந்தது. இரு மருங்கிலும் நிழல் மரங்கள் வரிசை வரிசையாக ஓங்கி நிற்க, அடிவானத்தை அளாவும் குன்றுப் பிரதேசம் கண்ணுக்கெதிரே பரந்து கிடக்க, இந்தச் சாலையிலே சவாரி செல்வது மிக ரம்மியமாக இருந்தது. இந்தப் பாதையானது காபூல் பொருட்காட்சி சாலைக்குப் போய்ச் சேரும். இது குஷான் நாணயக் காட்சிக்கும், காந்தாரக் கலையின் சின்னங்கட்கும் பெயர் பெற்றது. இந்தச் சாலையின் முடிவில், அமனுல்லாவினுல் அறைகுறையாக விடப்பட்டிருந்த ஒரு புது நகரமைப்பு உள்ளது. இந்த நிறைவுருத நகரத்திற்கு தார்-உல்-அமன் (Land of place) என்று பெயர். ஆனல் அங்கே சில கட்டிடங்களே உள. அவற்றில் அரசாங்க அலுவலகங்களே இயங்குகின்றன.

நான் வெகுதூரம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பேராசிரியர் இல்லத்தைச் சிரமமின்றிக் கண்டுபிடித்துவிட்டேன். அவர் தனது படிப்புக் கூடத்திலே என்னை அன்போடு வரவேற்ருர். இரண்டாவது உலகப் போரின் போது அவர் டில்லியில் இருந்தார். ஆதலால் அவர் டில்லி வாழ்க்கையைப் பற்றி விஞவியதோடு அங்கே விரைவில் வரும் நம்பிக்கையையும் தெரிவித்தார். அப்பொழுது, ஆப்கானிஸ்தானின் நாகரிக வரலாறு பற்றிய நூல் ஒன்று எழுதுவதில் கவனம் செலுத்திக் கொண்டு இருப்பதாகக் கூறினுர். ஆப்கானிஸ்தான்பற்றி வெளியான அவரது புத்தகங்கள் மிகவும் பயன் பட்டன என்று நான் அவரிடம் சொன்னவுடன் அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அதுவரை, ஆப்கானிஸ்தானைப் பற்றி மட்டும்

உள்ள அவரது வெளியீடுகள் கிட்டத்தட்டப் பதினொன்று இருக்கும். பேராசிரியர் என் பார்வைக்கு ஒரு மத ஆசாரமுள்ள முஸ்லீமாகக் காணப்பட்டார். ஆதலால் அவரது பெண், கலப்புக் கல்வி முறையுள்ள காபூல் மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருவதைக் கேட்க மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

காபூலுள்ள ராஜா மஹேந்திரப் பிரதாப், இன்னும் ஏனையப் புரட்சி வீரர்கள் இவர்களைப்பற்றிப் பேராசிரியர்களிடம் விசாரித்தேன். புத்தகங்களிலிருந்து நான் தெரிந்திருந்த தகவல்களின் குறைபாடுகளை அவர் நீக்கினார். இந்தியப் புரட்சியாளர்கள் மிர்த்தின் ராஜாமஹேந்திரப் பிரதாப், போபாலின் மௌல்வி பரக்கத்துல்லா ஆங்கிலேயருக்கு எதிராக ''ஜேஹெட்'' விளைவிக்க அமீரைத் தூண்டும் பொருட்டு, (1915ல்) ஆப்கானிஸ்தானில் நுழைந்த துருக்கி ஜெர்மானிய இயக்கத்துக்கு துணை சென்றனர். அந்த இயக்கமானது, எப்படியும், தன் நோக்கத்தில் தோல்வி கண்டு 1916ல் அந்த நாட்டைவிட்டு நீங்கியது. ஆயினும் ராஜாவும் மௌல்வியும் திரும்பவும் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில், துருக்கிய சுல்தான் ''ஜேஹெட்'' எழுப்பியது இந்தியாவில் பெருத்த குழப்பத்தை விளைவித்தது. புகழ்பெற்ற தேவ் பந்து மத்ரஸ்ஸா பிரின்ஸ்பால் ஏதாவதொரு முஸ்லீம் நாட்டிற்கு ஓடிவிடுவதைத் தவிர, பக்தியுள்ள இந்திய முஸ்லீம்களுக்கு வேறு வழி கிடையாது என்று அறிக்கை விடுத்தார். உண்மையான முஸ்லீம்கள் அனைவர்க்கும் ஆகம அறிவிப்புச் செய்து கொண்டே தானே மெக்காவுக்குச் சென்றார். லாகட்ரின் உபைதுல்லா என்ற மௌல்வி அப்துல் ரஹீம் அவரது நெருங்கிய நண்பர். அவரது திட்டம் ஃவறு, ஆப்கானிஸ்தானிலிருந்து மனிதரையும் ஆயுதங்களையும் சேகரித்து,

ஆப்கானிஸ்தானில் ஒரு இடத்தைக் களமாகக் கொண்டு சுதந்தரப் போர் ஒன்று நிகழ்த்த எண்ண மிட்டார். பஞ்சாபிலுள்ள முஸ்லீம் மாணவர்களை ஆப்கானிஸ்தானுக்குச் செல்லும்படி தூண்டினர். 1915ல் அவரே ஆப்கானிஸ்தானுக்கு விரைந்தார்.

இந்த மாணவர்கள், ஏற்கெனவே காபூலிலுள்ள இரண்டு புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டனர். காபூலிலே, 1915 டிசம்பர் முதலாம் நாளில், தற்காலிக இந்திய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இந்தப் புதிய அரசாங்கத்தில், ராஜா மஹேந்திரப் பிரதாப் ஜனதிபதியாகவும் பரக்கத்துல்லா பிரதம மந்திரியாகவும் உபைதுல்லா அயல் நாட்டு அமைச்சராகவும் பணியேற்றனர். ஆப்கானியப் பிரமுகரிற் சிலர் இந்த அரசாங்கத்திற்கு நிதி உதவி செய்து ஆதரித்தனர். "தெய்வீகப் படை" என்ற பெயரில் பத்தான்களைப் பல பிரதேசங்களினின்றும் கூட்டித் திரட்டி ஆங்கிலேயர் இந்தியாமீது படையெடுப்பது என்பது திட்டம். இந்தச் சேகரிப்பு வேலை கொஞ்ச நாள் நடைபெற்றது. மாணவரில் சிலர் மத்திய ஆசியா, ஜப்பான், பெர்ஷியா முதலிய இடங்கட்கு மிக ஆபத்தான திட்டங்களுடன் அனுப்பப்பட்டனர்.

1916 ஜுலையில், அப்துல் ஹேக் என்ற ஒரு நபர் இந்தியாவில் சேர்க்கும்படியான மூன்று கடிதங்களுடன் லாகூரில் கைது செய்யப்பட்டார். இந்தக் கடிதங்கள் மஞ்சள் பட்டுத் துண்டுகளில் எழுதப்பட்டு, அவரது கோட்டு மடிப்புக்களுள் தைக்கப்பட்டிருந்தன. காபூலில் தொடங்கிய "பட்டுக் கடிதச் சதி" என்ற இந்தத் திட்டமானது இத்துடன் முடிவுற்றது.

ராஜா மஹேந்திரப் பிரதாப்புக்கும், இன்னும் பலருக்கும் ஆப்கானியக் குடிஉரிமை வழங்கப்பட்டது. பின்பு, பாரதத்தாய் சுதந்திரம் பெற்று மக்கள் சட்ட

சபையில் அங்கம் வகித்த போது, இந்தியா திரும்பினுர். மௌல்வி உபைதுல்லா 1922 வரை ஆப்கானிஸ்தானில் வசித்து, அதன்பின், கிலாபத் (Kilaphat) கூட்டத்துடன் ரஷ்யாவுக்குச் சென்று விட்டார். இந்த விவரங்களும் பேராசிரியர் மகமதுஅலி யிடமிருந்து எனக்குக் கிடைத்தன. 1919 வரை ஆப்கானிஸ்தானும் ஆங்கிலேயருக்கு உட்பட்ட நாடாக இருந்ததைப் பேராசிரியர் எனக்கு நினைவுபடுத்தினுர். ஆகவே, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஆப்கானிஸ்தானுக்கு மிகுந்த அநுதாபமிருந்தது. அந்தப் போராட்டம் இன்றைக்கும் ஆப்கானியர்களை உணர்ச்சிமிகச் செய்வதாகும். மனங் கவரும் பேராசிரியருடன் ஒன்றரை மணி நேரம் உரையாடியபின் நான் ஆசனத்திலிருந்தெழுந்தேன். பேராசிரியர் தெரு வரைக்கும் வந்து எனக்கு விடை பகர்ந்தார்.

* * *

காபூல் பல்கலைக் கழகம் 1946லேயே நிறுவப்பட்டிருந்தாலும், 1960ல் முதன் முறையாக நான் அங்குச் சென்றிருந்தபோது, அதற்கென்று ஒரு மத்திய மைதானம் கிடையாது. அப்பொழுதுதான் பிரதம மந்திரி, 350 ஏக்கர் பல்கலைக் கழக மைதானத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியிருந்தார். இப்பொழுது பார்த்தால், காபூல் பல்கலைக் கழகம் நவீனக் கலைகளின் இருப்பிடமாய், முழு உருவுடன் மலர்ந்து காட்சியளிக்கின்றது. எப்படியும், அதன் வளர்ச்சி வேகமற்றதென்றே சொல்ல வேண்டும்.

1932ல் மருத்துவ நிபுணத்துவத்தோடு (Faculty of Medicinc) பல்கலைக் கழகக் கல்வி ஆரம்பித்தது. 1960 லிருந்து, ஒன்றன்பின் ஒன்ருக, மேலும் எட்டு நிபுணத்துவத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. 1956ல் பொறியியல், பயிர்த்தொழில் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

எனது தோழர் அரப் காஸி என்பவர் பொருளாதார நிபுணத்துவ விரியுரையாளராகப் பணியாற்றினர். 1960ல் இந்த நிபுணத்துவக் கல்வியானது உயர்தரக் கல்வியை ஏற்கெனவே முடித்திருந்த மாணவர்களுக்கு, பட்டம் பெறுதற்குரிய மூன்றுண்டு நீடிப்புக் கல்வியை உருவாக்கியது. சட்டக்கல்வியும், அரசியற்கலையும், சில்லறைப் பாடங்களாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பொருளாதாரப் பாடத்துடன் பயில வேண்டும். 1962ல், நிபுணத்துவக் கல்வி பழைய கட்டிடத்தில் நடைபெறவில்லை என்று கண்டேன்; வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டிருந்தது. காஸியும் (Chausi) அங்கில்லை. அவர், ஒவ்வொரு ஆப்கானியப் பிரஜைக்கும் அமைந்துள்ள, "பிஷாக்" என்னும் கட்டாய இராணுவ சேவையின் பொருட்டு இரண்டாண்டு ஒப்பந்தத்தில் சென்றிருந்தார். "பிஷாக்" நாட்டின் திட்டங்களமைப்பை முன்னிட்டு முக்கியத்துவம் அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரஜையின் உழைப்பும் இரண்டு ஆண்டுக் காலம் அரசாங்கத்தின் பொறுப்பில் விடப்பட வேண்டும். இப்பொழுது இந்த உழைப்பானது ஆக்க வேலையில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய தேசீயச் சேவையின் பயனுல் ஆப்கானிஸ்தானில் ஏராளமாகச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில், கல்விப் பயிற்சியானது எல்லாத் தரங்களிலும், இலவசமாக வழங்கப்படுகிறது. வெளியிடங்களினின்றும் காபூலுக்கு வரும் மாணவர்கட்கு இலவச விடுதிகள் தரப்படுகின்றன. மேலும் உயர்ந்த கல்வி நிலையங்களின் மாணவர்கட்கு உபகார நிதி வழங்கப்படுகின்றது. மருத்துவக் கல்வியின் தரம் மோசமல்ல. பன்னிரண்டு ஆண்டு உயர்தரக் கல்வி பயின்ற பின்னர், ஓராண்டு முன்—மருத்துவக் கல்வியும் ஆறுண்டு மருத்துவக் கல்வியும் பயில வேண்டும்.

கல்வி முன்னேற்றமானது அண்மைக் காலத்தில் திடீரென்று ஓங்கி விட்டது எனலாம். 1951-52ல் 378 பாடசாலைகள் இருந்தன. ஆனால் 1963ல் இந்த எண்ணிக்கை சுமார் 1600க்கு ஏறிவிட்டது. பள்ளி செல்லும் மாணவர்களின் தொகை இதே கால அளவில், ஒரு லட்சத்திற்குச் சற்றுக் குறைவாக இருந்தது. சுமார் 3 லட்சத்திற்கு ஏறிற்று—அதாவது 200 சதவீதத்தைக் குறிப்பதாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தலையான மூன்று குறிக்கோளில் ஒன்று சமூகத்தொண்டு விரிவுறுதல் ஆகும்—முக்கியமாக, கலைநுணுக்கக் கல்வியும் பயிர்ச்சியுமே.

காபூல் சாதிமத வேறுபாடற்றது. அதன் கடைவீதிகளின் கூட்டங்களில் பல இனத்தவரும், பல தேசத்தவரும் இணைந்து திகழ்வதைக் காணலாம். எல்லாத் தலை நகரங்களையும்போல இங்கும் உலக நாடுகள் வாடைமல்கும்; அரசாங்க அலுவலகங்கள், மசூதிகள், விடுதிகள், கடைகள், புதிய கவர்ச்சியுள்ள கட்டிடங்கள் முதலியனவும் அங்கு உள்ளன. ஆப்கானிஸ்தான் நடத்த வேண்டியிருந்த எண்ணற்ற போர்களின் விளைவினால் காபூலின் பழைய அரண்மனைகளெல்லாம் அழிவுற்றன என்று கவலையோடு சொல்ல வேண்டியதிருக்கிறது. இரண்டாவது ஆங்கிலேய—ஆப்கான் போரில். "நாலு சந்தை" என்ற நெருக்கமுள்ள கடைவீதியானது மிகவும் பாதிக்கப்பட்டுக் கேடுற்றது. இறுதியாக, 1948ல் நவீன மயமாக்க எடுத்துக்கொண்ட முயற்சியால், அது அழிந்தே விட்டது. தற்காலத்து அரண்மனையும், அரச குடும்பத்தாரின் வீடுகளும், உயர்ந்த சுவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டு நிற்கின்றன. ஷாரினோ என்ற ஒரு புதிய நகர்ப் பகுதியில், திறந்த முற்றங்களும் தோட்டங்களும் சூழ்ந்த விசாலமான கட்டிடங்களில் அயல்நாட்டுத்

தூதுவ நிலையங்கள் பல உள்ளன. ரஷ்யன் தூதுவ நிலையம் மட்டும், காபூல் நதியருகில் "ஷரப் இதர்யா"வில் தனிமையாக உள்ளது. இந்தியத் தூதுவ நிலையம் தற்போது ஒரு வாடகைக் கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. நகரத்தின் ஓரங்களிலுள்ள அழகிய கட்டிடம், சட்டப்படி இந்தியாவுக்குரியதெனினும் சட்டப்படி இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை. ஆங்கிலத் தூதுவ நிலையம் 1947 முதல் அந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

நமது சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவிற்கும் ஆப்கானிஸ்தானிற்குமிடையே நல்லுறவு நீடித்த போதிலும், இந்தியா ஆப்கானிஸ்தானில் செய்ய வாய்த்த செயல்களைச் செய்யவில்லை. 1929க்கு முன் ஆப்கானிய வர்த்தகம் முழுவதும் இந்தியாவின் கையிலிருந்ததெனலாம். 1930க்கும் 40க்கும் இடைப்பட்ட காலத்தில், பொருளாதாரத் தேசியம் என்ற புதுக் கொள்கையின்கீழ் கரக்கல் போன்ற சில பொருள்களைக் கொண்டு நடத்திய உள்நாட்டு வர்த்தகமும் அயல்நாட்டு வர்த்தகமும், ஆப்கானியப் பிரஜைகட்கு மட்டுமே ஒதுக்கப்பட்டன. ஆயினும் கனிவர்க்க வர்த்தகம் சமீப காலம்வரை இந்திய வர்த்தகர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. இரண்டாவது உலகப் போரின்போது, தனது இறக்குமதியில் 65லிருந்து 95சதவிகிதம்வரை இந்தியாவிலிருந்து வாங்கியது. அதன் ஏற்றுமதிச் சரக்கில் பெரும்பகுதி இந்தியாவுக்கே அனுப்பப்பட்டது.

ஆனால் நமது சுதந்திரத்திற்குப்பின் நமது நிலைமாறி விட்டது. ஆப்கானிஸ்தான் தனது ஏற்றுமதியில் மூன்றிலொரு பகுதியைப் பொறுத்தவரையில் இந்தியாவை நம்பியிருந்த போதிலும், நமது நாட்டிலிருந்து அதிகமாக

வாங்குவதில்லை. ஆப்கானிஸ்தானின் மொத்த இறக்குமதி வியாபாரத்தில் இந்தியாவின் பங்கு 40 சதவிகிதத்திலிருந்து (1951-52) 12·4 சதவிகிதத்திற்கு (1958-59) இறங்கி விட்டது. அதன் பின்பு அவ்வளவாக உயரவுமில்லை. ஆப்கானிஸ்தானில் சுமார் நூறு இந்திய வர்த்தக ஸ்தாபனங்கள் நிலைத்திருந்தபோதிலும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. எந்த ஒரு தனி நாட்டிலிருந்தும் இத்தனை ஸ்தாபனங்கள் வந்து தங்கியதில்லை. இந்தியாவில் பொறியியல் தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருட்கள் முக்கியமாகக் கவர்ச்சிகரமாயுள்ளன; இந்தியா அதிகக் கவனம் செலுத்தியிருந்தால், அங்கே அதிக அளவில் விற்பனையாகும். இது பிரபல இந்திய வர்த்தகர்களும் ஆப்கானிய வர்த்தகர்களும் கூறும் கருத்து.

நாம் ஆப்கானிஸ்தானின் வர்த்தகக் கூட்டின் பழைய முக்கியத்துவத்தை ஆதரிக்காததின் காரணம், ஓரளவிற்கேனும் அவர்கள் மீதுள்ள வெறுப்பு எனலாம். ஆங்கிலேய—இந்தியா, நமது சுதந்திரத்திற்குப் பத்தாண்டுக்கு முன்னால் காபூலில் இந்திய வர்த்தகப் பிரதிநிதித்துவம் வகித்து வந்தது. அதனால் இந்தியாவின் வர்த்தகம் (இங்கிலாந்தின் வர்த்தகம்கூட) ஆப்கானிஸ்தானில் ஓங்கும் வகையில் வாய்ப்புகள் இருந்தன. பின்னால் இந்தப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டது. அஃதின்மையால் இந்திய வர்த்தகர்கள் வருத்தமுற்றனர்.

1957லும் 1960லும் காபூலில் இந்திய உற்பத்திப் பொருட்களுக்குக் காட்சியரங்கு கிடையாதென்பதை விசாரித்து உணர்ந்தேன்; ரஷ்யன் சரக்குகட்கும் மேற்குச் ஜெர்மனிச் சரக்குகட்கும் காட்சியரங்கு நிரந்தரமாக இருந்தது. 1962ல்தான் இந்தியத் தூதுவக் குழுவினரின் முயற்சியின் பயனாக இந்தியப் பொருட்களுக்கும் காட்சி

யரங்கு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது போதிய அளவினதாக இல்லை. வர்த்த முன்னேற்றமானது பொறுப்புகள் மிக்க தூதுவ அலுவலரின் பகுதிநேரப் பணியாக இருத்தலாகாது. மீண்டும் முழுநேர வர்த்தகப் பிரதிநிதித்துவம் உண்டாக்க வேண்டும்.

1955ன் தொடக்கத்தில் இந்தியாவிற்கு வந்த ஒரு ஆப்கானியத் தொழிலியற் கோஷ்டி, இந்தியா—ஆப்கானிஸ்தானில் பெரும்அளவில் முதலீடு செய்ய வேண்டுமென்றொரு ஆலோசனை விடுத்தது. (1955 பிப்ரவரி 1. இந்துப் பத்திரிகை) ஒருண்மையை மனதில் வைத்துக் கொண்டால் இது எளிதில் நடைபெறக்கூடியதே. அதாவது கனடாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுமுள்ள வர்த்தக நிறுவனங்கள், ஐரோப்பாவில் கடன் வாங்குதல் நின்று விடுவதற்கு முன்னே, நேரடியான முதலீடுகள் செய்து வந்தன. ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கடன்கள் வாங்கிக் கொண்டிருக்கும்போதே, சீனாவில் முதலீடு செய்தது. சமாதானப் பிரியமும், சார்பற்ற நேர்மையும் கொண்ட இந்த அண்டை நாட்டின் நட்பிற்கறிகுறியாக அரசுக்கரசு கடன் வழங்கும் திட்டங்களை மேற் கொள்ளலாம். ஆப்கானிஸ்தான் நமக்கு மிகமிக நெருங்கிய அண்டை நாடுகளிலொன்று. அதன் எல்லை வடமேற்கு எல்லைப் பிரதேசத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

எப்படியும், இந்தியாவின் தொழிற் கலைமிக்க தனியார்கள் ஆப்கானிஸ்தானின் பொருளாதார அபிவிருத்தியில் மிகுந்த பங்கெடுத்துள்ளனர். 1885-87ல் "மச்சினிக் கானா" என்று ஏகமாய்க் கூறப்படுகிற நவீன ஸ்தாபனம், சுமார் 100 இந்தியத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பினால் முதன் முதலாக நிறுவப்பட்டது. இவர்கள் தாம் வங்காளத்தின் தளபம் ராஜ்கிருஷ்ண கர்மகார் முதலிய

வர்களுடைய மேற்பார்வையில் சுமார் 1500 உள்நாட்டு ஆட்களுக்குப் பயிற்சியளித்தனர். அஸ்ஸாமின் பயிர்த் தொழில்; இரசாயன நிபுணர் நவாப் அப்துல் அஜீஸ், வங்காளத்தின் ஸையத் முஸ்தபா உட்பட, பல தொழிற் கலைஞர்களும் ஆசிரியர்களும் அமனுல்லாவின் ஆப்கானிஸ்தானில் பணியாற்றினார்கள். இப்பொழுதும் நூற்றுக்கணக்கான இந்திய நிபுணர்களும் பணியாளர் களும் ஆப்கானிய முன்னேற்றத்திற்காகப் பாடு படுகின்றனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஆப்கானிஸ் தானுக்கு இந்தியா காட்டும் நட்பும் ஒத்துழைப்பும் விளம் பரமாகவில்லை. நமது அயல்நாட்டு அலுவலகம் இந்த விளம்பரத்தின் அவசியத்தைக் கவனிப்பதற்கு இது தக்க சமயமாகும்.

நமது பக்கத்தில் பார்த்தால், 1957வரை ஆப்கானிஸ் தான் நம்முன் வைத்திருந்த வர்த்தகத்தில் வரம்பு எது வும் கிடையாது. பின்பு, ஆப்கானிய இறக்குமதிகளுக்கு 3 கோடி 35 லட்சத்தில் ஒரு உச்சவரம்பு விதிக்கப்பட்டது; இந்த வரையறையினால் ஆப்கானிய ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டது. ஆகவே 1958 ஜூலையில் ஆப்கானிஸ் தானின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த உச்சவரம்பு தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டது. அதன் பொருட்டு, கீழ்க்கண்ட நிபந்தனையும் விதிக்கப்பட்டது. "ஏற்றுமதி இறக்குமதி மதிப்புக்கள் குறிப்பிட்ட கால வரம்பில் கணக் கிடப்பட்டுச் சரிப்படுத்தப்பட வேண்டும்; தீர்வு நாணயக் கணக்கின் மூலம் செயல்பட வேண்டும்." ஆரம்பத்தில் ஓராண்டுக் காலத்திற்கெனக் கையொப்பமிட்ட ஒப்பந் தம், இப்பொழுதெல்லாம் சிறு சிறு மாற்றங்களுடன் அவ் வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கொள்கை யின் சாரம் என்னவென்றால். பழங்கள் போன்ற வழக்க மான பொருள்களை, ஆப்கானிஸ்தானிலிருந்து நாம் தொடர்ந்து வாங்கிக் கொண்டிருத்தல் வேண்டுமென்

பதும் அதற்கு ஏற்ப அவர்கள், இந்தியாவின் ஏற்றுமதிகளை அந்த அளவிற்கு வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதுமே. ஆதலால் 1958லிருந்து ஆப்கானிஸ்தான் ஏற்றுமதி ஐந்தேகால் கோடி ரூபாயில் அசையாது நிற்க, அதனுடைய இறக்குமதி இரட்டிப்பாகி விட்டது.

இந்தியாவின் மொத்த வியாபாரத்தில் ஆப்கானிஸ்தானின் பங்கு மிகக் குறைவு. ஆனால் ஆப்கானிஸ்தானின் மொத்த வியாபாரத்தில் இந்தியாவின் பங்கு மிக அதிகம். ஆதலால் நமக்கும் பணஞ் செலுத்தும் பிரச்சினைகள் இருந்த போதிலும், வர்த்தகத் துறையில் ஆப்கானிஸ்தானுக்கு அண்மை நாடு என்ற முறையில் பெருமையுடன் உதவி புரிய இடமிருக்கின்றது. ஆயின் துரதிருஷ்டவசமாக இதுவரை செய்ய வாய்க்கவில்லை. ஆப்கானிஸ்தானின் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் சற்றுத் தியாகம் செய்வது மேல். நூறு மடங்கு அதிகச் செலவில் கையாளும் அரசியல் தந்திரத்தாலும் பெற முடியாத நல்லெண்ணத்தைப் பெற இயலும். வெளி நாடுகளின் நல்லெண்ணம் முக்கியமாக தேசத்தின் அவசர நெருக்கத்தின்போது, மிகவும் விரும்பத்தக்கது.

### ஆப்கானிஸ்தானுடன் இந்திய வர்த்தகம்

| | 1962-63 | 1963-64 | 1964-65 |
|---|---|---|---|
| I. இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு ஏற்றுமதி | ரூ 613 லட் | ரூ 757 லட் | ரூ 584 லட் |
| II. ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி | ரூ 526 லட் | ரூ 498 லட் | ரூ 556 லட் |

அத்தியாயம் 10

# ஆப்கானிஸ்தான் முன்னேற்றம் விரைதல்

1929லிருந்து ஆப்கானிஸ்தான் முன்னேற்றத்தின் பொருட்டு மேற்கொண்டு வரும் முயற்சி 19-ஆம் நூற்றாண்டில், கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக ஜப்பான் மேற்கொள்ளும் முயற்சியைப் பல அம்சங்களில் ஒக்கும் என்பது தெளிவு. இந்தப் பொருத்தமானது பார்வையளவினதுதான். ஜப்பான் அந்த ஆண்டுகளில் அடைந்த வெற்றியின் அளவு ஆப்கானிஸ்தான் வெற்றியடையவில்லை. சுதந்திரத்திற்குப்பின் ஆப்கானிய சமூகத்தை உயர்த்தும் பொருட்டுப் பத்தாண்டுகள் மேற்கொண்ட சீர்திருத்தங்கள், பாச்சா-இ-சாக்கோவின் கீழ் இந்தச் சீர்திருத்தங்கள் அடைந்த வீழ்ச்சி, மீண்டும் 1929ல் பெறப்பட்ட முன்னேறிய அரசு—ஆகிய இவையெல்லாம் சேர்ந்து ஆப்கானிஸ்தானில் ஒரு புதிய விழிப்பையும், ஜப்பானில் 1868ல் நடைபெற்றதைப் போன்று நவீனத் திட்டங்களை விரைவில் நிறைவேற்றிக் கொண்டு போக வேண்டுமென்ற மனவுறுதியையும் உண்டாக்கின. புனரமைப்புற்ற ஜப்பானைப்போல, ஆப்கானிஸ்தானும்

சமூகத்தின் பரம்பரைப் பழக்கங்களை மாற்றும் பொருட்டு, உயர்தரத்திலிருந்து எல்லா மக்களிடையேயும் பல சீர் திருத்தங்களைப் புகுத்திற்று. பொருளுருவில் வாங்கப் பட்ட வரிகள் பணமாக வாங்கப்பட வேண்டுமென்ற மாறுதல் ஏற்பட்டது. உள்நாட்டு வர்த்தகங்களின் மேலிருந்த தடைகள் நீக்கப்பட்டன. தனியார்கள் நிலத் தின் மேல் சொத்துரிமை கொள்ள அனுமதிக்கப் பட்டனர். மேலை வர்த்தக முறைமைகளும் தொழில் நுட்பங்களும் தெரிந்ததொரு நடுத்தர வகுப்பினர் இன்மையால் நாட்டின் வர்த்தகம் தன்னுயிரற்று நடை பெறுகின்றது என்று உணரப்பட்டது. புதிய பயிர் வகைகளைத் தொடங்குதல், பயிர்த்தொழிலுக்கெனக் கடன்கள் வழங்குதல், கல்வி நிலையங்களையும் விவசாய ஆராய்ச்சி நிலையங்களையும் நிறுவுதல், தொழிலியல் கண் காட்சிகளை அமைத்தல், மாணவர்களை அயல்நாடுகளுக் கனுப்புதல், அயல்நாட்டு நிபுணர்களைத் தருவித்தல் ஆகிய அம்சங்களையுடைய கொள்கையை மேற்கொண்ட ஆப்கானிஸ்தான், இன்றைக்கு, 19-ஆம் நூற்றுண்டில் 32 ஆண்டுகளில் ஜப்பான் மேற்கொண்ட நடவடிக்கை களை நினைப்பூட்டுகின்றது.

ஆக்க வேலைகளில் ஆப்கானிஸ்தான் அடைந்த வெற்றியானது 19ஆம் நூற்றுண்டில் ஜப்பானியர்கள் வெற்றியுடன் ஒப்பிடப்படுவது அல்ல. அதற்குத் தவிர்க்க முடியாத சில காரணங்கள் உள்ளன. 1929-ஆம் வருடத்து பாகிஸ்தானைவிட 1868-ஆம் வருடத்து ஜப்பான் பொருளாதாரத் துறையில் அதிகப் பிடிமானத் தோடு விளங்கியது. ஒரே மொழியும் ஒரே தன்மையு முடைய ஜப்பான் மனஉறுதி, ஒற்றுமை இவற்றுடன் விளங்கிற்று; பலமொழிகளையுடைய ஆப்கானிஸ்தான் அத்தகைய ஒற்றுமையில் திகழமுடியவில்லை. பஷ்தான்

கள், தாஜிக்குகள், ஹஜாராக்கள் தத்தம் நலனுக்காக ஒருவர்க்கொருவர் மோதிக் கொண்டனர்; இந்த மோதல் சில சமயங்களில் பகிரங்கமாகவும் ஏற்பட்டன. ஜப்பானில் பூர்வீகமான வர்த்தகக் குடும்பங்கள் ஏராளமாக உண்டு. அவர்கள் பத்தாண்டுக் கணக்கில்—ஏன் நூற்றாண்டுக் கணக்கில்—வரவு செலவுக் கணக்குகளிலும் வர்த்தகத்திலும் அமர்த்தப்பட்டு வருகின்றனர். நவீனத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள ஜப்பானிய அரசாங்கத்திற்கு அவர்களுடைய உழைப்பு எப்பொழுதும் தயாராக உள்ளது. இதேபோன்றதொரு சாதனையை ஆப்கானிய ஹிந்துக்கள் செய்து காட்டியிருக்க முடியும்; இப்படிச் செய்வதெனில் அவர்கள், உணர்ச்சிததும்ப, நாட்டிலிருந்து பிரிக்க முடியாத அங்கமாக, இலட்சிய நோக்குடன் விளங்கியிருக்க வேண்டும். அப்போதைய நிலை அப்படி இல்லையாதலால், 1929லிருந்தே ஆப்கானியப் பொருளாதாரத் தேசீயம், அங்குள்ள அயல் நாட்டு வியாபாரிகளிடம் எப்படிப் பாதகமாக இருந்ததோ அப்படியே இந்தச் சிறுபான்மை வகுப்பினர்மீதும் பாதகமாகத் திரும்பியது. இதன் விளைவாக நாட்டுப் புறத்தில் இவர்கள் குவித்து வந்த வர்த்தக நிதியும் வட்டிக்குக் கொடுக்கும் வணிக லாபங்களும் இன்னும் சிறிய குக்கிராமங்களை நோக்கி அகன்றன; நாட்டை விட்டு வெளியேறின வெனினும், ஆம்...அவர்களுக்குப் பதிலாக மற்றவர் எவரையும் வைக்கமுடியாதபடி, பிரத்தியேக நிபுணத்துவம் உடையவர்களாக யிருந்ததால், இந்தச் சிறுபான்மையரை தொழில் வர்த்தக முறைமையில் முக்கிய ஸ்தானங்களிலிருந்து தள்ளி விடுகின்ற கொள்கையானது, 1929ஆம் ஆண்டிலிருந்து சுமார் 20 வருடங்கள் வரை ஆப்கானிஸ்தானின் முன்னேற்றத்திற்கு ஓரளவு, தடையாயிருந்திருக்குமென்று நினைக்க இடமுண்டு. 1882க்குப் பின் ஜப்பானில் நடைபெற்றதைப் போன்று

ஆப்கானிஸ்தான் அரசாங்கம், ஒருமுறை, அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் பலவற்றை தனியார் தொழிலதிபர்கள் வசம்விட்டுவிடும் கொள்கையை மேற்கொண்டது. ஆனால் இந்தக் கொள்கையானது, அந்தத் தனியார் நிறுவனங்களிடம் போதிய அளவு முதலீடு இன்மையாலும், அவர்களது நிர்வாகத் திறமைக் குறைவினாலும், வெற்றியடையாது போயிற்று. ஆப்கானிய அரசாங்கம், தனியார் நிறுவனங்களுடன் போதிய அளவு முயன்ற பின்னர், இறுதியாக, 1953ல், பொருளாதாரத் துறையில், பொதுஜனத்தை உறுதிப்படுத்தும் கொள்கையைக் கைக்கொண்டது.

ஆப்கானிஸ்தானின் வெற்றி பூரணமாகாததற்கு வேறு காரணங்களும் உண்டு. அதன் முன்னேற்ற முயற்சிக்கு எதிரான சூழ்நிலை அடிக்கடி உண்டாயிற்று. பாச்சா-இ-சாக்கோவின் குறுகிய ஆட்சியில் ஒடுக்கப்பட்ட தொலைபேசி இணைப்புகள், சாலைகள், பள்ளிக்கூடங்கள், நிர்வாக அலுவலகங்கள் தொழிலியல் இயந்திர சாதனங்கள் இவைகளையெல்லாம் திரும்பவும் கொண்டு வருவதற்கு வருடக் கணக்காயிற்று. உதாரணமாக, 1928ல் 300 எண்ணிக்கையுள்ள பள்ளிக்கூடங்கள் 1932ல் 22 எண்ணிக்கையாக ஆயிற்று; மாணவர்களின் எண்ணிக்கை 50,000திலிருந்து 1,300க்கு இறங்கியது. 1928-ஆம் வருடத்திய மட்டத்தை மீண்டும் அடைய ஆப்கானிஸ்தானுக்கு 7 ஆண்டு ஆயிற்று. அரசாங்கத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக உண்டான மங்கல் கூட்டத்தாரின் கோஸ்ட் கிளர்ச்சியையும், 1959-ஆம் வருடத்திய கடுமையான குவந்தகார்க் கலகங்களையும் அடக்கியது. ஆப்கானிஸ்தானின் சமூகப் பிரதிபலிப்புச் சக்திகளின் மேற்கொண்ட இறுதி வெற்றியைக் குறிப்பதாகும்.

இரண்டாவது உலகப் போரின் விளைவான சூழ்நிலை, இரண்டாவது முறையாக, ஆப்கானிஸ்தானின் முன்னேற்ற ஈடுபாடுகளுக்குத் தடையாக நின்றது. பெரிய வீழ்ச்சிக்குப்பின், ஆப்கானிஸ்தான் தனது சக்தியையெல்லாம் ஒன்ருக்கி அயல் நாட்டு வர்த்தகத்தில் திருப்பிக் கொண்டிருந்த சமயத்தில்தான் இந்தத் தடை ஏற்பட்டது. ஆனுல் ஆப்கானிஸ்தான், தனது வர்த்தகப் போக்கை, ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் இவற்றுடன் விரைவாக அதிகரித்துக் கொண்டு சென்றது. ஆனுல் திடீரென்று அந்த நாடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு விட்டது. போர்க்காலப் போக்குவரவுத் தொல்லைகள் நிமித்தம் வளர்ச்சியடைந்து வந்த ஏற்றுமதித்திறன் விழுந்து விட்டது. ஒப்பந்த நாடுகளின் பயமுறுத்தலால், சுமார் நூறு ஜெர்மானிய, இத்தாலிய தொழிலாளிகளைத் துண்டிக்க நேர்ந்தது. ஆதலால், அறைகுறையாக இருந்த பெருந்திட்டங்கள் பல கைவிடப்பட்டன. மற்றவை, தக்க இயந்திரச் சாமான்கள் இன்மையாலும் பராமரிப்பின்மையாலும், சேதமடைந்தன. இவ்விதமாக துவக்கத்தில் உள்ள ஆக்க வேகம் பின்பு சிதைவுற்றது.

இவ்விதமாகவே, 1947க்குப்பின் பாக்கிஸ்தான் வழியாக உள்ள பாதைகள் அடிக்கடி அடைப்பட்ட கொடுமை ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தைச் சேதப்படுத்தாமலில்லை.

தொல்லைகளுக்கிடையே, குறைபாடுகளுக் கெதிராக, ஆப்கானிஸ்தான் அடைந்த முன்னேற்றம் குறிப்பிடத் தக்கதே. அதன் முதலாவது திட்டதின் கீழ், (1956—61) நாட்டின் வருமானம் வருடத்திற்கு 8.1 சதவீதம் அதிகரித்தது. அதாவது, முதலீட்டு முறைப்படி (Per capital) வருஷத்திற்கு 6.5 சதவிகிதம்.

முதலாவது திட்டத்தின்கீழ் செலவிடப்பட்ட சரியான தொகை 16,60. மில்லியன் ஆப்கானிஸ் (ஒரு டாலர்—45 ஆப்கானிஸ்) இரண்டாவது திட்டத்தின் படி மொத்தச் செலவு 44,500 மில்லியின் ஆப்கானிஸ் (மூல வரவுக்கிணங்க) இரண்டாம் திட்டத்தில் முதலீட்டு முறையில் தேச வருமானம் ஆண்டுக்கு 4.6 சதவீதம் உயர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வருடாந்திர முதலீடு, சராசரி வருமானத்தில் 18 சதவீதத்திற்கு உயர்ந்திருந்தது. இந்த உயர்ந்த விகிதம், சாத்தியமென்று கருதப்பட்டது. ஏனெனில், அன்றுட முதலீட்டுச் செலவில் 70 சதவீதத்திற்கு மேல் அந்நிய உதவியால் தாங்கப்பட்டுவந்தது.

கடந்த 35 ஆண்டுகளில், ஆப்கானிஸ்தான் தனது பொருளாதார நடவடிக்கைகளைப் பல திக்குகளிலும் மேற்கொண்டது. 1929ல் ஆப்கானிஸ்தானின் மொத்தப் பண்பட்ட நிலப்பரப்பு ஒரு மில்லியன் ஹெக்டாருக்கும் குறைந்தது என்று ரஷ்ய விஞ்ஞானிகளால் (வாரிலோ, புக்கினிச்) மதிப்பிடப்பட்டது; இப்பொழுது 7.8 மில்லியன் ஹெக்டார்ஸ் (Hectars) என்று அதிகாரப்பூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது. பாசனத்திற்குட்பட்ட பகுதி நிலங்கள் 1929க்கு முன் 50 சதவிகிதத்திற்குக் குறைவான நிலையிலிருந்து, தற்போது 65 சதவிகிதத்திற்கும் அதிகாரித்து உள்ளது. தானிய உற்பத்தியும் அதே நேரத்தில் அதிகரித்தது. 1936—37ல் 8,000 டன் உற்பத்தியான பருத்தி தற்போது 60,000 டன்னுக்கு மேல் உற்பத்தியாகிறது. கரும்புப் பயிர்த்தொழிலின் மதிப்பீடு 1940ல் 160 ஹெக்டாரிஸ்; 1961ல் அதன் மதிப்பீடு 1800 ஹெக்டாரிஸுக்கு உயர்ந்தது. நீண்ட த்க்கைப் பருத்தி, உயர்தர வர்ஜீனியா புகையிலை போன்ற சில பொருள்கள் பொருளாதார நலனுக்கு உறுதியாக்கப்பட்டன. எப்

படியும், மொத்தத்தில், ஆப்கானிஸ்தானின் பயிர்த் தொழில், என்றும் பெருகும். உணவுத் தேவைக்கும் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களின் தேவைக்கும் ஈடாக முன்னேறத் தவறியது—முன்னேறும் நிலையிலுள்ள எந்த நாட்டிலும் இந்தச் சூழ்நிலைதான் நிலவும்.

தொழில் துறையில் அதிகக் கணிசமான முன்னேற்றம் எய்தப்பட்டது. பருத்தித் துணிகள் சர்க்கரை, சோப்பு, சைஞுப் பாத்திரங்கள், நெருப்புப் பெட்டிகள், கம்பளித்துணிகள் போன்ற உற்பத்திப் பொருள்கள் யாவுமே கடந்த 35 ஆண்டுகளில்தான் ஆப்கானிஸ்தானில் கொண்டு வரப்பட்டன. அவற்றுள், பருத்தி நெசவுத் தொழில், குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றமுற்றுவிட்டது. நிலக்கரி உற்பத்தி 1941—42ல் 1,000 டன்; 1960-61ல் 55,000டன் ஆகும். இரண்டாவது திட்டத்தின்படி 1965—66ன் இலக்கு 170,000 டன் மின்சார உற்பத்தி 1929 லிருந்து 1961 வரை 15 மடங்கு அதிகரித்தது. 1962ல் மின்சாரப் பெருக்கு 170 மில்லியன் கிலோவாட் ஹவர்ஸ் இரண்டாவது திட்டத்தின்படி, இதனை 1966ல் 996 மில்லியன் கி. வ. ஹ. வுக்கு அதிகரிக்க வேண்டுமென்பது நோக்கம்; முதலீட்டு முறையில் இந்த உற்பத்தி 66 கி. வா. ஹ. ஆகும். 50.000த்திலிருந்து 60,000 டன் வரை கொள்ளும். பெட்ரோலியம் ரிபைனரி ஒன்றும் இரசாயன உரஉற்பத்தி சாலைகள் இரண்டும் கட்டுமானத்திலுள்ளன. சாலைப் போக்கு வரத்து புரட்சிக்குட்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்தின் தலையான நோக்கங்களாவன:—

(1) விவசாய உற்பத்தியையும் உற்பத்தி சக்தியையும் உயர்த்தி, ஜன சமுதாயத்தை போஷிப்பதும் வளர்ப்

பதும், தொழிலுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் மூலப் பொருள்களை வழங்குவதும்.

(2) ஆதாரத் தொழில் துறையை நிறுவுதலும் (பெட்ரோலியம், வாயு, இரசாயனப்பொருள்கள் முதலி யன தொழிலையும் சக்தியையும் விரிவாக்குதலும்.

(3) சமூக சேவையை (சிறப்பாக, கல்வி தொழிற் கலைப் பயிற்சி முதலியன) விரிவாக்குதல்.

*　　　*　　　*

தொழில் துறைக்குமாருக, விவசாயத்துறை ஓரளவு பின் வாங்கி நின்றுவிட்டது. இதன் முக்கிய காரணம், எவ்வித நிலச்சீர்திருத்தமு மின்மையே. நிலச் சொந்தக் காரர்கள் அரசாங்க அலுவலர்கள், வியாபாரிகள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியவர்கள் 70 சதவீதத்திற்குக் குறையாமல் பாசன நிலம் உடையவர்கள். வட ஆப்கானி ஸ்தானில் பல மாவட்டங்களில் குடியானவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுக்கு நிலமே கிடையாது. அவர்களில் 20லிருந்து 25 சதவீதத் தினருக்குக் கொஞ்ச நிலமுண்டு; (அதை வைத்துப் பிழைக்க முடியாத அளவு) தெற்கு மாநிலங்களில் பயிரேறிய நிலங்களை ஜன நெருக் கம் பாதிப்பதால், நிலைமை இன்னும் அதிக மோசமா யுள் ளது பெரிய நில்ச்சுவான்கள் நகரங்களில் வசிக்கின்றனர். பெரும்பாலான பிடிமானங்கள் நன்செய் நிலம் 2 ஹெக் டாரிஸ் அளவிலும் புன்செய் நிலம் 3 ஹெக்டாரிஸ் அளவி லும் உள்ளன. இரண்டும் சிக்கனமில்லாதவையே. நிலச் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்ட பின்னர்தான் விவசாயம் அபிவிருத்தியடையும் என்று எனது ஆப்கானிய நண்பர்கள் சிலர் சொன்னார்கள். நிலச் சீர்திருத்தங்கள் அரசினரின் கவனத்திலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவ்விதமாக ஆப்கானிஸ்தான் முன்னேக்கி நடைபோடுகிறது. பாலைவனத்திலுள்ள சிற்சில சோலைகளில் துவங்கிய பொருளாதாரம் (1929), முன்னேறி, இப்பொழுது, ஆப்கானிஸ்தான் தனது தூரப் பிரதேசங்களையும் இணைக்கும் போக்குவரத்துச் சாதனங்களைக் கொண்டு இயங்குகிறது. போக்குவரத்து இன்மையால், தனியார் முதல் (அயல் நாட்டு முதல் அல்லது உள் நாட்டு முதல்) எண்ணெய் நிலக்கரி முதலியவற்றைக் கண்டுபிடிப்பதற்கு முன்வரவில்லை. பாதைகளில்லாமையால் போக்குவரத்து வளர்ச்சி யெய்தவில்லை, நிலக்கரி இன்மையால் சிமிட்டித் தொழிற்சாலை பற்றிப் பேச்சில்லை. இப்பொழுது அரசாங்கம், பல இடங்களிலும் ஏக காலத்தில், உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, இந்தக் கெட்ட கீழ் நிலையைத் தகர்த்தெறிய முன் வந்துள்ளது. போக்குவரத்துக்கள், சுரங்கங்கள், சக்தி, விவசாயம், உற்பத்தித் தொழிற்சாலைகள், ஆகியவை ஒன்ருக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஆதலால், தேவைகளை ஒன்றிற்கொன்று பரிமாறிக்கொள்ள முடிகிறது.

ஆப்கானிய நிலைமையில், தனியார் சட்டங்களைவிட அரசாங்கம் வர்த்தகத்திலும் தொழிலிலும், அதிசத்திறமையுடன் நிர்வாகம் வகிக்க முடியும். வர்த்தக வகுப்பினர்களுக்கு பணவசதிகளும் வியாபார வசதிகளும் உண்டு. என்ருலும் வியாபாரத்திலிருந்து தொழிலுக்கு மாறிய மாற்றம் மெதுவாகவே நடைபெற்றது. ஆதலினல், பொருளாதாரத்துறை ஒவ்வொன்றிலும், அரங்சாங்கப் பொருட்களைப் பெரும் அளவில் பயன்படுத்துவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சமாகிவிட்டது. இன்றைய ஆப்கானிஸ்தானில் தொழில், அந்நிய வர்த்தகம், போக்குவரத்து முதலிய துறைகளில் பொது ஜன ஸ்தாபனங்களே முக்கி

யத்துவம் வகித்தன. இந்த சக்தியானது, பெரிய வர்த்தக நிறுனங்களை அரசாங்கமே அமைப்பதின் மூலம்,விவசாயத் துறையிலும் இயங்கத்துவங்குமென்று தோன்றுகின்றது. இந்தப் போக்கு நாட்டின் முதலாளித்துவமாக உறுதியடைவதற்கு, ரஷ்யாவின் பொருளாதார, அரசியல் உறவு முறைமைகள் ஏதுவாக இருந்தன.

மேலைத்தரத்தில், ஆப்கானிஸ்தான் அதிகமாக சாதனைகள் அடையவில்லை எனலாம். ஆனல் தொல்லைகள் யாவும் தொலைந்துவிட்டன. தகுதி வாய்ந்த மேலாளர்களையும் திறமை மிக்க தொழிலாளர்களையும் கொண்ட பக்குவமான குழுஒன்று உருவாக்கப்பட்டது; சிறிய ஆனல் வளர்கின்ற கோஷ்டி ஒன்று பயிற்சி பெற்றது. சமூகப் புனரமைப்பின் பொருட்டு, எல்லாவற்றிற்கும் மேலாக, நவீன விஞ்ஞானமும் கல்வியும் புகுத்தப்பட்டன. அரசாங்கத்தின் முயற்சியும் ஈடுபாடு மில்லாவிடில் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்காது. அரசாங்கம் 1966க்குப் பின்னும் வர்த்தகத் துறையை நேரில் கவனித்தாலொழிய இந்த வளர்ச்சி நீடிக்காது. எனினும், அபிவிருத்திக் காலம் முழுவதிலும் பொருளாதாரத் துறையைத் தானே கவனித்து செழிப்பின் சிகரத்தை அடைந்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உறுதிகொண்டுள்ளது.

**AFGHANISTAN** by **AMALENDU GUHA**, M.A., Ph.D.

நம் அண்டை நாடான ஆப்கானிஸ்தானத்தின் பல்வேறு பகுதிகளின் இயற்கை அமைப்பு, வளம், அங்கு வாழும் பலதரப்பட்ட இன மக்களின் வாழ்க்கை முறை, சமயம், அரசியல், தொழில் முன்னேற்றம், சமூகப் புரட்சி, மக்கள் கடைப்பிடித்தொழுகும் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றிய அனைத்துச் செய்திகளையும் எளிய இனிய நடையில் சரித்திரப் பின்னணியோடு முழுமையாகச் சித்தரித்துக் காட்டும் அரிய சமூக இயல் நூல். ஆசிரியர் தமது அரிய அனுபவங்களைச் சுவைபட விளக்கியுள்ளார் இந்நூலில்.

இந்நூலாசிரியர்.........

டாக்டர் அமலேந்து குஹா அஸ்ஸாமிலுள்ள தரங் கல்லூரியில் பொருளாதாரத் துறைத் தலைவராகப் பணியாற்றி வருபவர். இவர் இந்தியாவெங்கும் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்திருப்பது போன்றே சோவியத் நாடு, போலந்து, ஆப்கானிஸ்தானம், லெபனன், பிரிட்டன், இத்தாலி, கிழக்கு ஜெர்மனி ஆகியவற்றிலும் பயணம் செய்துள்ளார். அஸ்ஸாமி, வங்காளி மொழிகளில் எழுத்தாளராகவும் கவிஞராகவும் விளங்கும் அவர் இம்மொழிகளில் நூல்கள் பலவும் எழுதியுள்ளார்.

குயிலன் பதிப்பகம்

பாண்டி பஜார் :: சென்னை-17

Wrapper Printed at Sremati Printers, Madras-2